## B. A. HISTORY

## SEMESTER - III

## NON MAJOR ELECTIVE COURSE (NMEC) - I

## WOMEN'S STUDIES

**Objectives:**

1. To know more about the rights of the women in the modern world
2. To know about the problems of women's in society
3. To evaluate the women's contribution to our society

**UNIT-I**

Genesis and growth of Women's studies - Nature and Scope of Women's Studies in India – Women's Movement in India - Pre-Independent and Post-Independent Periods.

**UNIT-II**

Definition of Feminism – Theories of Feminism – Liberal Feminism – Marxist Feminism – Radical Feminism – Social Feminism

**UNIT-III**

Women and Society – Social construction of gender – Patriarchy and Matriliny. Women in Indian Society – Early, Medieval and Modern periods. Women related social problems and legal remedies

1. Female infanticide
2. Child Marriage
3. Dowry
4. Divorce
5. Widowhood
6. Sati
7. Kidnap, Rape and Prostitution
8. Unwed Mothers / Single women
9. Problems of working women on Organized and Unorganized sectors
10. Role conflict or dual role





**UNIT-IV**

Role of women in freedom Movement. Contribution of women to Social, Economic, Education, C
Political Arenas – Women Social reformers, Women Politicians, Women Entrepreneurs and Execu

**UNIT-V**

Developmental Progammes for Women in Present day India – National and State Policies on W
development. Women's Education through Plans – Health, Population and Employment Programmes – Portrayal of Women in Mass Media – Print Media, T.V. and Radio – Use and Abuse of Development

Namakkal kavingar Ramaligam Government
Arts college for women - Namakkal

Department : HISTORY

Name : BHARATHI . D

Subject : Women's Studies.

# 1. பெண்ணியல் கல்வி

## (WOMEN'S STUDIES)

இருபதாம் நூற்றாண்டில் சமுதாயத்தின் ஒரு அங்கமாகத் திகழும் பெண்கள் பற்றியும் அவர்தம் பிரச்சினைகள் பற்றியும் சிந்திக்கத் ஆரம் பித்த போது பெண்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டது இவ்வாறு பெண்களின் நலன் பற்றிய சிந்தனைகள் பெண்ணியச் சிந்தனைகள் எனப்பட்டன. பெண்களுக்கான ஆக்க பூர்வமான செயல்பாடுகள் உருவாகிய போது பெண்ணியம் மலர்ந்தது. இதன் விளைவாக 'பெண்ணியல் கல்வி' என்ற ஒன்றை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர். அமெரிக்காவைச் சார்ந்த மேரி ரிட்டர் பேர்ட் என்பவர் தான் 'பெண்ணியல் கல்வி' என்ற புதிய கருத்தாக்கத்தை உருவாக்கினார். தற்போது பெண்ணியல் கல்வி என்பது உலகம் முழுவதிலும் பரவிவரும் முக்கிய கல்வித்துறையாக உள்ளது.

## பெண்ணியல் கல்வியின் தோற்றம் :

வரலாற்றில் பெண் சாதனையாளர்களின் பங்கு மறைக்கப் பட்டுள்ளது. வரலாற்றை உருவாக்குபவர்களும், வரலாற்றில் மாற்றம் கொண்டு வருபவர்களும் ஆண்களே என்ற அடிப்படையிலேயே வரலாறு எழுதப்பட்டு வருகிறது. சமூக வாழ்வியலில் பெண்கள் இரண்டாம் தரக் குடிகளாகவும், ஆண் சார்பு உடையவர்களாகவும், தனித்து இயங்க இயலாதவர்களாகவுமே காட்டப்பட்டுள்ளனர். இலக்கியத்தில் பெண்கள் வர்ணனைக்குரியவளாகவும், அழகியாகவும், நுகர்வுப் பொருளாகவும், வாழ்க்கைத் துணையாகவும் என்று ஒரே கோணத்திலேயே படைக்கப் பட்டிருக்கிறாள். உளவியல்,பெண்களை பலவீனமானவர்களாகவும், உடல் மற்றும் மனத்திடம் அற்றவர் களாகவும் காட்டியது.

இவ்வாறு பெண்கள் ஒட்டு மொத்தமாக அனைத்துக் துறை களிலும் புறக்கணிக்கப்பட்டதற்கான காரணங்களை பெண் கல்வி யாளர்கள் ஆராய முற்பட்டனர். மேலும் பல்கலைக்கழகங்களில் ஆண் களை மையமிட்ட அடிப்படையிலேயே பாடத்திட்டங்கள் அமைந்-திருப்பது குறித்தும் வாதங்கள் வலுப்பட்டன. இதன் விளைவாகவே பெண்ணியல் கல்வி தோன்றியது.

## அமெரிக்காவில் பெண்ணியல் கல்வி :

பெண்ணியல் கல்வியானது அமெரிக்காவில் தோற்றம் பெற்று, இன்று உலகம் முழுவதிலும் பரவிவரும் கல்வித்துறையாகும். இது உலக

அளவில் பெண்களால், பெண்களை மையப்படுத்தி அனைத்துத் களையும், ஆர்வமும் கொண்டுள்ளது. ஆண் மைய வாதத்தில் அ அனைத்தையும், பெண் மைய வாதப்போக்கில் மறு ஆய் உட்படுத்து கிறது. அதாவது 'ஆண் மையக் கல்வி முறையை உருமா வதே பெண்ணியல் கல்வி' என்று விளக்கம் அளித்துள்ளார் டே ஸ்பெண்டர் (Dale Spender) என்ற அம்மையார்.

அமெரிக்காவைச் சேர்ந்த மேரி ரிட்டர் பேர்ட் என்பவர் 1974 'பெண்ணியல் கல்வி' என்ற ஒரு புதிய கருத்தாக்கத்தை உருவாக்கின இவர் அரசியல் மற்றும் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண் 'பெண்ணியல் கல்வி' பாடத் திட்டத்தை உருவாக்கினார். இது பின்வரு நான்கு பிரிவுகளைக் கொண்டதாக இருந்தது. அவை:

a) அமெரிக்கப் பெண்களின் மதிப்பு பற்றிய உண் நிலையைக் கண்டறிதல்.

b) பெண்ணியக் கோட்பாடுகளை ஆய்வு செய்தல்.

c) தேசிய அளவில் அக்கோட்பாடுகள் ஏற்படுத்திய பாதிப் அறிதல்.

d) பெண்களுக்கான மரபு வழிப்பட்ட கருத்தாக்கங்களி தாக்கங் களைக் கண்டறிதல் ஆகியவையாகும்.

இந்தப் பாடத்திட்டத்தின் தலைப்பு, 'அரசியல் பொருளாத மாற்றமும் அதன் அடிப்படையிலான பெண்களின் பாதிப்பும்' ( Changing Political Economic as it affects Women) என்பதாகும். இந் பாடத்திட்டத்தை அமெரிக்கப் பல்கலைக் கழக பெண்களின் கூட் மைப்புச் சார்பாக வெளியிட்டார். இந்தப் பாடத்திட்டம் நடைமுறைக் வரா விட்டாலும், பெண்ணியல் கல்விக்கு ஒரு அடிப்படையா அமைந்தது.

## பெண்ணியலைப் பற்றிய தனித்துறை உருவாகுதல்:

பெண்ணியல் கல்வியாளர்கள் பெண்களின் சாதனைகளும் அனுபவங்களும் பாட நூல்களில் இடம் பெற வேண்டும் என்றும் பழங்காலப் பெண்களின் வரலாறு, பண்பாடு போன்றவற்றை வெளிப் படுத்தும் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர். அதனை உடனடியாக ஏற்றுக் கொண்ட பல்கலைக் கழகங்கள் அதற்குச் சாத்கமாகச் செயல்பட்டன.

பெண்களும் வரலாறும், பெண்களும் இலக்கியமும், பெண்களும் சமூகவியலும், பெண்களும் மானுடவியலும் போன்றவை ... செய்திகளை அந்தந்த பாடத்



திட்டத்தில் இணைத்தனர். இவ்வாறு குறுகிய காலத்தில் 'பெண்கள் இயல்' பற்றிய தனித்துறை உருவாக்கப்பட்டது. இந்தப் பாடத்திட்டம் இளங்கலை மற்றும் முதுகலை அளவில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1969-ல் இந்தத் துறையில் பதினாறு வேறுபட்ட பயிற்சி முறைகள் தொடங்கப்பட்டன. இது வளர்ச்சி அடைந்து தற்போது முப்பதாயிரத் துக்கும் மேற்பட்ட வெவ்வேறு பயிற்சி முறைகள் தொடங்கப் பட்டுள்ளன. பெண்கள் இயல் கல்வியை வளர்ச்சியடையச் செய் வதையே நோக்கமாகக் கொண்ட 'தேசிய பெண்கள் இயல் கல்விக் கழகம்' (National Women's Studies Association) ஒன்று 1977-ல் ஆரம்பிக்கப் பட்டது. இவ்வாறு அமெரிக்காவில் பெண்ணியலைப் பற்றிய தனித் துறை உருவானது.

## அமெரிக்காவில் பெண்ணியல் கல்வியின் வளர்ச்சி

1970ம் ஆண்டிலிருந்து அமெரிக்காவில் பெண்ணியல் கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. 1983-ல் சார்லட் பஞ்ச் (Charlotte Bunch), சான்ரோ போலக் (Sandro Pollack) ஆகியோர் பெண்ணியல் கல்வியை ஒன்றுக்கொன்று தொடர்புடைய மூன்று பிரிவு களாக அடையாளம் காட்டினர். அவை,

a) நடைமுறையில் உள்ள பண்பாட்டில் பெண்கள் எப்படி வாழ வேண்டும் என்ற வழிமுறையைக் கற்றுக் கொடுத்தல்.

b) பெண்ணியக் கொள்கைகளை எடுத்துரைப்பதன் மூலம் பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

c) பெண்களின் முன்னேற்றத்திற்காக அவர்களின் சொந்தக் கருத்து, கலை, கொள்கை, ஆராய்ச்சி போன்றவற்றை ஊக்குவித்தல் ஆகியவையாகும்.

இதற்குப் பின் வந்த ஆண்டுகளில் அமெரிக்காவில் பெண்ணியல் கல்வியில் கறுப்பர் இனப் பெண்கள் பற்றிய ஆய்வும், பெண்கள் ஓரினச் சேர்க்கையாளர் பற்றிய ஆய்வும் முக்கியத்துவம் பெற்றன.

## பெண்ணியல் கல்வியின் பாடத்திட்டம்

கேதரின் ஸ்டிம்ப்சன் (Cahterine Stimpson) என்பவர் பெண்ணியல் கல்வியின் நோக்கங்கள் பற்றி வரையறை செய்துள்ளார். நடை முறையைச் சீர்திருத்துதல், பெண்கள் பற்றி சமுதாயத்தில் நிலவிவரும் தவறான கருத்துக் களையும், வாதங்களையும் நீக்குதல், பெண்கள் பற்றிய புதிய கருத்துக்களையும் கொள்கைகளையும் வடிவமைத்தல் ஆகியவை யாகும். இந்த நோக்கங்களின் அடிப்படையிலேயே பெண்ணியல் கல்வி பாடத்திட்டம் உருவாக்கப்பட்டது.

பெண்ணியல் கல்வியின் பாடத்திட்டம் 'சமஉரிமை என்ற தத்துவத்தை' (Equal Rights Philosophy) அடிப்படையாகக் கொண்ட தாகும். இதன் அடிப்படையில் அந்தப் பாடத்திட்டத்தில் தனிப்பட்ட பெண்களின் வரலாறு மற்றும் அனுபவம், பெண் சமூகத்தின் பழைய வரலாறு, காலம் காலமாக இருந்து வரும் பாலியல் அடிப்படையிலான வேறுபாடுகள் முதலானவை இனம் காட்டப்படுகின்றன. இந்தக் கல்வியின் பாடத்திட்டம் பெண்கள் அனுபவத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவையாகும். மனித அனுபவத்தைப் புரியவைப் பதிலும், விளக்குவதிலும் இந்த புதிய முறை முனைப்புடையதாக விளங்குகிறது. அதற்கேற்ப செயல்முறைக் கல்வியை (Action Oriented) அடிப்படையாக இணைத்துக் கொண்டுள்ளது.

பெண்ணியல் துறையில் ஆய்வுப் போக்கும் வளர்ச்சி பெற்றுள்ளது. பெரும்பான்மையான ஆய்வுத் துறைகள் வளர்ச்சி அடைந்துள்ளன. பெண்ணியல் ஆய்வுக்கு பெண்களே ஆதாரங்களாக உள்ளனர். அவர்களின் தனிப்பட்ட மற்றும் கூட்டு அனுபவம் இந்த ஆய்வுகளின் முடிவுகளாக அமைகின்றன. பெண்களிடையே தகவல்களைத் திரட்டுவது என்பது மிகவும் சிரமமான செயலாகும். இதற்கு அதிகமான முயற்சியும் உழைப்பும் தேவை. இதைப் பற்றி அமெரிக்காவைச் சேர்ந்த பெண்ணியல் கல்வியின் முன்னோடியான பிளாரன்ஸ்ஹவ் (Florance Howe) என்ற பெண்ணியவாதி கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

'பெண்களின் பிரச்சனைகளைப் பற்றி சிந்திப்பவர்களும், அது பற்றி ஆய்வு செய்பவர்களும் எந்த அறிவுத் துறையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், பெண்கள் பற்றிய செய்திகள், கருத்துக்கள் அவர்களுக்கே உரிய தனித்த பிரச்சனைகள் பற்றிய தகவல்களைப் பெறுவது என்பது ஒரு ஆராய்ச்சிப் பட்டத்தைப் பெறுவதற்குச் சமமாகும்' என்று கூறுகிறார். பெரும் முயற்சியுடன் செய்யப்படும் இந்த ஆய்வுகள் பெண்களின் அன்றாட வாழ்க்கையை மேம்படுத்தவும் மாற்றியமைக்கவும் துணை நிற்கின்றன.

1969-ல் பெண்ணியல் கல்விக்கான தனிப்பட்ட பாட வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டதும், கார்னல் பல்கலைக் கழகத்திலும், சான்டீகோ (San Diego) பல்கலைக் கழகங்களில் பெண்ணியல் கல்வித் திட்டங்கள் செயல் படுத்தப்பட்ட பிறகு பெண்ணியல் கல்வித்துறை வேகமான வளர்ச்சி பெற்றது. 1981-ம் ஆண்டு வரை அமெரிக்காவில் 20,000 தனிப்பட்ட பாடப் பிரிவுகளும், 350 பெண்ணியல் கல்வித் திட்டங்களும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. புகழ் பெற்ற பிரின்ஸ்டன், பெர்க்லி மற்றும் சான் போர்ட் பல்கலைக்கழகங்கள் பெண்ணியல் கல்விக்கு முக்கியத் துவம் அளித்துள்ளன. 1981-ல் மிச்சிஹென் (Michigen) பல்கலைக்



கழகத்தில் பெண்ணியல் கல்விக் கான தேசிய நிறுவனம் (National Institute in Women's Studies) அமைக்கப்பட்டது. Signs, Feminist Studies, Frontiers Women's Studies மற்றும் (Quest) போன்ற அமெரிக்க இதழ்களும் பெண்ணியல் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றன.

## இங்கிலாந்தில் பெண்ணியல் கல்வி

அமெரிக்காவில் பெண்ணியல் கல்வி பற்றிய சிந்தனையும், செயல்பாடும் முன்னேறியது போல இங்கிலாந்தில் உடனடியாகத் தீவிரமடைய வில்லை. பெண்ணியல் கல்வியும் அதன் வழி வந்த ஆய்வுகளும் மரபு வழி வந்த இங்கிலாந்துப் பல்கலைக் கழகத்தினரை கலங்க வைத்தன. இந்தக் கல்வி முறை இங்கிலாந்துப் பெண்களிடையே ஒரு மருட்சியை ஏற்படுத்தியது.

இருந்தபோதிலும் அந்த நாட்டுப் பெண் கல்வியாளர்களின் இடை விடாத முயற்சியால் முதன் முதலாக 1980-ல் கென்ட் பல்கலைக் கழகம் (Kent University) பெண்ணியல் கல்வியை முதுகலைப் பிரிவில் அறிமுகப் படுத்தியது. அதன் பின் 1982-ல் பிராட்போர்டிலும் (Bradford). அறிமுகப்படுத்தியது. அதன்பின் 1982-ல் பிராட்போர்டிலும் 1983-ல் ஷெப்பீல்ட் தொழிற்பயிற்சிக் கல்லூரியிலும் (Sheffield Polytechnic) பெண்ணியல் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் இன்றுவரை இளங்கலை நிலையில் பெண்ணியல் கல்வி கற்பிக்கப்பட்வில்லை.

1970-ம் வருடம் முதல் இங்கிலாந்தின் முதியோர் கல்விப் பாடத் திட்டத்தில் பெண்ணியல் கல்வி இடம் பெற்றது. 1983-ல் மத்திய லண்டன் பாலிடெக்னிக் கல்லூரியில் பெண்கள் கல்விக்கான பட்டய பாடப் பிரிவும், லண்டனில் உள்ள கோல்ட்ஸ்மித் கல்லூரியில் (Goldmith's College) பட்டயப் பாடப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. 1983-ல் திறந்த நிலை பல்கலைக் கழகத்தில் 'மாறிவரும் பெண்களின் அனுபவங்கள்' (The Changing Experience of Women) என்ற பாடப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

பெண்ணியல் கல்வியில் ஆய்வுப் பட்டங்களுக்கான விதி முறைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் பெண்ணியல் கல்வி தொடர்பான பட்டங்கள் வழங்கப்படவில்லை. பிராட்போர்ட் பல்கலைக் கழகத்தில் (Bradford University) மேல்நிலைப் பட்டதாரிப் பெண்கள் பெண்ணியம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

## இந்தியாவில் பெண்ணியல் கல்வி :

ஆசிய நாடுகளில் பெண்ணியல் கல்வி 1960-ம் ஆண்டுக்குப் பிறகே எழுச்சி பெறத் தொடங்கியது. மேற்கத்திய நாடுகளுக்கு இணை

g) பெண்களை வித்தியாசப்படுத்திப் பார்க்கின்ற கோட்பா களையும் ஆய்வுப் போக்கினையும் உடைத்தெறிந்து புதிய தத்துவ போக்கை உருவாக்குதல்.

h) எல்லாத் துறைகளிலும் பெண்ணியலை இணைத்து ஆ கேற்றார்போல் ஆய்வு முறையியல், கற்பிக்கும் முறை, பாடத்திட் விரிவாக்க செயற்பாடுகள் போன்றவற்றை உருவாக்குதல்.

i) பெண்ணிய மேம்பாட்டுக்காக களத்தில் இருக்கும் தன்னார் அமைப்புகள் மற்றும் உயர்கல்வி அமைப்புகள் ஆகியவை இணைந் செயல்பட்டு பெண்களின் பிரச்சனைகளுக்கான ஆணிவே கண்டறிதல்.

j) இலக்கிய ஆய்வு வழிப் பெண்ணியம் பற்றிய உலகளாவி விவாதத்தைத் தீவிரப்படுத்துதல் ஆகியவை பெண்ணியல் கல்விப் பாடு திட்டத்தின் நோக்கங்களாக வரையறை செய்யப்பட்டது.

## தமிழகத்தில் பெண்ணியல் கல்வி :

பெண்ணியல் கல்வியை செயல்படுத்தும் நோக்கத்தில் 1984-ல் தமிழ் நாட்டில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் தோற் விக்கப்பட்டது. தற்போது அது கொடைக்கானலில் செயல்பட்டுவரு கிறது. இங்கு பெண்ணியல் கல்வி முதுகலை நிலையில் நேரடியாகவும் அஞ்சல் வழி மூலமாகவும் கற்பிக்கப்பட்டு வருகிறது. பொருளாதாரம், சமூகவியல், கல்வி போன்ற பாடங்களில் எம்ஃபில் ஆய்வுப் பட்டம் பயிலும் மாணவியர்களுக்கு பெண்ணியல் கல்வி ஒரு பாடமாக வைக்க பட்டுள்ளது. இதில் சமூகத்தில் பெண்களின் நிலை, அவர்களின் கல்வி மருத்துவம், சுகாதாரம் போன்றவைகள் பாடமாக உள்ளன. இப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் எல்லா ஆய்வுகளும் பெண்கள் முன்னேற்றத்தையே நோக்கமாகக் கொண்டுள்ளன.

காரைக்குடியில் செயல்பட்டு வரும் அழகப்பா பல்கலைக் கழகத்தில் பெண்ணியல் கல்விக்கென்று தனியாக ஒரு துறையே உள்ளது. பெண்ணியல் முதுகலைப் பாடப்பிரிவில் பதினாறு பாடத்தாள்கள் உள்ளன. இங்குள்ள மகளிர் ஆய்வு மையத்தில் பெண்களின் பிரச்சனை கள் குறித்து ஆய்வு செய்யப்படுகிறது. இவைதவிர திருப்பதியில் 'பத்மாவதி மகளிர் வித்யாலம்' என்ற நிறுவனம் பெண்ணியலை வளர்த்து வருகிறது.

இவைதவிர ஆந்திராவில் உள்ள வால்டேர் பல்கலைக்கழகத்தில் 'பெண்ணியல் கல்வி மையம்' அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள உளவியல் முதுகலைப் பட்டப் படிப்பில் பெண்ணியம் ஒரு பாடமாக உள்ளது. ஹைதராபாத் பல்கலைக்கமகக்கில் உள்ள சமூக இயல்



துறையில் 'இந்திய அரசியலில் பெண்கள்' என்ற இரண்டு வருட பட்ட மேற்படிப்பு நடத்தப்பட்டு வருகிறது. பெனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தில் உள்ள எல்லா எம்ஃபில் ஆய்வுப் பட்டயப் படிப்பிலும் 'பெண் கல்வி' யைப் பாடமாகச் சேர்த்துள்ளனர். மனுஷி, சம்ய சக்தி போன்ற பெண்ணியல் கல்விப் பத்திரிக்கைகள் வெளிவருகின்றன.

இந்தியாவில் பெண்ணியல் கல்வி சமீப காலத்தில் தான் வளர்ச்சி பெற்றுள்ளதால் அதனைப் போதிப்பதற்கான நல்ல நூல்கள் அதிகம் இல்லை என்பது பெரிய குறையாகவே உள்ளது. பெண்ணியக் கல்வி மிக வேகமாகப் பரவாமல் போனதற்கு கற்பிக்கும் நூல்கள் இல்லாததுதான் ஒரு முக்கியக் குறையாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## பெண்ணியல் கல்வியின் பயன்கள் :

பெண்ணியல் கல்வியும் அதன் அடிப்படையிலான ஆய்வும் நல்ல பயன்களைக் கொடுத்து வருகின்றன. குறிப்பாக மேலை நாடுகளில் இந்த மாற்றம் எளிதில் அடையாளம் காணக்கூடிய அளவிலும் நடந்துள்ளது. மரபு வழிக் கல்வியினால் நிலை நிறுத்தப்பட்ட மக்களின் போக்கில் பெண்ணியல் கல்வி ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. பெண்களைப் பற்றி இருந்து வந்த சார்புக் கண்ணோட்டத்தை நீக்கி மனித நலக் கோட்பாட்டை முன்னேற வைத்துள்ளது.

எல்லாத் தரப்பு பெண்களிடமும் இருந்து வந்த மருட்சியைப் போக்கி அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் செயல்பட்டு வரு கிறது. நடைமுறையில் இருந்துவரும் ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடுகள் எந்த அளவு சரியானவை என்று சிந்திக்கத் தூண்டியுள்ளது. பெண்கள் அடிமைப்படுவதற்கு முற்றுப் புள்ளி வைக்கும் முயற்சியில் மெதுவாக வெற்றியடைந்து வருகிறது.

மேலும் பெண்ணியல் கல்வி 'ஆண் மையம்' என்பதை எல்லா நிலையிலும், துறையிலும் மாற்றி 'மனித நேயம்' என்ற கருத்தாக்கத்தை மெதுவாக எழுச்சி பெற வைத்துள்ளது. அதுபோலவே 'பால் வேறுபாடு' (Gender Discrimination) என்பதை எல்லா நிலைகளிலும் ஒழித்து வரு கிறது. நடுத்தர வகுப்பு பெண்கள், அடித்தட்டு பெண்கள், கிராமப்புறப் பெண்கள், தொழில் புரியும் பெண்கள், படிப்பறிவில்லா பெண்கள் போன்ற இவர்கள் அனைவரையும் ஒரு பொருட்டாக மதிக்கும் பண்பாட்டு முன்னேற்றமும், அவர்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் செயல்பாடுகளும் பெண்ணியல் கல்வி காரணமாக விரைவுபடுத்தப் பட்டுள்ளது. அரசியல், பொருளாதாரம், மதம் ஆகியவற்றின் அடிப் படையில் பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் அநீதிகளும் அடக்கு முறைகளும் கண்டறியப்பட்டு அவை களையப்பட்டு வருகின்றன.

இவைதவிர பெண்ணியல் கல்வியின் பயனாக பெண்களை பற்றி பெருமளவில் செய்திகளும் கருத்துக்களும் கிடைத்து வருகின்ற பல பெண்ணியல் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. பெண்ண இயக்கத்தைப் பொறுத்தவரை பெண்ணியல் கல்வி ஒரு பேரா மாகவும் அதே சமயம் அந்த இயக்கத்திற்கு உதவும் தூண்டுகோலாக அமைந்துள்ளது.

## மதிப்பீடு :

இவ்வாறு பெண்ணியல் கல்வி என்பது பெண்களின் சமத்துவ முன்னேற்றம் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்ட கல்வி அறிவு ஆகும். அ சமூகத்தில் பெண்களின் தாழ்நிலைக்கான காரணங்களை ஆராய் அவற்றைக் களையும் வழிமுறைகளையும் காட்டுகின்றது. அது ம சமுதாயத்தில் பெண்களின் தாழ்நிலையின் ஆரம்பம், அ அடிப்படைகள் ஆகியவற்றைப் பற்றிய ஆராய்ச்சிகள் அடங்கி ஆகும்.

இந்தியாவில் பெண்ணியல் கல்வி என்பது பெண்களைப் பற் மதிப்பீடுகளையும், பெண்கள் பற்றிய பல்வேறு கண்ணோட்ட களையும் ஆய்வுகளின் மூலமாக அறிந்து கொண்டு, சமூகத்தி ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் இது பற் விழிப்புணர்வை ஏற்படுத்தி சமூக மாற்றத்திற்கும், சமூக செயல்ப களுக்கும் உதவ ஒரு வழிமுறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் காரணங்களால் பெண்ணியல் என்பது மேலை ந களைப் போல பெண்கள் மட்டும் பயிலும் கல்வியாக இல்லா சமூகத்தில் பொதுமக்களும் எல்லா நிலைகளிலும் உள்ள மாண மாணவி களும் அறிந்து கொண்டு சமூக மாற்றத்திற்கு உதவ வ செய்யத் தேவை யான அறிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

உயர் நிலைகளிலுள்ள கல்வித் திட்டத்தில் பெண்களைப் பற் கல்வியைச் சேர்ப்பதும், பொதுப் பாடத்திட்டத்தில் பெண்கள் கண்ணோட்டம், பெண்கள் பற்றிய கூறுகள் ஆகியவற்றைச் சேர்ப்பது சிறு கல்வித் திட்டங்களில் பெண்ணியலைக் கட்டாயப் பாடமா வதும் பெண்ணியலைப் பற்றிய அறிவு அதிக அளவில் மாண களிடையே சென்றடைய வழிவகுக்கும்.

# 2. பெண்ணியம் – பொருள் விளக்கம்

## (FEMINISM - DEFINITION)

பெண்ணியம் என்ற சொல் உலகளாவியது ஆகும். இது பாலின சமத்துவக் கோட்பாடுகளையும் பெண்ணுரிமைகளைப் பெறச் செயல் படும் இயக்கங்களையும் குறிக்கப் பயன்பட்டு வருகிறது. பெண்கள் பற்றிய அறிவுத்துறை சார்ந்த ஒரு சமூக அறிவியலே பெண்ணியமாகும். பெண்நிலை வாதம், பெண்நிலை ஏற்பு, பெண்நலக் கொள்கை போன்ற இந்தச் சொற்கள் எல்லாம் பெண்ணியம் என்ற சொல்லின் ரத்தினச் சுருக்க மாக அமைகிறது. இந்த உலகில் உள்ள எல்லா மனித குலத்துள்ளும் ஒவ்வொரு காலகட்டத்திலும் பெண்களின் முன்னேற்றத்தை விமரிசனம் செய்ய ஏற்பட்டது. பெண்களின் சமத்துவத்தையும் முன்னேற்றத்தையும் வலியுறுத்துவதே பெண்ணியம் ஆகும். பெண்ணியம் பற்றிய பல்வேறு விளக்கங்களை இனி காணலாம்.

### பெண்ணியம் என்ற சொல் தோன்றிய விதம் :

ஆங்கிலத்தில் Feminism எனப்படும் சொல்லையே தமிழில் பெண்ணியம் என்று கூறுகிறோம். பெண்களைக் குறிக்கும் இந்த ஆங்கிலச் சொல் Femina என்ற லத்தீன் மொழி சொல்லிலிருந்து தோன்றி வளர்ந்ததாகும். பெமினா என்றால் 'பெண்களுக்குரிய இயல்புகளை உடையவள்' என்ற பொருள் ஆகும். மேலும் இந்த வார்த்தை முதலில் பெண்களின் பாலியல் குண இயல்புகளை குறிப்பிடவே உபயோகப் படுத்தப்பட்டது. அதன் பின்பு தான் பெண் இனத்தின் உரிமைகளைப் பற்றி பேசுவதற்காக குறிப்பிடப்பட்டது.

பெண்களின் உரிமைப் பிரச்சனைகளையும் அதன் அடிப்படை யிலான போராட்டங்களையும் உணர்த்த 1889-வரையில் womenism என்ற வார்த்தையே பயன்படுத்தப்பட்டு வந்தது. 1890-ம் ஆண்டு தான் உமனிசம் என்ற வார்த்தைக்குப் பதிலாக பெமினிசம் என்ற வார்த்தை பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டது. 1894-ம் ஆண்டு வெளிவந்த ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி முதன் முதலாக பெமினிசம் என்ற சொல்லுக்கு விளக்கம் கொடுத்தது. பெமினிசம் என்ற வார்த்தைக்கு தனது வாழ்வின் மூலம் அர்த்தத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர் ரேஸ்டிரேசே (Ray Strachey) என்ற தீவிர பெண்ணிய செயல்பாட்டாளர் ஆவார்.

## பெண்ணியம் என்பதற்கான கருத்து விளக்கம் :

பெண்ணியம் என்பதற்கு உலகில் உள்ள எல்லா சமூகங்களுக்கும் பொருந்தும்படியான, முக்காலத்திற்கும் ஏற்ற ஒரு விளக்கத்தைக் கொடுப்பது என்பது இயலாத காரியமாகும். இதன் விளக்கம் ஒரு சமுதாயத்தின் வரலாறு, பண்பாடு ஆகியவற்றைப்பற்றிய உணர்வு நோக்கு, செயல் ஆகியவைகளைப் பொறுத்த மாறுபடுகிறது. உலகில் பல்வேறு சமூகத்தினரும், பல்வேறு நாட்டினரும் இந்தச் சொல்லை பல்வேறு வரையறைகளுக்கு உட்பட்ட கருத்துக்களைக் குறிக்கப் பயன்படுத்துகின்றனர். அதாவது பெண்ணியம் என்பதற்கான பல்வேறு விளக்கங்கள் அந்தந்த வட்டாரம் மற்றும் காலகட்டங்களுக்கு ஏற்றாற் போல வேறுபாடுகள் உள்ளதாக இருக்கிறது.

ஆனால் பெண்ணியம் என்பதற்கான விளக்கங்களில் வேறுபாடுகள் காணப்பட்டாலும் அடிப்படையில் அவை பெண்ணியம் என்பதற்கு 'பாலியல் சமத்துவம்' என்ற பொருளையே தருகின்றன. ஒட்டு மொத்தமாக பரந்த அளவில் பெண்ணியம் என்ற சொல் பெண் ஆணுக்கு சமமானவர், எந்த சூழ்நிலையிலும் அவள் அடக்கி ஒடுக்கி நசுக்கி வைக்கப்படக்கூடாது. சார்ந்து வாழ்பவளாகவோ, ஒரு நுகர் பொருளாகவோ நிலைப்படுத்தக்கூடாது என்று பொருள் படுகிறது.

பெண்ணியம் பற்றி தெளிவர்கவும், முழுமையாகவும் புரிந்து கொள்ள கீழ்க்கண்ட பல்வேறு விளக்கங்கள் வழிவகுக்கின்றன. அவைகளை விரிவாகக் காணலாம்.

*1) ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் பெண்ணியம் என்பதற்கு 'பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக போராடுவது, வாதாடுவது'* (advocacy of the Claims of Women) என்ற பொருளைத் தந்துள்ளது. சென்னைப் பல்கலைக் கழக ஆங்கில-தமிழ் அகராதி பெண்ணியம் என்பதற்கு 'பெண் உரிமை ஏற்புக் கோட்பாடு', 'பெண்ணுரிமை ஆதரவு' என்ற பொருள் தருகிறது. டீலக்ஸ் ஆங்கில தமிழ் அகராதி, பெண்ணியம் என்பதற்கு, 'பெண்களின் உரிமையை வலியுறுத்தும் ஒரு இயக்கம்' என்ற விளக்கம் தந்துள்ளது.

2) பிரிட்டானியா கலைக் களஞ்சியம் பெண்ணியம் என்ற வார்த்தைக்கு சரியான விளக்கம் அளித்துள்ளது. 'பெண்ணியம் என்ற வார்த்தையானது மிகவும் அண்மைக் காலத்தில் தான் தோன்றி வளர்ந்து வருகிறது. இது பெண்களின் உரிமைகளுக்காகப் போராடும் ஒரு புதிய இயக்கமாகும். அத்துடன் பெண்ணின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும் அவள் ஆண்களுக்குச் சமமானவள் என்ற உயர் நெறியை நிலை நாட்டும் நோக்கத்தைக் கருவாகக் கொண்டு இயங்குகிறது' என்று விளக்கியுள்ளது.



3) வங்கதேசம், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளில் பெண்கள் ஒரு கருத்தரங்கு நடத்தினர். அந்த கருத்துப்பட்டறையில் பெண்ணியம் என்பதற்கான கீழ்க்கண்ட விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 'சமூகத்திலும், அலுவலகங்களிலும், குடும்பத்திலும் பெண்கள் நசுக்கி ஒடுக்கப்படுதல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும், இந்த நிலையை மாற்றியமைக்க ஆண்களும், பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படும் முயற்சிகளுமே பெண்ணியம் ஆகும்'' என்ற விளக்கத்தை ஏற்றுக் கொண்டன.

4) சார்லட் பன்ச் (Charlotte Bunch) என்ற பெண்ணியவாதி கொடுக்கும் விளக்கம் வருமாறு :

'பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றை நீக்க முயல்வது ஆகும். அதன் மூலம் உலகளவில் அரசியலிலும், பண்பாட்டிலும், பொருளாதாரத்திலும், ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும்' என்கிறார் சார்லட் பன்ச். மேலும் அவர், 'பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல ; சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும்' என்றும் கூறினார்.

5) பார்பரா ஸ்மித் (Barbara Smith) என்பவர் பெண்ணியம் என்பதற்கு சற்று விரிவான விளக்கம் கொடுத்துள்ளார்.

'பெண்ணியம் என்பது' எல்லாப் பெண்களையும் அரசியல் மற்றும் பிற அடிமைத்தளையிலிருந்து விடுவித்தல் என்ற கொள்கை உடையதாகும். இளம் பெண்கள், தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள், ஏழைப் பெண்கள், ஓரினச் சேர்க்கையுடைய பெண்கள், வயதான பெண்கள் மற்றும் பொருளாதார நிலையிலும் மரபு முறையிலும் துன்புறும் பெண்கள் ஆகிய அனைவருக்கும் விடுதலை பெற்றுத் தருவதே இதன் இலக்காகும். இதனன்றி இயல்பான அல்லது சற்று குறைவான முயற்சியில் ஈடுபடுவது பெண்ணியம் ஆகாது' என்று விளக்கியுள்ளார். அதாவது எல்லாத் தரப்பு பெண்களுக்கும் உரிமை பெற்றுத் தருவதே பெண்ணியம் என்கிறார் பார்பரா ஸ்மித்

6) கார்டன் (Gardon) என்பவர் பெண்ணியத்தைப் பற்றி வரையறை செய்துள்ளார். அவரது கூற்றுப்படி,

'பெண்களின் தாழ்வு நிலையை ஆராய்ந்து அதை மாற்ற மேற் கொள்ளப்படும் வழிமுறைகளே பெண்ணியம் ஆகும்'.

இந்தக் கருத்தையே சற்று விளக்கிக் கூறியுள்ளார் ஜெயின் என்பவர். அவர் கருத்துப்படி பெண்ணியம் என்பது,

'பெண்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து ஒரு ஆற்ற உருவாக்கி, பெண்மை அதன் தன்மையில் ஆண்களோடு மாறுபட் தாலும் அது ஆண்மைக்கு நிகரானது என்பதை ஏற்றுக் கொ வைப்பது' ஆகும்.

7) புட்சர் என்பவர் பெண்ணியம் என்பதற்கு விளக்கம் கொ துள்ளார். 'பெண்ணியம் என்பது பெண்கள் பாலின பாகுபாட் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து கொள்ளப்படும் இயக்கம்' என்கிறார்.

8) டோனா ஹாஸஸ்ட் மற்றும் சுயுமாரோ (Dona Hawshurst, Sue Morrow) போன்றவர்கள், பெண்ணியம் என்பது தீவிர செய பாடுடையது என்று கூறுகின்றனர். இந்தக் கருத்து பார்பரா ஸ்மித்தி கருத்துடன் ஒத்துச் செல்கிறது. மேலும் இவர்கள் பெண்ணியத்தை பற்றி விளக்கமாகக் கூறியுள்ளார்கள். 'பெண்ணியம் தனிப்பட் முறையில் மட்டுமல்லாமல், அரசியல் மற்றும் தத்துவ நிலையாக செயல்பட வேண்டி இருப்பதால் இதற்குத் தேவை தீவிர நடைமுற செயல்பாடுதான். தீவிரம் இல்லாவிட்டால் பெண்ணியம் என்ற செ அர்த்தமற்றதாகி தானே இல்லாமல் போய்விடும்' என்று விளக் யுள்ளனர்.

9) தெரசாபில்லிங்டன் என்ற பெண்ணியவாதி, 'பெண்ணிய என்பது உலகையே மாற்றியமைக்கும் இயக்கம் ஆகும்' என் பெண்ணியத்திற்கு விளக்கம் கொடுத்துள்ளார்.

10) ரோசலிண்ட் டெல்மார் (Rosalint Delmar) என்பவ 'பெண்ணியம் என்பது பெண்களின் நிலையை மாற்றுகின்ற இயக்க ஆகும்' என்கிறார். பெண்களைச் சமுதாய அளவில் முன்னேற்றுவ என்பது பெண்ணியத்தின் மையச் செயற்பாடாக அமைந்துள்ளதா இதை ஒரு சிறந்த சமுதாய இயக்கமாக கருத முடியும் என்பது இவர எண்ணமாகும். 'The Cause' என்ற பெண்ணிய விளக்க நூலை எழுதி ரேஸ்டிரேசே என்ற அம்மையாரும் பெண்ணியத்தின் மையச் செயற்பா சமுதாயத்தில் பெண்களின் நிலையை மாற்றுவதாகும் என்று கூறுகிறார்.

11) அபர்னா மகந்தா, பெண்ணியம் பற்றிச் சொல்லு போது, பெண்ணியம் என்பது முதலாளிய வளர்ச்சிக்குப் பின்பே தோன்றியது. முதலாளியம் தனது கட்டற்ற வளர்ச்சிக்காக உற்பத்தி சக் களை ஊக்குவிப்பதால் பெண்களும் மரபான வீட்டு வேலைகளிலிருந் விடுபட்டு நேரடியாகச் சமூக அளவிலான உற்பத்தியில் ஈடுபடுகின்றன இதனால் ஒடுக்கப்பட்ட இனமான பெண்கள் தமது வாழ்க்கை நிலைமை களை உணர்வதற்கான புறநிலைக் காரணிகள் தோன்றுகின்றன. கால காலமாகப் பெண்களாகிய நாம் ஒடுக்கப்பட்டு வருவதைப் பற்றி உணர்வு நிலையைக் கொண்டிருத்தலும், இக்காலத்தில் தான் விடுதலைக் கான சமூக அரசியல் இயக்கமாக நமது போராட்டம் தன்னைத்தானே அடையாளம் கண்டு கொள்கிறது. எனவே பெண்ணியம் என்பது பெண் விடுதலை இயக்கத்தை வழி நடத்திச் செல்லும் தத்துவமும் வாழ்க்கை முறையுமாகும் என்பார்.



12. 'சிவகாமி' போன்ற தலித்தியவாதிகள் பெண்ணியம் பற்றி விளக்கும் போது 'ஆதிக்க சக்திகளின் ஒடுக்குமுறை கருவிகளான நிறுவனங்கள் யாவற்றையும் கேள்விக் குள்ளாக்கும். சொல்லப் போனால் தலித் இலக்கியம் என மரபு வழியான இறுகிப் போன நிறுவனங்களுக்கு எதிரான பெண் குரலே, இன்றுள்ள பெண்ணியக் கோட்பாடுகள் பலவும் மேற்கத்திய நாட்டில் தோன்றியவையே. மேலை நாடுகளிலும் கூட பரிசோதனை முயற்சிக்கும் - தவறுக்குமான சோதனைக்களமாகவே பெண்ணியச் சிந்தனை நிலவி வருகிறது. வேலை பாகுபாடு, தனிச்சொத்துரிமை, தந்தை வழிச்சமூகம், பெண் ஒடுக்கு முறையின் கள ஆயுதமான குடும்பம் இல்லாது உதிர்ந்து விடும் என்ற மார்க்சிய சித்தாந்தம் ருசிய மண்ணிலேயே வேரூன்ற முடியாமல் போனது. பொருளாதாரச் சுதந்திரம் மற்றும் மேம்போக்கான சீர்திருத்தங்கள் மட்டுமே பெண்ணை ஒடுக்குமுறையிலிருந்து விடுவித்துவிட முடியாது என்பது நாம் அனுபவத்தில் காணும் உண்மை.

பெண்ணியக் கோட்பாடு என்பது ஆண், பெண் சமத்துவம் என்பதற்கும் அப்பால் 'பால்பேத உணர்வற்ற உயிரி' எனக் கருதும் சுதந்திர நிலையாகும். இந்த நிலைக்கு இட்டுச் செல்ல மரபு விதித்துள்ள ஆண், பெண் பற்றிய அடிப்படையான கருத்துருவாக்கங்களை சிதைப்பது முன் நிபந்தனையாகும். ஒரு ஆண் தன்னைப் பெண்ணாகவும், பெண் தன்னை ஆணாகவும் கருதிக் கொள்ள இயலுமா. ஆண் பெண் பற்றிய புதிய கருத்துகளை உருவாக்கியும் மறுக்கப்பட்ட பாலுறவு களை முன்வைத்தும் இது சாத்தியமாகும் என்கின்றனர் சிலர். குழந்தைப் பேறு என்பது பெண்களுக்கு மட்டும் பிரத்யேகமானது குழந்தை வளர்ப்பு என்பதும் இன்றுவரை தீர்வுகான முடியாத சிக்கல்கள் நிறைந்த தாகவே உள்ளது. எனவே பெண்களுக்கு மட்டுமே பிரத்யேகமான குழந்தைப்பேறு என்பதை அவர்களுக்குச் சாதகமான ஒன்றாக வளர்த் தெடுப்பது எப்படி என்பதைப் பற்றியும் குழந்தை பற்றியும் தீர்வுகளை நோக்கிய ஆய்வு அவசியமாகிறது. தலித் இயக்கம் என்பது ஒடுக்கப் பட்டோருக்கான இயக்கம் என்றால் அது பெண்களை முன்னிறுத்திய போராட்டமாகவே இருக்க முடியும்' என்று விளக்குவார்.

## பெண்ணியத்தின் கருப்பொருள் :

மேலே கூறப்பட்டுள்ள விளக்கங்களின் அடிப்படையில் பெண்ணியத்தின் கருப்பொருளை கீழ்க்கண்டவாறு பட்டியலிடலாம்.

a) பெண்ணியம் அனைத்து வகைப் பெண்களுக்கும் உரி வேண்டுகிறது. பெண்கள் தாம் மேற்கொள்ளும் அனைத்து வ வாழ்க்கை முறைகளுக்கும், பணிகள் அனைத்திற்கும் உரிமை உ யவர்களாக இருக்க வேண்டும் என்பதே பெண்ணியம் ஆகும்.

b) பெண்களின் உரிமைகளைப் பறித்து அவர்களைக் கட்டு படுத்தும் அனைத்தையும், பெண்கள் முனனேற்றத்திற்கு கேடு விளை விக்கும் அனைத்தையும் நீக்குதல்.

c) பெண்களுக்கு விழிப்புணர்வை ஊட்டி, அவர்களை ஒன் படுத்தி தம் உரிமைக்குப் போராடுதல் பெண்ணியம் ஆகும். பெண்கள் பொருளாதார சுதந்திரத்தை நிலைநாட்டுதல், ஆணாதிக்கத்தை அடையாளம் கண்டு அதை எதிர்த்தலும் பெண்ணியத்தின் கருப்பொருள் ஆகும்.

d) பெண்களின் மீதான அனைத்து வகை அடக்கு முறைகளையும் ஆராய்ந்து அதனைப் போக்குவதற்கான தீர்வுகள், விடுதலை பெறுவதற் கான வழிமுறைகளைப் பின்பற்றுதல் ஆகும். சுருக்கமாகச் சொன்னால் பெண்ணியம் என்பது பெண்களின் நலன்களைப் போற்றுதலும், அதனை அடைதலும், அடைந்தவற்றைக் காத்தலும் ஆகும்.

## பெண்ணியம் பற்றிய மதிப்பீடு :

பெண்ணியமானது பெண்கள் அனுபவிக்கும் எல்லாவிதமான அடக்கு முறைகளையும் எதிர்ப்பது மட்டுமல்லாமல் பெண்களின் மேம் பாட்டிற்கான வழிமுறைகளையும் செயல்படுத்துகிறது. இந்த அடக்கு முறைகள் பெண்ணினத்திற்குப் பொதுவாக இருப்பதால் இந்த நிலைமை மாற பெண்களே இதற்காகச் செயல்பட்டாக வேண்டும். பெண்கள் ஒன்றுகூடி தங்களுடைய பிரச்சனைகளையும் அதற்கான தீர்வுகளையும் எட்டிப் பிடிப்பதற்கான நடைமுறைகளையும் முடிவு செய்ய வேண்டும்.

பெண்ணியம் ஆண் இனத்தை வெறுக்கவில்லை. ஆணாதிக்கத் தையும் ஆண் எனும் அகம் பாவத்தையும் மட்டுமே வெறுக்கிறது. பெண் களைச் சமமாக மதிக்காது. பெண்கள் தங்கள் சொத்து அல்லது பொருள் என எண்ணிச் செயல்படுகின்ற ஆண்களையே பெண்ணியம் எதிரியாகப் பாவிக்கிறது.

பெண்ணியம் ஆண், பெண் உறவுகளில் மாற்றத்தை விரும்பு கிறது. ஆண், பெண் உறவில் மாற்றம் என்று சொல்லும் போது அது சமுதாயத்தில் மட்டுமல்லாமல், குடும்பத்திலும் செயல்பட வேண்டி யுள்ளது. மகள், தந்தை, மனைவி-கணவன், தங்கை-அண்ணன், அக்கா - தம்பி, தாய்-மகன், மருமகள்-மாமன் என பல்வேறு உறவுகளை இது பாதிக்கிறது. தற்போது குடும்பத்தின் [illegible] நிலவும் அமைதி



யானது பெண்கள் அங்கு நசுக்கப்படுவதாலும், சுரண்டப்படுவதாலும் ஏற்படுகின்ற ஒன்றே ஆகும். பெண்ணியவாதிகள் ஆண்களுடன் வேறு பாடு கொள்ளும் போது குடும்பத்தில் தனிப்பட்ட ஆண் நபர்களையும் எதிர்க்க வேண்டி உள்ளது.

ஆனாலும் சமூகத்தின் ஆணாதிக்கம் குடும்பத்தில் தான் தொடங்குகிறது. எனவே பெண்ணியம் தீவிரமாகச் செயல்பட வேண்டிய முதல் தளம் குடும்பமே ஆகும். ஆண்களுக்கு சரியாக பெண்கள் மதிக்கப்படும் போக்கு முதலில் குடும்பத்தில் தோன்ற வேண்டும். ஆணாதிக்கமும் அதனால் ஆண்களுக்கு அங்கு கிடைக்கும் தனிச் சலுகை களும் குடும்பத்தில் மாற்றம் பெற வேண்டும். பெண்ணியம் எல்லா விதமான பாகுபாடுகளையும் நீக்கி நேர்மையான, ஆண்களுக்குச் சமமான பொருளாதார அமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது. குடும்பத்திலும் வெளியிடங்களிலும் பெண்கள் தங்களிடம் இயற்கையாக அமையப் பெற்றிருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்தி வாழ்வர் தாமாகச் சிந்தித்து தற்சார்புடைய வாழ்வார்.

இதனால் ஆண்களுக்கும் பெண்களைப் பாதுகாக்கும் இதனால் ஆண்களுக்கும் பெண்களைப் பாதுகாக்கும் பொறுப்பும் இருக்காது. அத்துடன் பெண்ணியம் என்பது பெண்களுக்கு மட்டும் சமத்துவம் வேண்டும் என்று கேட்கவில்லை. சமத்துவம் உள்ள சமுதாயம் உருப்பெற வேண்டும் என்பதே பெண்ணியத்தின் அணுகு முறை. அதில ஆணும், பெண்ணும் பாலின பாகுபாடு இன்றி மனிதர் களாக மதிக்கப்படுதல் வேண்டும் என்பதே அதன் கோரிக்கை. எனவே மனித மேம்பாடடே பெண்ணியத்தின் நோக்கமாகும். மக்கள் அடிமை களாக வாழும் சமுதாயத்தில் பெண்கள் மட்டுமின்றி ஆண்களும் அடிமைகள் தாம். அங்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை வேண்டும் என்று கேட்பதில் எந்தப் பொருளும் இல்லை. பெண்ணியம் ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொதுவான, நேர்மையான சமுதாயம் உருவாக்க வேண்டும் என்று விரும்புகிறது. எனவே இருபாலர்க்கும் மான நியாயமான பாரபட்சமற்ற ஒரு சமூக உருவாக்கம் என்பதே 'பெண்ணியம்' என்று சொல்லலாம்.

# 6. பெண்ணியம் தோன்றக் காரணங்கள்

## (CAUSES FOR THE RISE OF FEMINISM)

மனித சமுதாயத்தின் வரலாற்றுப் போக்குகளில் வெடித் கிளம்பிய ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் மனித இனத்தின் வளர்ச்சிக் முன்னேற்றத்திற்கும் தளம் அமைத்துக் கொடுத்துள்ளன. பதினெட் நூற்றாண்டின் இறுதிவரை சமுதாயத்தின் அனைத்து அசைவுகளும் சம சார்புடையனவைகளாக இருந்தன. வாழ்க்கையின் அனை நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் சமயத்தின் ஒப்புதல் பெற் வாழ்க்கை நியதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்பட்டு வந்தன.

சமயத்தின் பெயரால் பெண்ணினத்தின் மேல் கொடு கட்டவிழ்த்து விடப்பட்டது. இந்தகால கட்டத்தில்தான் ஐரோப் சமூகத்தில் புதிய மானுடத்திற்கான புதிய மாற்றங்கள் வெடித்து கிளம் துவங்கின. மேலைநாடுகளில் குறிப்பாக அமெரிக்காவிலு இங்கிலாந்திலும் பெண்ணிய இயக்கம் ஆரம்பமானது. அதற்கா காரணங்களை ஆய்வு செய்யலாம்.

### பெண்ணியம் தோன்றக் காரணங்கள் :

**1. ஐரோப்பாவில் தோன்றிய அறிவொளிக்காலம் : Age of Enlightenme**

ஐரோப்பாவில் ஏற்பட்ட அறிவுப் புரட்சியின் உச்ச கட்ட அறிவொளிக் காலம் ஆகும். அறிவொளி என்றால் மக்களை இருட் லிருந்து வெளிச்சத்திற்கு கொண்டுவருதல் என்று பொருளாகு அதாவது மக்களை அறியாமை என்ற இருட்டிலிருந்து அறிவுடைமை என் வெளிச்சத்திற்கு கொண்டுவருதல் ஆகும். அவ்வொளிக்காலம் 18 நூற்றாண்டில் ஐரோப்பா வெங்கும் பரவி நின்றது. இந்த காலகட்டத் உலகத்தில் உள்ள அனைத்து துறைகளையும் ஏன், எதற்கு, எப்படி என் வினா எழுப்பி காரண காரியங்களோடு பகுத்தறிந்து, ஆராய்ந் தெளிந்து உண்மை எனத் தெரிந்தவற்றையே ஏற்றுக்கொள்ள வேண்டு என்ற கருத்து பரவ ஆரம்பித்தது. இதன் அடிப்படையில் மன சமூகத்தின் அனைத்து மதிப்பீடுகளும் ஆராய்ச்சிக்கு உட்படுத் பட்டன. புதிய சமுதாயத்திற்கான புதிய சமூக மதிப்பீடுகள் உரு கொள்ளப்பட்டு மனித சமூகத்தால் உட்கிரகிக்கப்பட்டதன் விளைவா சமூக ஏற்றத்தாழ்வுகள் விவாதப்பொருட்களாயின. இது



பெண்ணியம் எழுச்சியடைய தளம் அமைத்துக் கொடுத்தது.

**2. பிரெஞ்சுப் புரட்சியும். அமெரிக்க சுதந்திரப் போரும் :**

18-ம் நூற்றாண்டில் புதிய சமூக மதிப்பீடுகள் ஏற்றுக் கொள்ளப் பட்டதின் விளைவாக பிரெஞ்சுப் புரட்சி, அமெரிக்கப் புரட்சி என்ற இரண்டு பூகம்பங்கள் வெடித்தன.

1789-ல் பிரான்ஸ் நாட்டில் தோன்றிய பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக மன்னராட்சி ஒழிக்கப்பட்டு மக்களாட்சி நிறுவப்பட்டது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற புதிய மதிப்பீடுகள் வலியுறுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இதேபோல 1776-ல் ஆங்கில முடியாட்சிக்கு எதிராக அமெரிக்காவில் மற்றொரு புரட்சி ஏற்பட்டது. நூறாண்டு காலமாக. ஆங்கில ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்த அமெரிக்க மக்கள் போர் புரிந்து மக்களாட்சியை நிறுவினர்.

இந்த இரண்டு புரட்சிகளிலும் சுதந்திரம், சமத்துவம் போன்ற கருத்துக்கள் வீறுபெற்றெழுந்தது. இதன் விளைவாக மேலைநாடுகளில் விழிப்புணர்வு தோன்றியது. இந்தபுரட்சிகளில் பெண்ணியம் இணைந்து இயங்கிய போதிலும், புரட்சிகளின் விளைவாக பெண்களின் நிலையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

ஆனால் காலம் செல்ல செல்ல பெண் சமூகத்தின் நிலை மாற வேண்டும் என்ற சிந்தனைப் பூக்கள் ஆங்காங்கே மலர ஆரம்பித்தன. இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த மேரி உல்ஸ்டோன் கிராப்ட் (Mary Wollstone Craft) என்பவர் 'ஆண் உரிமையை நியாயப்படுத்துதல்' (Vindication of the rights of man), 'பெண் உரிமையை நியாயப்படுத்துதல்' (Vindication of the rights of woman) போன்ற நூல்களை எழுதி புதிய பெண்ணி யத்திற்கான புதிய முகத்தை வரைந்து காட்டினார். இந்த நூல்கள் தான் பெண்ணியம் தோன்ற அடித்தளம் அமைத்துக் கொடுத்தது. இந்த நூல்கள் பின்னாளில் பெண்ணியவாதிகளின் வேதாகமாக கருதப் பட்டது.

இதேபோல அமெரிக்கப் புரட்சிக்குப் பிறகு லேடி அபிக்வேல் ஆடம்ஸ் (Lady Abiquall Adams) என்பவர் தனது கணவருக்கு 'பெண்களை நினைத்துப் பாருங்கள்' (Remember the Ladies) எனற தலைப்பில் ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் முடியாட்சியை ஒழித்து குடியாட்சியை ஏற்படுத்திய இந்த அமெரிக்கப் புரட்சி பெண்ணிய அவலத்தை மாற்ற எந்த ஒரு அளவையும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. எனவே பெண்கள், ஆண்களுக்கு எதிராகப் போராடித்தான் பெற முடியும் என்று குறிப்பிட்டார்.

இவ்வாறு பிரெஞ்சுப் புரட்சி, அமெரிக்கப் புரட்சிகளின் வாக பெண்களின் நிலைமை பற்றிய புதிய கருத்துக்கள் உருவ பெண்ணியத்திற்கு அடிப்படையான சுதந்திரம், சமத்துவம் கருத்துக்கள் தோன்றின. இவையே பின்னர் பெண்ணிய இய தோன்றக்காரணமானது.

### 3. புரட்டஸ்தாந்து சமயப்பிரிவினரின் பங்கு :

புரட்டஸ்தாந்து சமயப் பிரிவினரான குவா எவாஞ்சலிகர்கள் மற்றும் யூனிடேரியன்கள் ஆகியோர் பெ விடியலுக்கான பின்புலமாக விளங்கினர்.

புரட்டஸ்தாந்து சமயத்தின் ஒரு பிரிவினரான குவ (Quaker) சமூக ஒழுக்க சீர்திருத்த இயக்கங்களில் ஈடுபட்டனர். களுக்கு அதிக சுதந்திரம் அளித்தனர். பெண்கள் தேவாலயப் பல பாதிரிகள் ஆகவும், பொதுக் கூட்டங்களில் பேசவும் அனும பட்டனர். அடிமை ஒழிப்பு இயக்கத்திலும் ஈடுபட்டனர்.

புரட்டஸ்தாந்து சமயத்தின் மற்றொரு பிரிவி யூனிடேரியன்களும் பெண்ணிய எழுச்சியில் பங்கு கொண் இவர்கள் பகுத்தறிவு வாதம், சுதந்திரம், இயற்கை உரிமை ஆகிய நம்பிக்கை கொண்டவர்கள். 'கடவுள் பெண்களுக்கென்று க களையும், ஒழுக்கத்தையும் ஏற்கனவே தீர்மானித்து வைத்துள்ளா சமய வாதிகளின் கூற்றை ஏற்க மறுத்தனர். இப்பிரிவினர் குடும்பங்களில் உள்ள பெண்களுக்கு கல்வியறிவு அளித்தனர். களுக்கான கட்டுப்பாடுகளை நீக்கினர்.

மற்றொரு பிரிவினரான எவாஞ்சலிகர்களும் பெண்களின் வத்தைப் போற்றினர். மதமாற்றப் பணிகளை மேற்கொண் சமூகப் பணிகளிலும் ஈடுபட்டனர். இவர்கள் விலைமாதரை நல் படுததும் பணிகளிலும் ஈடுபட்டனர். இதனால் பெண்கள் வாழ்வில் ஈடுபட வாய்ப்புக்கிடைத்தது. குடிப்பழக்கத்தை ஒழி அடிமை ஒழிப்பு போன்ற பணிகளிலும் ஈடுபட்டனர். இதன் பெண்ணியம் வளர்ச்சியடைய வழி வகை செய்யப்பட்டது.

### 4. தொழிற்புரட்சியின் விளைவுகள் :

மேலும் இதே கால கட்டத்தில் இங்கிலாந்தில் தோ தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகளும் பெண்ணியம் தீவி வளரக்காரணமானது.

தொழிற்புரட்சியின் விளைவாக பல தொழிற்சாலை தோன்றின. இதனால் வேலைவாய்ப்புகள் பெருகின. மக்கள் வீட்



வெளியே சென்று வேலை தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வேலை தேடி குடும்பங்கள் நகர்புரம் நோக்கி குடிபெயர்ந்தன. இதுவரை கூட்டுக்குடும்பமே மனித சமூகத்தின் அடித்தளம் என்று இருந்த நிலை மாறி சிறு குடும்பமே மனித சமூகத்தின் அடித்தளம் என்று அமைந்தன. இந்த சூழலானது பெண்கள் என்றும் வீட்டிற்குள்ளே என்றும் ஆண்கள் வெளி உலகிலே என்று கொடிகட்டி கோலோச்சிவந்த ஆணாதிக்க சமூக மதிப்பீடுகளை சுக்கு நூறாக வெடித்துச் சிதற வழிவகை செய்தது. இவ்வாறு தொழிற் புரட்சியின் விளைவாக பெண்களின் உலகம் வீட்டிற்குள் மட்டுமல்ல வெளி உலகிலும் கூடத்தான் என்ற புதிய வரையறை கால்கொள்ளத் தொடங்கியது.

### 5. பெண்கல்வியின் தாக்கம் :

ஐரோப்பிய நாடுகளில் 18-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட சில சமூக, பொருளாதார, மத, அரசியல் மாற்றங்கள் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வந்து தொழில்களில் ஈடுபட வாய்ப்பளித்தன. இவற்றில் முதன்மையானது பெண்கள் பெற்ற கல்வியறிவு ஆகும். அதுவரை பெண் கல்வி என்பது ஐரோப்பிய நாடுகளில் உயர்குடிமக்களின் சிறப்புரிமை யாகவே கருதப்பட்டுவந்தது.

இந்தநிலை மாறிய பிறகு பெண்கல்வி என்பது பெண்கள் தங்கள் குடும்பப் பொறுப்புகளை ஏற்று நடத்தத் தேவையான அறிவாகக் கருதப் பட்டது. அமெரிக்காவில் தோன்றிய எவாஞ்சலிகர் இயக்கத்தின் விளைவாக கல்வி பெண்களுக்குத் தேவையான ஒன்றாகக் கருதப் பட்டது. மேலும் பெண்கள் தற்சார்புடன் வாழ கல்வி அவசியமான ஒன்றாக ஆனது. இவ்வாறு பெண்கல்வியின் விளைவாக பெண்ணியம் வலுப்பெற்றது.

### 6. சோசலிசக் கருத்துகள் :

மேற் சொன்னவைகள் தவிர சோசலிசக் கருத்துக்களும் பெண்ணிய விடுதலைக்கான காரணமாக அமைந்தன. சோசலிச சமூகத்தைக் கட்டமைக்க வீறு கொண்டு எழுந்த சோசலிச சிந்தனை யாளர்கள் பெண்களின் நிலை குறித்துக் கூறுகையில் ஆணும், பெண்ணும் சமம் என்று கூறியதுடன் பெண்கள் சில வகைகளில் ஆண்களை விட உயர்வானவர்கள் என்றும் குறிப்பிட்டனர். இப்படிக் கூறியவர்களில் செயின்ட் சீமோன், ராபர்ட் ஒவன், சார்லஸ் பூரியர், ஹம்ப்ரே நாய்ஸ் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இவர்களில் செயின்ட் சீமோன் மற்றும் சார்லஸ் பூரியர் ஆகியோரது கருத்துக்கள் பெண்ணிய விடுதலைக்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தன.

இவ்வாறு பிரெஞ்சுப் புரட்சி, அமெரிக்கப் புரட்சிகளின் உருவ
வாக பெண்களின் நிலைமை பற்றிய புதிய கருத்துக்கள் சமத்துவம்
பெண்ணியத்திற்கு அடிப்படையான சுதந்திரம், சமத்துவம் இய
கருத்துக்கள் தோன்றின. இவையே பின்னர் பெண்ணிய
தோன்றக் காரணமானது.

## 3. புரட்டஸ்தாந்து சமயப்பிரிவினரின் பங்கு :

புரட்டஸ்தாந்து சமயப் பிரிவினரான குவர
எவாஞ்சலிகர்கள் மற்றும் யூனிடேரியன்கள் ஆகியோர் பெ
விடியலுக்கான பின்புலமாக விளங்கினர்.

புரட்டஸ்தாந்து சமயத்தின் ஒரு பிரிவினரான குவ
(Quaker) சமூக ஒழுக்க சீர்திருத்த இயக்கங்களில் ஈடுபட்டனர்.
களுக்கு அதிக சுதந்திரம் அளித்தனர். பெண்கள் தேவாலயப் பல
பாதிரிகள் ஆகவும், பொதுக் கூட்டங்களில் பேசவும் அனும
பட்டனர். அடிமை ஒழிப்பு இயக்கத்திலும் ஈடுபட்டனர்.

புரட்டஸ்தாந்து சமயத்தின் மற்றொரு பிரிவி
யூனிடேரியன்களும் பெண்ணிய எழுச்சியில் பங்கு கொண்
இவர்கள் பகுத்தறிவு வாதம், சுதந்திரம், இயற்கை உரிமை ஆகிய
நம்பிக்கை கொண்டவர்கள். 'கடவுள் பெண்களுக்கென்று க
களையும், ஒழுக்கத்தையும் ஏற்கனவே தீர்மானித்து வைத்துள்ளா
சமய வாதிகளின் கூற்றை ஏற்க மறுத்தனர். இப்பிரிவினர்
குடும்பங்களில் உள்ள பெண்களுக்கு கல்வியறிவு அளித்தனர்.
களுக்கான கட்டுப்பாடுகளை நீக்கினர்.

மற்றொரு பிரிவினரான எவாஞ்சலிகர்களும் பெண்களின்
வத்தைப் போற்றினர். மதமாற்றப் பணிகளை மேற்கொண்டு
சமூகப் பணிகளிலும் ஈடுபட்டனர். இவர்கள் விலைமாதரை நல்
படுததும் பணிகளிலும் ஈடுபட்டனர். இதனால் பெண்கள்
வாழ்வில் ஈடுபட வாய்ப்புக்கிடைத்தது. குடிப்பழக்கத்தை ஒழி
அடிமை ஒழிப்பு போன்ற பணிகளிலும் ஈடுபட்டனர். இதன்
பெண்ணியம் வளர்ச்சியடைய வழி வகை செய்யப்பட்டது.

## 4. தொழிற்புரட்சியின் விளைவுகள் :

மேலும் இதே கால கட்டத்தில் இங்கிலாந்தில் தோ
தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகளும் பெண்ணியம் தீவி
வளரக் காரணமானது.

தொழிற்புரட்சியின் விளைவாக பல தொழிற்சாலை
தோன்றின. இதனால் வேலைவாய்ப்புகள் பெருகின. மக்கள் வீட்டு



வெளியே சென்று வேலை தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.
வேலை தேடி குடும்பங்கள் நகர்புரம் நோக்கி குடி பெயர்ந்தன. இதுவரை
கூட்டுக்குடும்பமே மனித சமூகத்தின் அடித்தளம் என்று இருந்த நிலை
மாறி சிறு குடும்பமே மனித சமூகத்தின் அடித்தளம் என்று அமைந்தன.
இந்த சூழலானது பெண்கள் என்றும் வீட்டிற்குள்ளே என்றும் ஆண்கள்
வெளி உலகிலே என்று கொடிகட்டி கோலோச்சிவந்த ஆணாதிக்க சமூக
மதிப்பீடுகளை சுக்கு நூறாக வெடித்துச் சிதற வழிவகை செய்தது.
இவ்வாறு தொழிற் புரட்சியின் விளைவாக பெண்களின் உலகம்
வீட்டிற்குள் மட்டுமல்ல வெளி உலகிலும் கூடத்தான் என்ற புதிய
வரையறை கால்கொள்ளத் தொடங்கியது.

## 5. பெண்கல்வியின் தாக்கம் :

ஐரோப்பிய நாடுகளில் 18-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட சில சமூக,
பொருளாதார, மத, அரசியல் மாற்றங்கள் பெண்கள் வீட்டைவிட்டு
வெளியே வந்து தொழில்களில் ஈடுபட வாய்ப்பளித்தன. இவற்றில்
முதன்மையானது பெண்கள் பெற்ற கல்வியறிவு ஆகும். அதுவரை பெண்
கல்வி என்பது ஐரோப்பிய நாடுகளில் உயர்குடிமக்களின் சிறப்புரிமை
யாகவே கருதப்பட்டுவந்தது.

இந்தநிலை மாறிய பிறகு பெண்கல்வி என்பது பெண்கள் தங்கள்
குடும்பப் பொறுப்புகளை ஏற்று நடத்தத் தேவையான அறிவாகக் கருதப்
பட்டது'. அமெரிக்காவில் தோன்றிய எவாஞ்சலிகர் இயக்கத்தின்
விளைவாக கல்வி பெண்களுக்குத் தேவையான ஒன்றாகக் கருதப்
பட்டது. மேலும் பெண்கள் தற்சார்புடன் வாழ கல்வி அவசியமான
ஒன்றாக ஆனது. இவ்வாறு பெண்கல்வியின் விளைவாக பெண்ணியம்
வலுப்பெற்றது.

## 6. சோசலிசக் கருத்துகள் :

மேற் சொன்னவைகள் தவிர சோசலிசக் கருத்துக்களும்
பெண்ணிய விடுதலைக்கான காரணமாக அமைந்தன. சோசலிச
சமூகத்தைக் கட்டமைக்க வீறு கொண்டு எழுந்த சோசலிச சிந்தனை
யாளர்கள் பெண்களின் நிலை குறித்துக் கூறுகையில் ஆணும், பெண்ணும்
சமம் என்று கூறியதுடன் பெண்கள் சில வகைகளில் ஆண்களை விட
உயர்வானவர்கள் என்றும் குறிப்பிட்டனர். இப்படிக் கூறியவர்களில்
செயின்ட் சிமோன், ராபர்ட் ஒவன், சார்லஸ் பூரியர், ஹம்ப்ரே நாய்ஸ்
போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இவர்களில் செயின்ட்
சிமோன் மற்றும் சார்லஸ் பூரியர் ஆகியோரது கருத்துக்கள் பெண்ணிய
விடுதலைக்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தன.

# 15. பெண்ணடிமைக்கு காரணமான சமுதாய சீர்கேடுகள்

## (SOCIAL EVILS IN INDIA)

இந்திய சமுதாயத்தில் பெண்களின் நிலை பற்றி ஆய்வு செய்யும் போது, பெண்கள் ஒவ்வொரு நிலையிலும் பல்வேறு விதமான சமூகக் கொடுமைகளுக்கு உள்ளானார்கள் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. இத்தகைய கொடுமைகளுக்கு சமூகத்தின் ஆதரவும், மதங்களின் ஆதரவும் இருந்தது குறிப்பிடத்தக்கது ஆகும். இப்படிப்பட்ட சில கொடுமைகள் சமூகத்தில் உயர்நிலையிலுள்ள மக்களின் கலாச்சாரமாகவும், அவர்களின் மேம்பட்ட வாழ்வின் அளவுகோலாகவும் கருதப்பட்டது. பெண்களுக்கு இழைக்கப்பட்ட இத்தகைய கொடுமைகள் சமுதாயச் சீர்கேடுகளாக கருதப்பட்டன. இவை ஆணாதிக்கத்தை நிலைநிறுத்துபவையாகவும் இருந்தன. இவை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் வரையிலும் இந்தியாவில் காணப்பட்டன. பெண்ணடிமைக்கு காரணமான அவைகளை விரிவாகக் காணலாம்.

### 1. பெண் சிசு கொலை :

கருவிலுள்ள மற்றும் பிறந்தவுடன் பெண் குழந்தைகள் கொல்லப்படுவதையே பெண் சிசு கொலை என்று சொல்லப்படுகிறது. பண்டைக்காலம் முதல் இந்தியாவில் பெண்சுசுகொலை இருந்து வருகிறது. வடஇந்தியாவில் பெண்குழந்தைகளை ஆற்றில் தூக்கிப் போட்டுவிடுவார்கள். தமிழ்நாட்டில் குறிப்பாக தென் மாவட்டங்களில் பெண்குழந்தை பிறந்தவுடன் எருக்கன்பால், கள்ளிப்பால், பூச்சி மருந்து போன்றவைகளைக் கொடுத்து கொன்றுவிடுகின்றனர். இந்த பெண் சிசு கொலைகளை பெரும்பாலும் அக்குழந்தையின் உறவினர்களே புரிந்து வந்தனர்.

பெண்சிசு கொலைக்கு முக்கியக் காரணம் சமூகத்தில் நிலவி வரும் ஆணாதிக்கமே ஆகும். மேலும் திருமணச் செலவும், வரதட்சணை கொடுமை, பராமரிப்புச் செலவுகள், வறுமை ஆகியவையும் முக்கியக் காரணங்கள் ஆகும். இக்காரணங்களால் பெற்றவர்களே பெண்குழந்தைகளை ஒரு சுமையாகக்கருதினர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது பெண்சிசுக் கொலைகள் உத்திரப்பிரதேசம், பஞ்சாப், குஜராத், ராஜஸ்தான் முதலிய இடங்களில் அதிகமாகக் காணப்பட்டன. இதனைத்

தடுப்பதற்கான முயற்சிகள் ஆங்கிலேயர் ஆட்சிக்கா... மேற்கொள்ளப்பட்டது. இந்த பெண் சிசு கொலையினால் பெ... சமுதாயத்தின் தாழ்நிலையில் வைக்கப்பட்டனர்.

## 2. இளவயது திருமணம் :

இந்தியாவில் நிலவிய மற்றொரு சமுதாயச் சீர்கேடு இள... திருமணமாகும். இளவயது திருமணம் என்பது மண வாழ்க்கை எ... என்ன என்பதைக்கூட அறிய இயலாத இளம் பருவத்தில் ஆண் கு... களுக்கும் பெண் குழந்தைகளுக்கும் திருமணம் நடத்தி வைத்தல் ஆ... இந்த இளவயது திருமணமுறை இந்தியாவின் பெரும்பான்மை... இடங்களில் இருந்து வந்தது. இளம்வயது திருமணத்தால் அதிக... பாதிக்கப்பட்டது பெண்குழந்தைகளே ஆவர்.

சிறுவயதிலேயே குடும்பச் சுமையை ஏற்றல், ... வளர்ச்சியடையும் முன்பே தாய்மையடைந்து அதன் விளைவாக... வலிமை குன்றிப்போதல், உடல் ஆரோக்கியம் குன்றி பி... பேற்றின் போது இறத்தல், வலுக்கட்டாயப் பாலுறவினால் ம... உடலும் பாதிக்கப்படுதல் போன்ற கொடுமைகளுக்கு உள்ளா... பெண்கள். இந்தக் கொடுமைகளிலிருந்து பெண் குழந்தைகளை... காக ஆங்கில அரசு ஒரு பெண்ணுக்கு பத்து வயது அடையும் மு... திருமணம் செய்யக் கூடாது என்று தடைவிதித்தது. இந்த இளம்... திருமணமும் பெண்கள் ஆண்களைச் சார்ந்தே இருக்கும் நிலை... ஏற்படுத்தியிருந்தது.

## 3. பெண்கள் தனிமைப் படுத்தப்படுதல் :

பெண்களைத் தனிமைப் படுத்தி வைத்தல் என்ற செ... பழக்கம் இந்தியாவின் எல்லாப் பகுதிகளுக்கும் காணப்பட்டது. ... முக்கியக் காரணம் பெண்ணும் அவளது கற்பும் ஆண்களால் பாது... படவேண்டியவை என்று நிலவிய சமூக நியதியே ஆகும். இ... பெண்கள் மற்றவர்கள் கண்களில் படாமல் தனிமைப்படுத்தப்... வீட்டின் உட்புறத்தில் வைக்கப்பட்டார்கள். அதாவது பெண்... உலகம் வீட்டின் உட்புறமே என்பது நடைமுறைப்படுத்தப்ப... ஆனால் இப்படிப்பட்ட கொடுமைகள் உயர்குல மக்களிட... அரசகுலத்திலுமே காணப்பட்டது. இப்படிப்பட்ட கொடுமை... உட்படுத்தப்பட்ட பெண்கள் மனரீதியாகப் பாதிக்கப்பட்டனர். ... ரீதியாகவும் பாதிக்கப்பட்டனர். தங்கள் ஆயுள் முழுவதும் வீ... குள்ளே வாழும் நிலை ஏற்பட்டது.



## 4. பெண்கல்வி மறுக்கப்பட்டமை :

இளவயது திருமணம், பெண்களை வீட்டிற்குள்ளேயே அடைத்து வைக்கும் பழக்கம், குடும்ப பாரம்பரியம்போன்றவைகள் பெண்கள் கல்வி கற்கத் தடைக் கற்களாக இருந்தன. பெண்கள் வேலைக்குச் சென்று பொருளீட்டுவது அக்குடும்பத்திற்கு இழுக்காக கருதப்பட்டது. மேலும் இது ஆணாதிக்கத்திற்கு எதிராகக் கருதப்பட்டது. ஆண்களின் கட்டுப்பாட்டிற்குள்தான் பெண்கள் செயல்படவேண்டும் என்ற நியதி பெண்களுக்கு கல்வியளிப்பதின் மூலம் சீர்குலைந்து விடும் என்று கருதப்பட்டது. எனவே கல்வி அறிவற்ற பெண்கள் ஆண்களின் கொடுமைகளை எந்த மறுப்பும் காட்டாமல் ஏற்றுக்கொண்டு வாழ்ந்து வந்தனர். இந்த நிலை இந்தியாவில் பரவலாக காணப்பட்டது.

## 5. பலதார மணம் :

ஒரு ஆண் பல பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் முறையே பலதார மணம் ஆகும். இது பெண்களின் தாழ்ந்த நிலையையும் ஆதரவற்ற நிலையையுமே காட்டுகிறது. இந்தநிலை இந்தியாவின் பல பகுதிகளில் காணப்பட்டது. திருமணம் ஆண் ஒரு பெண் தாய்மை அடைந்து குழந்தை பெறாவிட்டாலும், ஆண் குழந்தை ஒன்றை அந்தப் பெண் பெறாவிட்டாலும் அவளது கணவர் மற்றொரு பெண்ணை மணக்க உரிமை பெறுகிறான். மேலும் ஒரு ஆண் எந்தக் காரணமும் இல்லாமல் ஆசைக்காக பல பெண்களை மணந்து கொள்வதும் உண்டு. இது சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆனால் அதே சமயம் கணவன் எவ்வளவு கெட்டவனாக இருந்தாலும் அவன் மனைவி பிற ஆண் மகன் ஒருவனை உடலாலும் மனதாலும் தீண்டாமல் உண்மை உள்ளவளாக வாழ வேண்டும் என்ற நியதி வகுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு கற்பு என்ற நெறி ஆண்களுக்கு ஒரு நியதியையும், பெண்ணுக்கு ஒரு நியதியையும் கற்பித்தது. இவ்வாறான நியதிகளாலும் வாழ்க்கைமுறைகளாலும் பெண்ணடிமைத் தனம் வேரூன்றி இருந்தது. பெண்களுக் கென்று தனியான ஒரு வாழ்க்கை இல்லாமல் போய்விட்டது. ஆண்களின் ஆதிக்கத்திலும் ஆதரவிலுமே வாழவேண்டிய கட்டாயநிலை இருந்தது.

## 6. தேவதாசி முறை :

இது இந்திய சமுதாயத்தில் நிலவி வந்த ஒரு பெண்ணடிமை முறையாகும். இது ஆண்களின் வசதிக்காக ஏற்பட்ட முறையாகும். இதன்படி சமூகத்தில் சில பெண்கள் கடவுளுக்குச் சேவை செய்தல் என்ற

தடுப்பதற்கான முயற்சிகள் ஆங்கிலேயர் ஆட்சிக்கா... மேற்கொள்ளப்பட்டது. இந்த பெண் சிசு கொலையினால் பெ... சமுதாயத்தின் தாழ்நிலையில் வைக்கப்பட்டனர்.

## 2. இளவயது திருமணம் :

இந்தியாவில் நிலவிய மற்றொரு சமுதாயச் சீர்கேடு இள... திருமணமாகும். இளவயது திருமணம் என்பது மண வாழ்க்கை ... என்ன என்பதைக்கூட அறிய இயலாத இளம் பருவத்தில் ஆண் கு... களுக்கும் பெண் குழந்தைகளுக்கும் திருமணம் நடத்தி வைத்தல் ... இந்த இளவயது திருமணமுறை இந்தியாவின் பெரும்பான்... இடங்களில் இருந்து வந்தது. இளம்வயது திருமணத்தால் அதி... பாதிக்கப்பட்டது பெண்குழந்தைகளே ஆவர்.

சிறுவயதிலேயே குடும்பச் சுமையை ஏற்றல், ... வளர்ச்சியடையும் முன்பே தாய்மையடைந்து அதன் விளைவாக... வலிமை குன்றிப்போதல், உடல் ஆரோக்கியம் குன்றி பி... பேற்றின் போது இறத்தல், வலுக்கட்டாயப் பாலுறவினால் ... உடலும் பாதிக்கப்படுதல் போன்ற கொடுமைகளுக்கு உள்ளான... பெண்கள். இந்தக் கொடுமைகளிலிருந்து பெண் குழந்தைகளை... காக ஆங்கில அரசு ஒரு பெண்ணுக்கு பத்து வயது அடையும் மு... திருமணம் செய்யக் கூடாது என்று தடைவிதித்தது. இந்த இளம்... திருமணமும் பெண்கள் ஆண்களைச் சார்ந்தே இருக்கும் நிலை... ஏற்படுத்தியிருந்தது.

## 3. பெண்கள் தனிமைப் படுத்தப்படுதல் :

பெண்களைத் தனிமைப் படுத்தி வைத்தல் என்ற ... பழக்கம் இந்தியாவின் எல்லாப் பகுதிகளுக்கும் காணப்பட்டது. ... முக்கியக் காரணம் பெண்ணும் அவளது கற்பும் ஆண்களால் பாது... படவேண்டியவை என்று நிலவிய சமூக நியதியே ஆகும். இ... பெண்கள் மற்றவர்கள் கண்களில் படாமல் தனிமைப்படுத்த... வீட்டின் உட்புறத்தில் வைக்கப்பட்டார்கள். அதாவது பெண்... உலகம் வீட்டின் உட்புறமே என்பது நடைமுறைப்படுத்தப்ப... ஆனால் இப்படிப்பட்ட கொடுமைகள் உயர்குல மக்களி... அரசகுலத்திலுமே காணப்பட்டது. இப்படிப்பட்ட கொடு... உட்படுத்தப்பட்ட பெண்கள் மனரீதியாகப் பாதிக்கப்பட்டனர். ... ரீதியாகவும் பாதிக்கப்பட்டனர். தங்கள் ஆயுள் முழுவதும் வீ... குள்ளே வாழும் நிலை ஏற்பட்டது.



## 4. பெண்கல்வி மறுக்கப்பட்டமை :

இளவயது திருமணம், பெண்களை வீட்டிற்குள்ளேயே அடைத்து வைக்கும் பழக்கம், குடும்ப பாரம்பரியம்போன்றவைகள் பெண்கள் கல்வி கற்கத் தடைக் கற்களாக இருந்தன. பெண்கள் வேலைக்குச் சென்று பொருளீட்டுவது அக்குடும்பத்திற்கு இழுக்காக கருதப்பட்டது. மேலும் இது ஆணாதிக்கத்திற்கு எதிராகக் கருதப்பட்டது. ஆண்களின் கட்டுப்பாட்டிற்குள்தான் பெண்கள் செயல்படவேண்டும் என்ற நியதி பெண்களுக்கு கல்வியளிப்பதின் மூலம் சீர்குலைந்து விடும் என்று கருதப்பட்டது. எனவே கல்வி அறிவற்ற பெண்கள் ஆண்களின் கொடுமைகளை எந்த மறுப்பும் காட்டாமல் ஏற்றுக்கொண்டு வாழ்ந்து வந்தனர். இந்த நிலை இந்தியாவில் பரவலாக காணப்பட்டது.

## 5. பலதார மணம் :

ஒரு ஆண் பல பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் முறையே பலதார மணம் ஆகும். இது பெண்களின் தாழ்ந்த நிலையையும் ஆதரவற்ற நிலையையுமே காட்டுகிறது. இந்தநிலை இந்தியாவின் பல பகுதிகளில் காணப்பட்டது. திருமணம் ஆண் ஒரு பெண் தாய்மை அடைந்து குழந்தை பெறாவிட்டாலும், ஆண் குழந்தை ஒன்றை அந்தப் பெண் பெறாவிட்டாலும் அவளது கணவர் மற்றொரு பெண்ணை மணக்க உரிமை பெறுகிறான். மேலும் ஒரு ஆண் எந்தக் காரணமும் இல்லாமல் ஆசைக்காக பல பெண்களை மணந்து கொள்வதும் உண்டு. இது சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆனால் அதே சமயம் கணவன் எவ்வளவு கெட்டவனாக இருந்தாலும் அவன் மனைவி பிற ஆண் மகன் ஒருவனை உடலாலும் மனதாலும் தீண்டாமல் உண்மை உள்ளவளாக வாழ வேண்டும் என்ற நியதி வகுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு கற்பு என்ற நெறி ஆண்களுக்கு ஒரு நியதியையும், பெண்ளுக்கு ஒரு நியதியையும் கற்பித்தது. இவ்வாறான நியதிகளாலும் வாழ்க்கைமுறைகளாலும் பெண்ணடிமைத் தனம் வேரூன்றி இருந்தது. பெண்களுக் கென்று தனியான ஒரு வாழ்க்கை இல்லாமல் போய்விட்டது. ஆண்களின் ஆதிக்கத்திலும் ஆதரவிலுமே வாழவேண்டிய கட்டாயநிலை இருந்தது.

## 6. தேவதாசி முறை :

இது இந்திய சமுதாயத்தில் நிலவி வந்த ஒரு பெண்ணடிமை முயையாகும். இது ஆண்களின் வசதிக்காக ஏற்பட்ட முறையாகும். இதன்படி சமூகத்தில் சில பெண்கள் கடவுளுக்குச் சேவை செய்தல் என்ற பெயரால் விலை மகளிராக வாழ்ந்து வந்தனர். அதாவது மதத்தின்

# 18. பெண்கள் வாக்குரிமைப் போராட்டம்

## (STRUGGLE FOR WOMEN'S SUFFRAGE)

ஜனநாயக முறையில் நிர்வாகம் நடைபெறும் ஒரு நாட்டில் ஆண், பெண் இருவரின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு வாக்குரிமை முக்கியமானதாகக் கருதப்படுகிறது. முக்கியமாக சார்ந்து வாழும் மற்றும் ஒதுக்கப்பட்ட நிலையிலிருந்த பெண்கள் இனத்திற்கு இந்த வாக்குரிமை மிகவும் அவசியமானதாகும். இந்தியாவில் வாக்குரிமை மூலம் அரசியல் உரிமை பெறுவதற்காக பெண்கள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒரு இயக்கத்தை ஆரம்பித்தனர்.

ஒரு நாட்டின் அரசியல் நடவடிக்கைகளில் பங்கு பெறுவதற்கு வாக்களிக்கும் உரிமை பெறுவதே அடிப்படையாகும். ஆரம்பத்தில் அரசியலில் ஈடுபடுவது, அரசியல் கூட்டங்களில் பங்கேற்பது எல்லாம் ஆண்களுக்கு மட்டுமே என்ற நிலை இருந்தது. பெண்மை அரசியலில் பங்கேற்பது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனவேதான் இந்தியாவில் இருந்த 'இந்திய பெண்கள் சங்கம்' (Womens India Association) பெண்கள் அரசியல் பயிற்சி பெறுவது அவசியம் என்று கருதியது. எந்த கட்சியையும் சாராமல் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட தீர்மானித்தது. அத்துடன் பெண்கள் அரசியல் உரிமைகள் பெறுவதற்காக எல்லாப் பெண்களின் கவனத்தையும் ஈர்க்க முயற்சித்தது.

### மார்க்ரட் கசின்ஸ் (Margaret Cousins)

மேற்கத்திய நாடுகளில் நடைபெற்ற பெண்கள் வாக்குரிமை இயக்கங்களில் நெருங்கிய தொடர்புடையவர்கள் அன்னிபெசன்ட் மற்றும் மார்க்ரட் கசின்ஸ் ஆகியோர் ஆவர். இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் நடைபெற்ற பெண்கள் வாக்குரிமை இயக்கங்களின் முன்னோடி ஆவர். இவர்கள் இருவரும் இந்திய அரசியல் போராட்டங்களில் தங்களை இணைத்துக் கொண்டனர். முக்கியமாக பெண்களுக்கான உரிமைகளைப் பெற அக்கறை காட்டினார்கள். மேற்கத்திய நாடுகளில் பெண்கள் பெற்றுள்ள உரிமைகளை இந்தியப் பெண்களும் பெற வேண்டும் என்று விரும்பினார்கள்.

இந்தியா ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் இருந்த போது பெண்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்க ஆண்கள் தயாராக



இருந்தாலும் அதனை 'சுயாட்சி இயக்கம்' (Home rule movement) மூலமாகவே பெற முடியும் என்று நம்பினார்கள். எனவே தான் தேசியவாதிகள் முதலில் சுயாட்சி பின்னர் பெண்களின் உரிமை பற்றி பார்க்கலாம் என்று கருதினர். ஆனால் அப்போதிருந்த பெண்ணியக்கத் தலைவர்கள் தேசிய இயக்கமும் பெண்ணுரிமை இயக்கமும் சேர்ந்தே நடைபெற வேண்டும் என்று விரும்பினார்கள்.

## இந்திய பெண்கள் வாக்குரிமை இயக்கம் :

### முதல் கட்டம் : 1917 – 1926

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பெண்கள் வாக்குரிமை இயக்கம் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. முதல் கட்டத்தில் (1917-1926) பெண்கள் வாக்குரிமை பெறுதல், சட்டமன்ற உறுப்பினர்களாவதற்கான தகுதி பெறுதல் போன்ற உரிமைகள் பற்றி இயக்கம் செயல்பட்டது. இரண்டாவது கட்டத்தில் (1926 - 1947) வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை, சட்டமன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல் போன்ற உரிமைகளைப் பெறுவதற்கான இயக்கமாக மாறியது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதற்கு கடுமையான எதிர்ப்பு இருந்தது. பெண்களுக்கு வாக்குரிமை அளிப்பது இயற்கைக்கு எதிரானது என்றும் பெண்மைக்கு எதிரானது என்றும் கூறப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக அப்போதிருந்த கவர்னர் கர்சான் பிரபு பெண்களுக்கு வாக்குரிமை அளித்தால் நாம் இந்தியாவையே இழந்து விடுவோம் என்று கூறி பெண்கள் வாக்குரிமை பெறுவதற்கு வெளிப்படையாக தனது எதிர்ப்பைத் தெரிவித்தார்.

## இந்தியாவில் பெண்கள் வாக்குரிமை இயக்கத்தின் ஆரம்பம் :

இந்தியாவில் அரசியல் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்துவதற்காக அப்போதைய இந்தியா அமைச்சர் மாண்டேகு பிரபு 1917, டிசம்பர் 1ல் சென்னை வந்தார். அப்போது சரோஜினி நாயுடு தலைமையில் 14 பெண்கள் அனைத்திந்திய பெண்கள் சார்பாக பாலின சமத்துவத்தின் அடிப்படையில் இந்தியாவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்று ஒரு கோரிக்கை மனுவை மாண்டேகுவிடம் சமர்ப்பித்தனர். இதுவே இந்தியாவில் பெண்கள் வாக்குரிமை பெறும் இயக்கத்தின் தொடக்கமாக அமைந்தது. இதிலிருந்துதான் இந்திய பெண்கள் சங்கம் பெண்கள் வாக்குரிமை பெறுவதிலும், எல்லா நிர்வாக

அமைப்புகளுக்கான தேர்தல்களில் பாலின அடிப்படையில் காணப்பட்ட தகுதியின்மையை நீக்குவதிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டது.

இந்திய தேசிய காங்கிரசுக்கு பெண்கள் வாக்குரிமை பெறுவதற்கு சாதகமான ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றும் பெண்கள் ஒரு வேண்டுகோள் விடுத்தனர். அதன் படி 1917-ல் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பாலின அடிப்படையில் பெண்களுக்கு தகுதியிழப்பு ஏற்படுத்தக் கூடாது என்றும் தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புகளுக்கு ஆண்களைப் போல பெண்களுக்கும் சமமாக வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு இந்திய தேசிய காங்கிரஸ் ஆண்களுக்கு சமமாக பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டது. 1918ல் முஸ்லீம் லீகும் பெண்களுக்கு ஓட்டுப் போடும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை இயற்றியது.

## சவுத் பாரோ குழு :

1918ல் இந்தியாவில் வாக்குரிமை தொடர்பான பிரச்சனைகளை பற்றி ஆய்வு செய்ய சவுத்பாரோ குழு ஒன்று வந்தது. பல பெண் இயக்கத் தலைவர்கள் இந்தக் குழுவை சந்தித்து பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டியதின் அவசியத்தை எடுத்துரைத்தனர். இந்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. 1919ல் இந்தக் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தது. இதில் இந்திய சமுதாயத்தில் பெண்கள் தனிமைப் படுத்தப்படும் பழக்கம் ஒழிக்கப்படும் வரையில் அவர்களுக்கு வாக்குரிமை வழங்குவதில் எந்த பயனும் ஏற்படாது என்று தெரிவித்தது. எனவே இந்தியாவின் பல பகுதிகளில் பெண்கள் இயக்கங்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தன. வாக்குரிமை வழங்க வேண்டும் என்ற தீர்மானங்கள் இயற்றி இந்தியாவுக்கான வெளிஉறவு செயலருக்கு தந்தி மூலம் தங்கள் கருத்தை தெரிவித்தனர்.

## லண்டனில் பெண்கள் வாக்குரிமைக்கான கோரிக்கை:

இந்திய பெண்கள் சங்கத்தின் சார்பாக சரோஜினி நாயுடு, அன்னிபெசன்ட், ஹீராபாய் டாடா ஆகியோர் கொண்ட குழு ஒன்று லண்டனில் இருந்த கூட்டு பொறுக்கு குழுவிடம் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கி உத்தரவிட வேண்டும் என்று ஒரு மனுவை சமர்ப்பித்தனர். அதேபோல இந்திய பெண்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் இந்தக் குழுவுக்கு கோரிக்கை தந்தி அனுப்பினார்.



இங்கிலாந்தில் பல இடங்களில் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டது. இங்கிலாந்து பெண்கள் சங்கத்தினர் இந்திய பெண்களுக்கு வாக்குரிமை வழங்க முழு ஆதரவு அளித்தனர்.

இதன் விளைவாக இந்தியாவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதற்கான தீர்மானம் நிறைவேற்ற ஒவ்வொரு மாகாண கவுன்சிலுக்கும் இங்கிலாந்து பாராளுமன்றம் உரிமை வழங்கியது. இவ்வாறு மாகாண கவுன்சில்களுக்கு உரிமை வழங்கப்பட்டதால் இந்திய பெண்கள் சங்கத்தினர்கள் இப்போது மாகாண சட்டமன்றங்கள் மீது தங்கள் கவனத்தை திருப்பினர்.

## சென்னை மாகாணத்தில் பெண்கள் வாக்குரிமை சட்டம் நிறைவேற்றப்படல் :

இந்திய பெண்கள் சங்கத்தினர் சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினர்களிடம் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கி தீர்மானம் நிறைவேற்றும்படி கேட்டுக் கொண்டார்கள். அதன்படி சென்னை மாகாண சட்டமன்றத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதற்கான தீர்மானம் ஒன்றை திவான் பக்தூர் M. கிருஷ்ணன் நாயர் என்பவர் கொண்டு வந்தார். அதன்படி ஆண்களுக்கு வழங்கப்பட்டிருந்த வாக்குரிமை அதே அளவில் பெண்களுக்கும் வழங்கப்பட்டு தீர்மானம் 1921ல் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு இந்தியாவிலேயே சென்னை மாகாண சட்டமன்றத்தில் தான் முதன் முதலாக பெண்களுக்கு வாக்குரிமை வழங்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## சட்டமன்ற உறுப்பினர்களாகப் போட்டியிடும் உரிமை பெறுதல் :

சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்கு வாக்களிக்கும் உரிமை பெற்றுவிட்டாலும், இன்னும் சட்டமன்ற உறுப்பினர்களாக தேர்தலில் போட்டியிடும் உரிமை வழங்கப்படவில்லை. எனவே 1921-ம் ஆண்டுக்குப் பிறகு பெண்கள் இயக்கத்தினர் சட்டமன்றத்திற்குள் தேர்தல் மூலமோ, நியமனம் மூலமோ நுழைய முயற்சிகளை மேற் கொண்டனர். இதற்காக சென்னையில் உள்ள பெண்கள் பல பொதுக்கூட்டங்களை நடத்தினர். மங்களாம்பிகை என்பவர் தலைமையில் பெண்கள் இயக்கத்தின் பிரதிநிதிகள் சென்னை மாகாண ஆளுநரை சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை அளித்தனர். 1926-ல் மறுபடியும் திவான் பகதூர் M. கிருஷ்ணன் நாயர் சென்னை சட்டமன்றத்தில் பெண்கள் தேர்தல் மூலமோ, நியமனம் மூலமோ சட்டமன்ற உறுப்பினர்களாக தேர்வு

ரிசர்வ் தொகுதியிலிருந்து 41 பெண்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 194 ல் நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில் சென்னை மாகாண சட்டமன்றத்திற்கு 12 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்பில் வயது வந்தோருக்கான வாக்குரிமை நடைமுறைப்படுத்தப்பட்டது. பெண்களுக்கான தனி இட ஒதுக்கீடு இதன்மூலம் ஒழிக்கப்பட்டது. வாக்குரிமையிலும், அரசியல் நடவடிக்கைகளிலும் பெண்களுக்கு சமஉரிமை வழங்கப்பட்டுள்ளது. தற்போது இந்தியாவில் அரசியல் நடவடிக்கைகளில் பெண்களின் பங்கு அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும்.

# 19. பெண்ணுரிமைப் பாதுகாப்புச் சட்டங்கள்

## (PROTECTION OF WOMEN'S RIGHT ACTS)

பெண்கள் சமுதாயத்தின் பிரிக்க முடியாத மிக முக்கியமான உறுப்பினர்கள் ஆவார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்களுக்கு தனி இடம் உண்டு. பெண்களின் உரிமைகள் மனித உரிமைகயே ஆகும். எனவே சமுதாயத்தில் பெண்கள் பாதுகாக்கப்படவேண்டும். இந்தியாவில் பெண்ணடிமைத்தனம் வளர்வதற்கு பண்டைக்கால வேதங்கள், புராணங்கள், மனு சாஸ்திரங்கள் மற்றும் தர்மசாஸ்திரங்கள் போன்றவையே காரணம். இந்த இலக்கியங்களால் பெண்களின் உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டன. சமுதாயக் கொடுமைகளான சதி, குழந்தை திருமணம், வரதட்சணைக் கொடுமை, பலதார மணம் போன்றவைகளால் பெண்கள் இழிவான நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து இந்தியாவில் தோன்றிய சமூக சீர்திருத்த வாதிகளும், சமூக சீர்திருத்த இயக்கங்களும் பெண்களின் மறுவாழ்வுக்கு வ்ழிவகுத்தது. இந்த இயக்கங்களால் பெண்விடுதலைக்கான பல சட்டங்கள் இயற்றப்பட்டன. பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை மாற்றவும், பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் இந்திய சுதந்திரத்திற்கு முன்பும் பின்பும் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அவைகளை விரிவாகக் காணலாம்.

### 1. சதி தடைச் சட்டம் : Prevention of Sati Act, 1923

சதி அல்லது உடன்கட்டை ஏறும் பழக்கம் என்பது கணவரின் சிதையில் மனைவியும் உயிருடன் எரிக்கப்படுதல் ஆகும். பெண்களை உயிருடன் எரிக்கும் இந்தப் பழக்கம் சமுதாயத்தில் நிலவிய மிகப் பெரிய கொடுமையாகும். இந்திய மறுமலர்ச்சியின் தந்தை என்று அழைக்கப்படும் ராஜாராம் மோகன்ராய் சதிக்கொடுமையை எதிர்த்து பிரச்சாரம் செய்தார். இவரது புரட்சிக் கருத்தை ஏற்றுக் கொண்ட கவர்னர் வில்லியம் பெண்டிங் பிரபு 1929- டிசம்பர் - 4ம் தேதி சதி ஒழிப்புச் சட்டம் கொண்டுவந்தார்.

இந்தச் சட்டத்தின்படி சதி மேற்கொள்ள உடந்தையாக இருப்பவர்கள் கொலைக் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டது. இந்த சட்டத்தை எதிர்த்து சமய பழமை வாதிகள் பிரிவு கவுன்சிலில் மேல்

விண்ணப்பம் செய்தனர். ஆனால் அது தோல்வியடைந்தது. இந்த தடைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு உடன் கட்டை ஏறுதல் என்ற சமுதாயச்சீர்கேடு அகற்றப்பட்டது. ராஜஸ்தானில் ரூப்கன்வர் என்ற பெண் உடன்கட்டை ஏறியதை அடுத்து, உடன்கட்டை ஏறுவதை தடைசெய்யும் மற்றொரு சட்டம் 1987-ல் இயற்றப்பட்டது.

## 2. விதவை மறுமணச் சட்டம் : Widow remarige Act,1856

இந்திய சமுதாயத்தில் நிலவிய குழந்தை திருமணத்தால் இள விதவைகளின் எண்ணிக்கை அதிகரித்தது. அவர்களின் வாழ்வு முறையும் சோகமயமானதாக அமைந்தது. இதனை எதிர்த்து சமூக சீர்திருத்த வாதிகள் குரல் கொடுத்தனர். விதவை மறுமணத்தை ஆதரித்தவர் ஈஸ்வர சந்திர வித்யாசாகர் என்ற சமூகச் சீர்திருத்தவாதியின் முயற்சியால் 1856-ல் விதவைகள் மறுமணச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் விதவைகள் மறுமணத்தை சட்டபூர்வமாக்கியது. அத்திருமணங்கள் சட்டபூர்வமானவை என்று அறிவிக்கப்பட்டது. இச்சட்டத்தின்படி ஈஸ்வர சந்திரவித்யாசாகர் தனது மகனுக்கு ஒரு விதவைப் பெண்ணை கல்கத்தாவில் வைத்து திருமணம் செய்து ஒரு புரட்சியை ஏற்படுத்தினார்.

## 3. பெண்சிசுக் கொலைத் தடைச் சட்டம் : 1870

பெண்குழந்தை பிறந்தவுடன் கொலை செய்யும் கொடிய பழக்கம் இந்திய சமுதாயத்தில் நடைமுறையில் இருந்தது. இந்த கொடிய பழக்கத்தை தடை செய்ய ஆங்கில அரசு தீவிரமாக முயற்சி எடுத்தது. அதன்படி 1870-ல் குழந்தைகளைக் கொல்லுவதைத் தடை செய்யும் சட்டத்தை இயற்றியது. இந்தச் சட்டப்படி குழந்தைகளின் பிறப்பையும் இறப்பையும் பெற்றோர் பதிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டனர்.

## 4. உடன்படு வயது சட்டம் (or) இளம் வயது திருமண சட்டம் : The Age of consent Bill. 1891

இது குழந்தைத்திருமணத்திற்கு எதிரான சட்டமாகும். அந்த காலத்தில் 5 வயது முதல் 10 வயதிலான பெண் குழந்தைகள் திருமணம் செய்து வைக்கப்பட்டனர். இந்த சமுதாய சீர்கேட்டை பிரம்மசமாஜ், ஆரியசமாஜ் தலைவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். எனவே ஆங்கில அரசு 1860-ல் பத்து வயதுக்கு குறைந்த மனைவியருடன் உடல் உறவு கொள்வதை இந்திய குற்றவியல் சட்டத்தின் மூலம் தடை செய்தது.



கேசவ்சந்திரசென் பிரம்மசமாஜத்தில் ஆண், பெண் இருவர் சம்மதத்துடன் திருமணம் நிச்சயிக்கும் பழக்கத்தைக் கொண்டு வந்தார். பின் இவர் 1872-ல் பெண்களின் திருமண வயது 14 என்றும் ஆண்களின் திருமண வயது 18 என்றும் சட்டம் கொண்டுவந்தார். இது பிரம்மசமாஜ் சட்டம் ஆகும். இதன்பிறகு ஆங்கில அரசு 1891-ல் உடன்படு வயதுச் சட்டத்தை இயற்றியது. இந்தச் சட்டத்தின்படி 12 வயதுக்கு குறைவான மனைவியுடன் உடலுறவு கொள்வது குற்றமாக அறிவிக்கப்பட்டது. இதுவே சாரதா சட்டம் இயற்றப்பட காரணமானது.

## 5. சாராதா சட்டம் : 1929

1891-ல் ஏற்படுத்தப்பட்ட இந்து திருமண வயது நிர்ணயச் சட்டத்திற்குப் பிறகும் குழந்தை திருமணம் நடைமுறையில் இருந்தது. 1927-ல் ஹர்பிலாஸ் சாரதா (Harbilas Sarada) என்பவரால் சட்டமன்றத்தில் இந்து திருமணத்தை வரன்முறைப் படுத்துவதற்கான மசோதா கொண்டு வரப் பட்டு சட்டமாக இயற்றப்பட்டது. இவர் பெயராலே சாராதா சட்டம் என்றழைக்கப்படுகிறது. இச்சட்டத்தின்படி பெண்களின் திருமண வயது 14 என்றும் ஆண்களின் திருமண வயது 18 என்றும் நிர்ணயிக்கப்பட்டது. இந்தச் சட்டம் 1978-ல் திருத்தம் செய்யப்பட்டு பெண்ணுக்கு 18 என்றும் ஆணுக்கு 21 என்றும் நிர்ணயிக்கப்பட்டது. மேலும் இந்த திருமணங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டது.

## 6. தேவதாசி ஒழிப்புச் சட்டம் :

சில பெண்கள் கோவில்களில் இறைவனுக்கு அடியார்களாக அர்ப்பணம் செய்யப்பட்டனர். இவர்கள் இறைவனுக்கு தாலிகட்டி இறைவனின் மனைவியாக்கப்பட்டனர். இதற்குப் பொட்டுக்கட்டுதல் என்றும் பெயர். இந்த தேவதாசி முறையை ஒழிக்க டாக்டர் முத்து லெட்சுமி ரெட்டி முயற்சி எடுத்தார். மக்களிடையே இம்முறையின் சீர்கேடுகளைக் கூறி விழிப்புணர்வை ஊட்டினார். இவரது தீவிர முயற்சியால் 1929-ல் தேவதாசி ஒழிப்பு முறைச்சட்டம் (Dedication Prevention Act) சென்னை மாகாண சட்ட மன்றத்தில் இயற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து பம்பாய் மாநிலம் 1934-ல் தேவதாசி ஒழிப்புச் சட்டத்தை இயற்றியது. 1956-ல் ஏற்படுத்தப் பட்ட 'தேவதாசி ஒழிப்பு முறைச் சட்டத்தின்' மூலம் இக்கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

பலதார மணத்தடைச் சட்டம் ஆங்கில அரசால் 1838-ல் இயற்றப் பட்டது. இதன்படி சில விதிவிலக்கான காரணங்காக மட்டுமே இரண்டாவது மணம் செய்து கொள்ளலாம்.

## 7. பெண்களின் வாழ்வுரிமைச் சட்டம் : 1946

திருமணமான இந்துப் பெண்கள் தனித்து வாழ்க துணைவனிடமிருந்து ஜீவனாம்சம் பெறும் சட்டம் 194 இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி சில நிபந்தனைகளுடன் மில்லாத கணவரைப் பிரிந்துவாழ பெண்களுக்கு அனுமதியளி பட்டது. கணவன் தீராத நோயினால் பாதிக்கப்பட்டு அந்த மனைவியையும் தாக்கும் பட்சத்தில் மனைவி கணவரைப் பிரிந்து உரிமை கோரலாம். மேலும் கணவர் மனிதாபிமானமற்ற முறை நடந்து கொள்ளும்போதும், மனைவியைத் துன்பத்திற்குள்ளாக் போதும், வேறு பெண்ணுடன் கணவர் உறவு வைத்திருந்தா மனைவி கணவரிடமிருந்து பிரிந்து வாழ உரிமை கோரலாம். கண மிருந்து ஜீவனாம்சம் பெறும் உரிமை மனைவிக்கு உ

## 8. இந்து திருமணச் சட்டம் : 1955

இந்து திருமணம் ஒரு பிரிக்க முடியாத புனித இணைப்பு கருதப்பட்டது. இது ஒரு மதச்சடங்காகக் கருதப்பட்டதால் சதி, விதவை திருமணத் தடை, குழந்தைத் திருமணம் போன்ற சீர்கேடுகள் பட்டன. இதன்விளைவாகவே இந்து திருமண சட்டம் 1955-ல் இயற் பட்டது. இச்சட்டம் இந்துப் பெண்களின் திருமண வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தியது. அவை வருமாறு :

a) இந்தச் சட்டப்படி ஒரு ஆண் தன் மனைவி உயிருடன் போது நீதிமன்றத்தில் விவாகரத்து பெறாமல் மறுமணம் செய் கூடாது. அதாவது ஒருதார முறை இந்து திருமண முறை என வலியுறுத்தியது.

b) முன்பு கணவன் மனைவி ஆனவர்கள் பிரிக்கமுடியாத நிலைமாறி இப்போது நீதிமன்ற அனுமதியுடன் திருமணத்தை செய்து கொள்ளலாம். அதாவது ஆண், பெண் இருவருமே மணம் பெறும் உரிமை பெற்றிருப்பதாக அறிவித்தது.

c) நீதிமன்றத்தில் நீதிவழி பிரிவு பெற்ற மனைவியோ அல் மண விலக்கு பெற்ற மனைவியோ கணவரிடமிருந்து பராம பெறலாம்.

d) திருமணத்தின் போது ஆணிற்கு 18 வயதும் பெண்ணிற்கு வயதும் நிறைவடைந்திருக்க வேண்டும். ஆனால் 1978-ல் இயற்றப் சட்டப்படி இந்த வயது ஆணுக்கு 21-ஆகவும், பெண்ணுக்கு 18 ஆக உயர்த்தப்பட்டது.



e) தந்தையின் இறப்புக்குப் பிறகு ஆண், பெண் குழந்தைகள் இருவருமே குறிப்பிட்ட வயது அடையும்வரை தாயே அவர்களின் பாதுகாவலன் என்று அறிவுறுத்தப்பட்டது.

## 9. இந்து சொத்துரிமைச் சட்டம் : 1956

1956-ல் இயற்றப்பட்ட இந்த சட்டத்தின்படி பெண்ணுக்கு சொத்துரிமை பெறுவதற்கு இதற்கு முன்பு இருந்த எல்லாத்தடை நீக்கப் பட்டு பெண்களுக்கு சொத்துக்களில் உரிமை உண்டு என்று அறிவிக்கப் பட்டது. ஆனால் தந்தையின் சுயசம்பாத்தியத்தில் மட்டுமே பெண் களுக்கு அவர்கள் கூடப் பிறந்த சகோதரர்களுடன் சம பங்கு என்ற நிலை இருந்தது. குடும்பத்தின் பூர்வீகச் சொத்துக்களில் ஆண்வாரிசுகளுடன் பெண் பங்கு கேட்க முடியாது. ஆணுக்கு பிறப்புரிமையாக வழங்கப் பட்ட இந்த உரிமையை பெண்ணுக்கு வழங்க மறுத்தது.

ஆனால் தமிழ்நாடு அரசு பெண்ணுக்கும் பூர்வீகச் சொத்தில் சம பங்கு கொடுக்க வேண்டும் என்று 1984-ல் சட்டம் இயற்றியது. இச்சட்டம் 1989 மார்ச் 25-ல் நடைமுறைக்கு வந்தது. இதன்படி பாகப் பிரிவினையின் போது பெண்கள் ஒதுக்கப்படுதல், வரதட்சணைக் கொடுமை போன்ற வற்றை ஒழித்து பெண்களுக்கு சொத்தில் சம பங்கு அளித்து ஆண்களுக்கு நிகரான உரிமையை பெண்களுக்கு அளித்தது இந்த சட்டம்.

## 10. இந்து தத்தெடுத்தல் மற்றும் வாழ்வியல் உரிமைச் சட்டம் : 1956

இந்தச் சட்டம் 1956-டிசம்பர் 21 முதல் நடைமுறைக்கு வந்தது. இந்தச் சட்டப்படி எந்த ஒரு பெண்ணும் திருமணம் ஆகாமல் இருந்தாலும் குழந்தையை தத்து எடுத்துக் கொள்ள வழிவகை செய்யப் பட்டது. ஆனால் திருமண மான மனைவிக்கு மட்டும் இந்த உரிமை கிடையாது. அவர் தனது கணவர் அனுமதியுடனே தத்து எடுக்க முடியும். கணவனின் மறைவுக்குப் பிறகு நல்ல மனநிலையில் உள்ள எந்த ஒரு தாயும் ஒரு குழந்தையைத் தத்தெடுக்கவோ, தத்து கொடுக்கவோ உரிமை உள்ளது. ஆனால் தத்து எடுக்கப்படும் நபர் 15 வயதுக்கு உட்பட்ட வராகவும் திருமணமாகாதவராகவும் இருக்க வேண்டும்.

மேலும் இந்தச் சட்டப்படி கணவன் தனது மனைவிக்கு உடை, உறைவிடம், கல்வி, மருத்துவ வசதி ஆகியவை கொடுக்க வேண்டும். விதவை மருமகளும், விதவை பேத்தியும் கணவரின் குடும்பச் சொத்தி லிருந்து ஜீவனாம்சம் பெற உரிமை பெற்றனர். விதவை அல்லது திருமண மாகாத பெண்களுக்கு தந்தையிடமிருந்து ஜீவனாம்சம் பெறும் உரிமை அளிக்கப்பட்டது.

இதேபோல 1956-ல் இயற்றப்பட்ட இந்து சிறுபான்மை மற்றும் பாதுகாப்புச் சட்டப்படி, ஐந்து வயது வரை குழந்தைகளுக்கு தாயே பாதுகாவலன். தந்தையின் இறப்புக்குப் பிறகு குறிப்பிட்ட வயது வரும் வரை தாயின் பாதுகாப்பில்தான் குழந்தை வளர்க்கப்பட வேண்டும். திருமணமாகாத பெண் மற்றும் சட்டமுறையான திருமணத்தின் மூலம் பிறக்காத மகள் தாயின் பாதுகாப்பிலேயே இருக்க வேண்டும்.

## 11. தொழிற்சாலை சட்டம் : 1948

தொழிற் சாலைகளில் பெண்கள் பணிபுரிவது மிகப் பெரிய பிரச்சனையாக இருந்தது. தொழிற்சாலைகள், சுரங்கம் விவசாய பண்ணைகளில் பணிபுரியும் பெண்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்காக முதன் முதலில் 1948-ல் இந்தச் சட்டத்தில் பெண்களின் பணிநேரம், சுகாதார வசதிகள், பெண்களின் நலன்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள், பேறுகால விடுப்பு போன்ற பல சலுகைகள் பெண் களுக்கு அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து 1951-ல் பண்ணைத் தொழிலாளர் சட்டம் 1952-ல் சுரங்கச்சட்டம் ஆகியவை இயற்றப்பட்டது. இந்தச்சட்டங்களின் படி பெண்களின் பணிநேரம் காலை முதல் மாலை 7 மணி வரை என்று வரையறுக்கப்பட்டது. பெண்களுக்குத் தனியாக கழிப்பிட வசதிகள், குழந்தைக் காப்பகங்கள், ஓய்வு அறைகள் போன்ற வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

## 12. பாலியல் தொழில் தடைச் சட்டம் : 1956

இது பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுவதையும் அவர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்த தூண்டுபவர்களையும் தண்டிக்கும் சட்டமாகும். இந்தச் சட்டப்படி பாலியல் தொழிலுக்காக விடுதி வைத்திருப்பவர்கள், தங்களுடைய வீட்டை பாலியல் தொழிலுக்குப் பயன்படுத்துபவர்களும் தண்டிக்கப்படுவார்கள். இதற்கு ஒருவருடம் முதல் மூன்று வருடம் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும். ஆனால் 1986-ல் இந்தச் சட்டத்தில் திருத்தம் செய்யப் பட்டு பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்கள் பாதிக்கப்பட்ட பெண்களாகவே கருதப்படுவார்கள். இதில் ஈடுபடும் ஆண்களுக்கு தண்டனை நிச்சயம் உண்டு.

## 13. கருக்கலைப்புச் சட்டம் : 1971

இதைக் கருக்கலைப்பு சட்டம் 1971-ல் கொண்டுவரப் பட்டது. இச்சட்டம் கொண்டுவரப்படுவதற்கு முன்பே இந்தியத் தண்டனை



சட்டப்படி கருக்கலைப்பு என்பது தண்டனைக்குரிய ஒன்றாகவே இருந்தது. இந்தச் சட்டப்படி கருக்கலைப்பு கீழ்க்கண்ட காரணங்களுக் காகச் செய்யப்படலாம். அவை, கர்ப்பிணி பெண்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் போதும், பிறக்கும் குழந்தைக்கு உடல், மூளை பாதிக்கப்படும் என்று கருதினாலும், மருத்துவர் சரி என்று எண்ணுகிற மற்றகாரணங்களுக்காகவும் கருக்கலைப்பு செய்து கொள்ளலாம்.

## 14. குழந்தைப் பிறப்புக்குமுன் கருவில் ஆணா பெண்ணா என்று பரிசோதனை செய்யத் தடைச் சட்டம் : 1988

1971-ம் வருடக் கருக்கலைப்புச் சட்டத்தைச் சுட்டிக் காட்டி டாக்டர்கள் பெண் சிசுக்களை கருவிலேயே அழித்தனர். இந்த நிலையில் பெண்ணிய இயக்கங்கள் இந்தச் சட்டத்திற்கு கடுமையான எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த எதிர்ப்பைக்கண்ட இந்திய அரசு கருக்கலைப்பு உரிமை என்ற பெயரில் பெண்சிசுக் கொலைக் கெதிரான கொடுமை களைக் களைய அந்தந்த மாநிலங்களே சட்டங்கள் இயற்றிக் கொள்ளலாம் என்று கூறியது.

இதனடிப்படையில் முதலாவதாக மகாராஷ்ரா மாநில அரசு 'மகாராஷ்டிர மாநில குழந்தைப் பிறப்பின் முன் செய்யும் பரிசோதனை களை முறைப்படுத்தும்சட்டம்' ஒன்றை 1988-ல் இயற்றி நடை முறைக்கு கொண்டுவந்தது. பின்னர் 1994-ல் தமிழ்நாடு உட்பட எல்லா மாநிலங் களும் இதே போன்ற சட்டத்தை இயற்றின. இதன்மூலம் கருவில் பெண் சிசுவை அழிப்பது தடுக்கப்பட்டது.

## 15. மகப்பேறு நலச்சட்டம் : 1961

இந்திய அரசியல் சட்டத்தின் உயரிய நோக்கமான சமூக நீதியினை பெண்களுக்கு வழங்க வழிவகுக்கும் பல்வேறு சட்டங்களுள் மகப்பேறுநலச் சட்டம் முதலிடம் வகிக்கிறது. இச்சட்டம் தொழிற் சாலைகள், சுரங்கங்கள் போன்ற இடங்களில் பணிபுரியும் தொழிலாளர் களின் வேலை ஒழுங்குகளை முறைப்படுத்தவும், அவர்களுக்கு குழந்தை பிறப்பதற்கு முன்பும், குழந்தை பிறந்த பிறகும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை மகப்பேறு நலன்களையும், சலுகைகளையும் வழங்குவதை உறுதிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இந்த சட்டம் இயற்றப் பட்டது. இந்த சட்டம் 1976-ல் திருத்தி அமைக்கப்பட்டு அதன்படி ரூபாய் ஆயிரத்துக்கும் குறைவாக சம்பளம் வாங்கும் தொழிலாளர்களும் இந்த மகப்பேறு நலன்களைப் பெற முடியும். தற்போது தமிழ் நாட்டி அரசு

பணியில் இருக்கும் பெண்களுக்கு மகப்பேறு காலத்தில் ஆறுமாத சம்பளத்துடன்கூடிய விடுமுறை கொடுக்கப்பட்டுள்ளது.

## 16. சமநிலை ஊதியச் சட்டம் : 1976

இந்தியா குடியாட்சியானதும் நமக்கு நாமே இயற்றிக் கொண்ட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39-ம் பிரிவு சமமான வேலைகளில் ஈடுபட்டிருக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான ஊதியம் வழங்குவதை உறுதி செய்யவேண்டும் என்பது வலியுறுத்துகிறது. இது வழிகாட்டும் நெறிகள் என்ற பிரிவில் உள்ளது. இந்தக் கொள்கையை செயல்படுத்துவதற்காக இயற்றப்பட்ட சட்டமே சமநிலை ஊதியச் சட்டமாகும்.

சர்வதேச பெண்கள் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்ட 1975-ம் ஆண்டும் சமநிலை ஊதியம் வழங்கும் ஒரு அவசரச் சட்டத்தை குடியாட்சித் தலைவர் பிறப்பித்தார். பின்னர் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்று சட்டமாகி 1976-ல் அமுல்படுத்தப்பட்டது.

இந்த சமநிலை ஊதியச் சட்டம் மொத்தம் 18 பிரிவுகளைக் கொண்டது ஆகும். இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கம் வேலை, தொழில் மற்றும் அது சம்பந்தப்பட்ட காரியங்களில் பெண்களை அவர்கள் பெண் என்ற காரணத்தினால் வேறுபடுத்தி ஊதியம் வழங்குவதில் வேறுபாடு காண்பிப்பதை தடுப்பதே ஆகும்.

## 17. வரதட்சணைத் தடைச் சட்டம் : 1961

வரதட்சணைத் தடைச் சட்டம் என்பது இந்து சமுதாயத்தில் ஆழமாக வேரூன்றிய ஒரு பழக்கமாகும். பெண்களின் சமுதாய சுரண்டலுக்குக் காரணமான இது ஒரு சமுதாயக் கொடுமையாகும். இந்த வரதட்சணை பெண் சிசு கொலைக்கும், பெண்கல்வி தடைபடுவதற்கும் பெண்கள் தங்கள் வாழ்வில் பல துன்பங்களை அனுபவிப்பதற்கும் காரணமாகிறது. இப்பழக்கத்தில் பெண்கள் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் பாதிக்கப்படுகிறார்கள். பலபெண்கள் கொலையும் செய்யப்படுகிறார்கள். இதை எதிர்த்து இந்தியப்பெண்கள் அமைப்பினர் போராடியதின் விளைவாக அரசு 1961-ல் வரதட்சணை தடைச்சட்டத்தை இயற்றியது.

இந்த சட்டத்தின்படி திருமணத்திற்காக பெண் வீட்டாரிடம் பணமோ பொருளோ கேட்டால் அது சட்டப்படி குற்றமாகும். எனவே பெண் வீட்டார் கொடுக்கும் பணம், நகை, மற்றும் பொருட்கள் வரதட்சணை சட்டத்தின்படி ஒரு குற்றமாகும். இந்த சட்ட வரதட்சணை வாங்குபவர்களுக்கு ஐந்து வருடத்திற்கு குறையாமல்



சிறைத் தண்டனையும், பதினைந்தாயிரம் வரை அபராதமும் வழங்க வழிவகுத்துள்ளது. மேலும் இந்தச் சட்டத்தின்படி பெண் வீட்டார்கள் புகார் கொடுத்தால், தாங்கள் வரதட்சணை வாங்கவில்லை என்று மாப்பிள்ளை வீட்டார்தான் நிரூபிக்க வேண்டும். அப்படி வரதட்சணை எதுவும் வாங்கியிருந்தால் அதனை மூன்று மாதத்திற்குள் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்றும் சட்டம் கூறுகிறது.

இந்தச் சட்டம் இயற்றப்பட்டபிறகும், சமுதாயத்தில் விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் வரதட்சணை என்ற கொடிய பழக்கம் தொடர்ந்து இருந்தது. எனவே இந்தச் சட்டத்தை தீவிரப்படுத்துவதற்காக 1984 மற்றும் 1986-ல் வரதட்சணை தடைச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இந்த புதிய திருத்தத்தின்படி நீதி மன்றங்கள் தானாகவே வரதட்சணை வழக்கு தொடரலாம். அல்லது காவல்துறை அறிக்கையின் பெயரில் நடவடிக்கை எடுக்கலாம். இதற்காக பாதிக்கப்பட்ட நபர்கள் வந்து புகார்கள் நீதிமன்றத்தில் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

மேற்கண்ட சட்டம் தவிர, இந்திய தண்டனைச் சட்டத்தில் 1986-ல் 304 என்ற பிரிவு சேர்க்கப்பட்டது. இதன்படி திருமணம் ஆகி ஏழு ஆண்டுக்குள் மனைவி இறக்க நேரிட்டால் அது வரதட்சணை இறப்பு கருதப்பட்டு அதற்கு காரணமான நபருக்கு ஏழுவருடமோ அல்லது ஆயுள் தண்டனையோ விதிக்கப்படும். 406-வது பிரிவின் படி திருமணம் முறிந்து போய்விட்டது என்றால் பெண்ணிடம் வாங்கிய வரதட்சணையைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்காவிட்டால் மூன்று ஆண்டுவரை சிறைத்தண்டனை உண்டு. மாப்பிள்ளை வீட்டாரின் சொத்தை ஜப்தி செய்யலாம் என்றும் இந்த பிரிவு கூறுகிறது. ஆனால் இவையெல்லாம் வரதட்சணை முறையை ஒழிக்கவில்லை என்று கருதிய தமிழக அரசு 2004-ல் ஒருவரதட்சணைத் தனிச் சட்டத்தை இயற்றியது. இதன்படி ஒரு வரதட்சணை தடுப்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் வரதட்சணை புகார்களை கவனத்துடன் விசாரித்து நடவடிக்கை எடுக்கிறார்.

ஆனால் வரதட்சணை என்ற கொடிய பழக்கம் சமுதாயத்தில் மிக ஆழமாக வேரூன்றி விட்டதால் சட்டத்தால் இதனை முற்றிலும் ஒழிக்க முடியவில்லை. சமுதாயத்தில் ஒவ்வொருவரிடமும் விழிப்புணர்வு ஏற்படும் வரை இப்பழக்கத்தை சமுதாயத்திலிருந்து அகற்றுவது கடினமான செயலாகும். 1984-ல் திருமண உறவின் மூலம் இரண்டு குடும்பக்களுடக்கிடையே ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்காக முக்கியமான நகரங்களில் குடும்ப நல நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் பல குடும்பப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. பெண்களுக்குப் பாதுகாப்பும் அளிக்கப்பட்டுள்ளது.

## 18. பெண்களுக்குத் தொல்லை கொடுத்தல் தடுப்புச் சட்டம் :1998 (Tamilnadu Prohibition of Harrasment of women Act)

சென்னையில் எத்திராஜ் கல்லூரியில் படித்துவந்த சரிகாஷா என்ற மாணவி ஒருவர் கல்லூரியிலிருந்து தனது வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருக்கும் போது, நூற்றாண்டு விழா கொண்டாடிய ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்த இளைஞர்கள் கட்சியின் பொதுக் கூட்டத்திற்குச் சென்று விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தனர். அப்போது சாலையில் நடந்து சென்ற சரிகாஷாவை ஓடிக் கொண்டிருக்கும் ஆட்டோரிக்ஷாவில் இருந்தபடியே கையைப்பிடித்து இழுத்து சாலையில் தரதர என்று இழுத்துச்சென்றார்கள். படு காயமடைந்த அந்த பெண் இறந்து போனார். அவரது மரணத்தின் விளைவாக இந்த சட்டம் இயற்றப் பட்டது.

பொது இடங்களில் பெண்களைக் கேலி செய்வது தீராத பிரச்சனையாக இருந்து வருகிறது. சரிகாஷாவின் மரணம் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பெண்களைக் கேலிசெய்வது என்பது சமுதாயத்திற்கு மிகப் பெரிய கேடு, ஆபத்தை விளைவிக்கக் கூடியது என்பதால் இது முழுமையாகக் ஒழிக்கப்பட வேண்டும் என்று அரசு கருதியது. அதன்படி 1998-ல், தமிழக ஆளுநரால் 'பெண்கள் கேலி வதைத்தடுப்பு அவசரச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு தமிழக அரசு பதிவிதழில் 1998 ஜுலை 30-ல் வெளியிடப்பட்டது. பின்னர் 2002-ல் இந்தச் சட்டம்' பெண்களுக்குத் தொல்லை கொடுத்தல் தடுப்புச்சட்டம் 1998 என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டது.

இந்தச் சட்டப்படி பெண்களுக்குத் 'தொல்லை கொடுத்தல்' என்பது ஆண் மகன் ஒருவன் அநாகரிகமாக நடந்து அல்லது செயல்பட்டு பெண் ஒருவருக்கு அச்சம், பயம், அவமானம் அல்லது அதிர்ச்சியை ஏற்படுத்துவதைக் குறிக்கும். கொச்சை வார்த்தைகளால் திட்டுதல் அல்லது காயம் ஏற்படுத்துதல், தொல்லை கொடுத்தல், தாக்குதல் அல்லது வன்முறையைப் பயன்படுத்துதலும் இதில் அடங்கும். ஆனால் அநாகரிகமான நடத்தையால் பெண்களுக்குத் தொல்லை கொடுத்தல் என்பது ஒரு ஆண்மகனால் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். ஒரு பெண் மற்றொரு பெண்ணுக்கு இதுபோன்று தொல்லை கொடுத்திருந்தால் இந்தசட்டம் பொருந்தாது.

இவைதவிர ஆபாசப் பாடல்கள், செயல்கள், பெண்களை கட்டாயப்படுத்தி திருமணம் செய்து கொள்ள முயற்சித்தல், வயது வராத பெண்களை பாலியல் உறவு கொள்ள கட்டாயப்படுத்துதல், சிறை சாலை மற்றும் மருத்துவமனைகளில் நடக்கும் பாலியல்



பலாத்காரம்,திருமணமான பெண்களை ஏமாற்றிக் கடத்திச் செல்லுதல் போன்றவைகளும் இந்தச் சட்டத்தின்படி குற்றங்களாகும்.

கல்விநிலைய வளாகம், கோவில், பேருந்துநிறுத்தம், சாலை, ரயில் நிலையம், திரையரங்கம், பூங்கா, கடற்கரை, பொது மக்கள் பயன் படுத்தும் வாகனம் அல்லது வேறு இடம் எதிலும் பெண்களுக்கு தொல்லை கொடுக்கிற, தொல்லை கொடுப்பவருக்கு உடந்தையாக இருக்கின்ற எவர் ஒருவருக்கும் மூன்றாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனையும், பத்தாயிரம் ரூபாய்க்கு குறையாத அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுவர்.

## 19. குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் : 2005

குடும்பத்தில் பலவகையான வன்முறைகளால் பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவை குறிப்பாக வரதட்சணைக் கொடுமை, பாலியல் ரீதியான வன்முறைகள், மன ரீதியான வன்முறை, உடல் ரீதியான துன்புறுத்தல்கள், உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பற்ற நிலை, வார்த்தைகளால் துன்புறுத்தப்படுதல், உறவுகளைக் காட்டி மிரட்டல் போன்றவையாகும். இவ்வாறு பாதிக்கப்படும் பெண்களை இந்த வன்முறைகளிலிருந்து பாதுகாத்திடவும், பாதுகாப்பான சூழ்நிலையில் வாழ்ந்திட வகைசெய்யவும் இந்தசீசட்டம் உதவுகிறது.

பெண்களை வன்முறையிலிருந்து பாதுகாக்க பல சட்டங்கள் இருந்தாலும் குடும்பவன்முறையிலிருந்து பாதுகாக்க தனிச்சட்டம் இல்லாமல் இருந்தது. நம் நாட்டில் குடும்ப வன்முறையால் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுவதால் மத்திய அரசன் பரிந்துரையால் குடும்பவன் முறைத்தடுப்புச்சட்டம் 2005-ல் நிறைவேற்றப்பட்டது.

பெண்ணை, மனம் அல்லது உடல் ரீதியாக பாதிக்கும் செயல் பாடுகள் அனைத்தும், குடும்ப வன்முறையே ஆகும். குடும்பத்தில் ஓர் ஆணோடு, ஒரு. குறிப்பிட்ட உறவு முறையில் வசிக்கும் பெண்ணுக்கு எதிராக நடக்கும் செயல் மற்றும் வெளிப்படும் சொல் என, இரண்டும் குடும்ப வன்முறையை சேரும்.

ஓர் ஆண், தனக்குரிய கடமைகளை செய்யத் தவறுவதும், செய்யக் கூடாததை செய்வதும், உடல் துஷ்பிரயோகம் செய்தல் அல்லது அச்சுறுத்துதல், ஒரு செயலோ அல்லது நடத்தையோ, பாதிக்கப் பட்டவருக்கு, உடல் வலி மற்றும் உறுப்பு, ஆரோக்கியம், வாழ்வின் முன்னேற்றம் அல்லது உயிருக்கோ ஊறு விளைவித்தல் போன்றவையும் இதில் அடங்கும்.

மேலும் இந்த சட்டத்தின் விதிகளைச் செயல்படுத்துவதை குழந்தைகள் பாதுகாப் பிற்கான தேசிய ஆணையமும், மாநில ஆணையமும் தொடர்ச்சியாக கண்காணித்துவரும். இந்தச் சட்டத்தின் மூலம் பெண் குழந்தைகள் பாலியல் வன்முறையிலிருந்து பெரிதும் பாதுகாக்கப் பட்டுள்ளனர்.

இவ்வாறு பெண்களுக்கு சமுதாயத்தில் பாதுகாப்பு கொடுப்பதற் காக கொண்டுவரப்பட்ட மேற்கண்ட சட்டங்களால் பெண்களின் வாழ்க் கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. பெண்ணடிமைத் தனம் ஒழிக்கப் பட்டது. பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட்டது. ஆணாதிக்க சமுதாயப் போக்கு குறைக்கப்பட்டது. வன்முறைகளிலிருந்து பெண் களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

ஆனால் இத்தனை சட்டங்கள் இயற்றப்பட்டாலும், ஆண் பெண் சமத்துவம் என்பது சட்ட அளவிலேயே உள்ளது. நடைமுறையில் முழுமையாக இல்லை. இந்திய அரசியலமைப்பில் பெண்களுக்கு சமஉரிமை அளிக்கப்பட்டு 62 ஆண்டுகள் ஆன பின்பும் நீதிமன்றப் படிகள் ஏறி உரிமைகளைக் கேட்டுப் பெறும் நிலையிலேயே பெண்ணினம் உள்ளது என்பதுதான் நடைமுறையில் உண்மையாக உள்ளது.

# 21. இந்திய முன்னோடி பெண்கள்

## (PIONEERING INDIAN WOMEN)

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து தான் இந்தியப் பெண்ணினம் முன்னேற்றம் காண ஆரம்பித்தது. தங்களது உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது. ஒவ்வொரு உரிமையையும் போராடி பெற முற்பட்டனர். இந்த காலகட்டத்தில் தான் தனிப்பட்ட சில பெண்கள் தங்களது அருஞ்செயல்களால் பெண்ணினத்திற்கு முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். தங்களது தனிப்பட்ட ஆற்றலாலும், முயற்றியாலும் முன்னணி நிலையை அடைந்தனர். வீரம், தியாகம், ஆற்றல் ஆகியவற்றை வெளிப்படுத்தினர். இந்திய சுதந்திப் போர், பெண்ணிய மறுமலர்ச்சி, பெண்ணுரிமைப் போராட்டங்கள், அரசியல், கல்வித்துறை, சமுதாய மேம்பாடு போன்றவற்றில் எத்தனையோ பெண்கள் முன்னோடிகளாக விளங்கினர். அவர்களில் ஒரு சிலரின் வாழ்க்கை வரலாற்றையும் சாதனைகளையும் சுருக்கமாகக் காணலாம்.

### 1. ஜான்சிராணி லட்சுமிபாய்

ஆங்கிலேயரை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்திய முதல் பெண்மணி என்ற பெருமையைப்பெற்றவர் ஜான்சி ராணி என்ற லட்சுமிபாய் ஆவார்.

**இளமைக் காலம் :**

*1830* -ஆம் ஆண்டு பாஜிராவ்-பாகீரதி பாய் தம்பதியருக்கு மகளாகப் பிறந்தவர் பிற்காலத்தில் ஜான்சி ராணி என்றழைக்கப்பட்ட மன்னுபாய். தனது நான்காவது வயதில் தாயாரை இழந்தார். தந்தையின் அருமையான வளர்ப்பில் வளர்ந்தார். தன் சகோதரர், தந்தையுடன் வளரும் போதே வீரம் மிக்க பெண்ணாக வளர்க்கப்பட்டார். மார்ஷியல் கலைகளிலும், குதிரையேற்றத்திலும் துப்பாக்கி சுடுவதிலும் பயிற்சி பெற்றார். லட்சுமிபாய் பிறந்த போது, இவருக்குச் சூட்டப்பட்ட பெயர் மனு கர்னிகா (புனித கங்கை ஆற்றின் பெயர்.)

ஜான்சியைச் சேர்ந்த ராஜா கங்காதர் ராவ் என்பவரை மணந்த பிறகு, லட்சுமி (செல்வத்தின் கடவுள்) என்று பெயர் மாற்றம் செய்யப் பட்டாள். இந்த தம்பதிக்கு வாரிசு அமையாததால் கங்காதர் தன் உறவினரை வாரிசாக சுவீகாரம் எடுத்துக் கொண்டார்.

1853-இல் கங்காதர் இறந்தவுடன், கவர்னர் ஜெனரல், டல்ஹௌஸி கங்காதருக்கு வாரிசு இல்லாததையும், சுவீகாரம் செய்து கொண்டதை கணக்கில் எடுக்க முடியாது என்றும் கூறி பிரிட்டிஷ்

அரரோடு ஜான்சியை இணைக்கத் திட்டமிட்டார். இந்தச் செயல், வா இல்லாதவர்கள் சுவீகர்ரம் செய்து கொள்ளும் இந்துக்க நம்பிக்கையை அவ மானப்படுத்துவது போல அமைந்தது.

சிப்பாய்க் கலகம் என்றழைக்கப்பட்ட இந்தியக் கலகம் உரு வதற்கான முக்கியக் காரணம் இந்த இணைப்புக் கொள்கையே என் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். பிராமணர்கள் உரிமையை அழிக்க நினைத்தது, அப்போதிருந்த ஜாதி முறையைத் து எறிய நினைத்தது போன்ற செயல்களும் கலகம் தோன்ற இன்னொ காரணம்.

## ஆங்கிலேயருக்கு எதிராக போர் புரிதல் :

டல்ஹௌசியின் முடிவினை மறுத்து இரண்டு முறை வின்ண பித்தார் ராணி. 1854-ஆம் ஆண்டு பிப்ரவரியில் அவற்றை நிராக தவுடன் பிரிட்டிஷ் சட்ட ஆலோசகரை அமர்த்தி லண்டனுக்கு முறை செய்தார். அந்த முறையீடும் மறுக்கப்பட்டு, பொது மக்கள் பார்வையி ருந்து மூன்று வருடம் விலகி இருந்தார். 1857-இல் கலகம் நன்றாக சூ பிடித்து, ஜூலை 7-இல் ஸ்டார் கோட்டையில் பிரிட்டிஷ் அரசாங்க அ வலர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தப் படுகொலை குற்றத்தில் ராணி லட்சுமிபாய் ஈடுபட்டிரு பதாக பிரிட்டிஷார் நம்பினர். அதனால் 1858-ஆம் ஆண்டு, மார்ச் மா தில் ஜான்சி நகரத்தை பிரிட்டிஷார் முற்றுகையிட்டனர். அந்த நக விழும்முன் ராணி தப்பித்துக் கொண்டார். கல்ஃபி நகரத்திற்கு சென் ராணி லட்சுமிக்கு ஒரு நாயகிக்குரிய வரவேற்பு கிடைத்தது.

குவாலியர் கோட்டையை மீட்க, தன் படைகளுடன் கத்தி, ப காப்புக் கவசம் மற்றும் ஆயுதங்களோடு, இறுதி வரை போரா வேண்டும் என்கிற தயார் நிலையில் ராணி சென்றார். எனினும் பிரிட்டி ராணுவம் தாக்கியபோது, தன் நகரத்தைக் காப்பாற்றுவதற்கா போராடிய போது கொல்லப்பட்டார்.

அவரை கௌரவிக்கும் பொருட்டு, ஜான்சி, குவாலியர் ஆகி நகரங்களில் அவருக்கு சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. எண்ணற் நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள் மூலம் அவர் நினைவு போற்றி பா காக்கப்படுகிறது.

ஜான்சி ராணி என்று புகழ்பெற்ற லட்சுமிபாய் வாழ்ந் ஆண்டுகள் கொஞ்சம்தான். 1830-இல் பிறந்து 1858-இல் தனது 28-ஆ வயதில் இவ்வுலகை விட்டு மறைந்தார். ஆயினும், இந்தியாவி சுதந்திரத்திற்காக அந்நியரை எதிர்த்துப் போராடிய காரணத்தால் இவ வரலாறு உலக வரலாற்றில் இடம் பெறுகிறது.



## 1. அன்னிபெசன்ட் : Annie Besant, 1847-1993

### இளமைப் பருவம்

1847-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதி இங்கிலாந் திலுள்ள லண்டன் மாநகரத்தில் பிறந்தார் அன்னிபெசன்ட். இவரது இயற் பெயர் ஆனிவுட் என்பதாகும். ஐந்து வயதுக்குள் ஆனி தனது தந்தையை இழந்தார். அதன்பின் தனது தாயின் பராமரிப்பில் வளர்ந்தார். தனது இள மையில் மேரியாட் என்ற பெண்மணியிடம் கல்வி பயின்றார். மேரியாட் டிடம் பயிற்சி முடித்ததும் பிளேட்டோ, எலியட், தாந்தே, ஸ்பென்சர் ஆகியோர்களின் நூல்களைப் படித்தார். தன் இருபதாம் வயதில் பிராங்க் பெசன்ட் என்ற பாதிரியாரை திருமணம் செய்து கொண்டார். ஒரு பாதிரி யாரின் மனைவி என்ற முறையில் பல நல்ல காரியங்களைச் செய்ய சந்தர்ப்பங்கள் கிடைக்கும் என எண்ணினார். அன்னிபெசன்ட்டின் கருத்துக்கள் அனைத்தும் எளிதில் அறிந்து கொள்ளக் கூடியதும் முற் றிலும் நம்பக்கூடியதுமான ஆன்மீக சிந்தனையில் உருவானவை. பாதிரி யார் தனது சமயத்திலே அதிக நம்பிக்கை கொண்டிருந்ததால் கருத்து வேறுபாடு ஏற்பட்டு மணவிலக்கம் செய்து கொண்டார்கள்.

### சுதந்திர சிந்தனைச் சிற்பி

சுதந்திர சிந்தனையாளரான சார்லஸ் பிராட்லா என்பவருடன் நெருங்கிப் பணியாற்றி 'சுதந்திர சிந்தனையாளர் இயக்கம்' ஒன்றை ஆரம் பித்து அதனை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தார். அவரது ஆற்றல் மிக்க பேச்சழகும், மத வெறுப்புணர்ச்சியைக் களைவதில் அவர் கொண்ட தீவிரமும் பொது வாழ்வில் அவருக்கு தன்னிகரற்ற உயர்வை உருவாக்கின. 'தேசிய சீர்திருத்தவாதி' என்ற செய்தித்தாளின் ஊழியர்களு டன் சேர்ந்து 'அஜாக்ஸ்' என்ற தலைமையில் கட்டுரைகள் எழுதி வந்தார். 1875-ல் 'நீதி முறையில் அடிப்படைக் கோட்பாடுகள்' என்ற தலைப்பில் ஒரு அரிய கட்டுரையை வெளியிட்டு பொதுமக்களின் பாராட்டுதலைப் பெற்றார். 1885-ல் அன்னிபெசன்ட் 'பேபியன் சொசைட்டியில்' சேர்ந்து ஒரு சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்தார். 1887-ல் 'எட்டு மணி நேரம் வேலை' என்ற கிளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். தொழிலா ளர்களுக்காகப் போராடி லண்டனில் உள்ள பெண் தொழிலாளர் சங்க யூனியனில் காரியதரிசியாகப் பணியாற்றினார்.

### பிரம்மஞான சபையில் அன்னிபெசன்ட்

'விரைவிலேயே அன்னிபெசன்ட் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. சுதந்திர சிந்தனையாளராக மட்டும் திருப்தியடையாமல், ஆன்மீகத் துறையிலும் ஈடுபட்டார். இந்த சமயத்தில் தான் அவரது வாழ்க் கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. பிளாவட்ஸ்கி அம்மையார் எழுதிய

'ரகசியக் கோட்பாடு' என்ற புத்தகத்தைப் படித்ததும் பல காலமாகத் தான்
அறிய விரும்பிய உண்மைகள் அவர் மனதில் பளிச்சென பிரகாசித்தன.
பிளாவட்ஸ்கி அம்மையாரைச் சந்தித்த பின் அவரது சீடரானார். 1893-ல்
இந்தியாவுக்கு வந்த அன்னிபெசன்ட் இந்தியாவையே தன்னுடைய
நாடாகக் கருதி வந்தார். இந்திய சமுதாய முன்னேற்றத்திற்கும் கல்வி
வளர்ச்சிக்கும் தனது சக்தி முழுவதையும் செலவு செய்தார்.

பிரம்மஞான சபையில் சேர்ந்தஅன்னிபெசன்ட் ஆற்றிய பணி
சொல்வதற்கு அரிது. சொல்வன்மையிலும், எழுதும் திறமையிலும் பிரம்ம
ஞான உலகில் பிரகாசித்து விளங்கினார். பிரம்மஞான சங்கத்தை தோற்று
வித்த கர்னல் ஆல்காட் 1907-ல் இறந்த பின் அதன் தலைவராக அன்னி
பெசன்ட் நியமிக்கப்பட்டார். இச் சங்கத்தின் கொள்கைகளை நடை
முறையில் செயல்படுத்துவதில் வெற்றி கண்டார். பிரம்ம ஞானம்
என்பது இறைவனை அறிதல் என்று பொருள்படும். இந்த தத்துவத்தை
எல்லா மதங்களின் போதனைகள் மூலம் பிரச்சாரம் செய்தார். இந்தியா
வில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் பிரம்மஞானக் கருத்துக்
களைப் பரப்பினார். ஜாதி, மதம் , இனம், நிறம், நாடு என்ற பாகுபா
டின்றி உலக சமுதாய மக்கள் அனைவரும் சகோதரர்கள் என்ற ஒற்றுமை
உணர்ச்சியை உலகெங்கும் பரப்ப முயன்று வந்தார்.

### சுதந்திரப் போராட்ட வீரர்

*1913*-ல் இந்திய அரசியலில் குதித்தார். இந்தியாவின் அரசியல்
நிலை உயராமல் சமுதாயத் துறையிலும், கல்வித் துறையிலும் அதிக முன்
னேற்றம் அடைய முடியாது என்பதை உணர்ந்தார். *1914*-ல் 'காமன்வீல்'
என்ற வார இதழையும், சில மாதங்களுக்குப் பிறகு 'நியூ இந்தியா' என்ற
தினசரியையும் வெளியிட்டார். இந்திய அரசியல் சுதந்திரத்திற்கு சாதக
மாக தன் அரிய கருத்துக்களைக் கட்டுரைகளாக வெளியிட்டார். திலகரின்
தலைமையில் செயல்பட்ட தீவிரவாத காங்கிரசையும், கோகலே தலை
மையில் செயல்பட்ட மிதவாத காங்கிரசையும் ஒன்றாக இணைத்த
பெருமை இவருக்கே உண்டு. *1915*, செப்டம்பர் *25*-ல் தன்னாட்சியை
அடைவதற்காக 'ஹோம்ரூல் இயக்கத்தை' ஆரம்பித்தார். 'பிரிட்டிஷ்
பேரரசில் இணைந்த தன்னாட்சியை சட்டப் பூர்வமான வழிகளில் பெறு
வதும், அதை அடைய மக்கள் கருத்தை உருவாக்கித் திரட்டுவதுமே'
அதன் குறிக்கோளாக அமைந்தன.

### இந்திய நாட்டுப்பற்று

இந்திய நாட்டின் மீதும், இந்திய மக்கள் மீதும் பெசன்ட் அம்மை
யார் கொண்டிருந்த அன்பு அளவு கடந்தது. *1893* முதல் இந்திய பிரஜை
யாக வாழ்ந்தார். இந்தியப் பெண்மணி போலவே புடவை கட்டினார்.
இந்தியர்களைப் போலவே தரையில் அமர்ந்து சாப்பிடுவார். இந்திய



...வந்த பின்பு சமஸ்கிருதம் படித்து பகவத்கீதையை ஆங்கிலத்தில்
...பெயர்த்தார். இந்தியத் தத்துவ நூல்களை விளக்கிக் கூறுவதில்
...மேதை, இந்தியப் பெண்களின் கல்விக்காகப் பெரும் பாடுபட்
...இவரது முயற்சியால் பல பள்ளிக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன.
...பெசன்ட் அம்மையார் இந்திய சாரண சங்கத்தை ஏற்படுத்தினார்.
...தைகள் முன்னேற்றத்திற்காக 'லோட்டஸ் சர்க்கிள்', 'ரவுண்ட்
...' என்ற குழந்தைகள் நிறுவனங்களை உண்டாக்கினார். இவ்வாறு
...மக்களின் முன்னேற்றத்திற்காக அவர் ஆற்றிய பெரும் பணி மகத்
...து.

...இந்திய தன்னாட்சி இயக்கத்தைப் பரப்ப நாடு முழுவதும் சென்
...இந்திய சுதந்திரத்திற்காக பல அரசியல் கட்சித் தலைவர்களை
...திரட்டினார். *1917*-ல் தன்னாட்சி இயக்கம் உச்சகட்டத்தை
...ந்தது. நாடெங்கிலும் மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். அரசாங்கம்
...பெசன்டை கைது செய்தது. கிளர்ச்சி மேலும் தீவிரமடைந்தது.
...பெசன்ட் அம்மையாரை விடுதலை செய்ய முயற்சிகள் மேற்
...ளப்பட்டன. காங்கிரஸ் மகாசபையின் நடவடிக்கைகளும் தீவிர
...ன. அரசு அவரை விடுதலை செய்தது. *1917*-ல் கல்கத்தாவில் கூடிய
...கிரஸ் மாநாட்டில் முதன் பெண் தலைவராக அன்னிபெசன்ட் தேர்ந்
...க்கப்பட்டார். சுதந்திரப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டா
...நாட்டின் அமைதியைக் காக்க, நாட்டின் சட்டதிட்டங்களை ஒரு
...தும் மீறக்கூடாது என்ற எண்ணத்தை மக்களிடையே வலியுறுத்
...ர். 1933, செப்டம்பர் 20-ம் தேதி தனது 86-ம் வயதில் உயிர் நீத்தார்.

## ...கோதரி நிவேதிதா (*1867-1957*)

...எண்ணற்ற ஆன்மீகவாதிகளையும், மாமுனிவர்கள் பலரையும்
...ர், மகாவீரர், குருநானக் போன்ற சமயத்தோற்றுவிப்பாளர்களையும்
...ண்டது இந்தியத் திருநாடு. இப்புண்ணிய பூமியில் மக்களின் சிந்த
...கள் விரிவானவையாம் போற்றுதலுக்கு உள்ளானவையாக
...ந்தன. அதேநோக்கில் தான் அயல்நாடுகளிலிருந்து வருவோரையும்
...வேற்கும் பண்புடையதாயிருந்தது. இந்தியாவில் இந்தியாவுக்குள்
...தரப்பட்ட நோக்கங்களுடன் அயல்நாட்டுப் பயணியர் பலகால
...ங்களில் இந்தியாவுக்கு வந்தனர். அத்தகைய தனிப்பட்ட அயல்
...டவர் வரிசை மிக நீண்டதொன்றாகும். பாஹியான், யுவான் சுவாங்,
...சிங் போன்ற சீனப்பயணியர் இந்தியாவில் புத்தருடன் தொடர்
...டைய புனிதத் தலங்களைத் தரிசிக்கவும், அம்மாமுனிவர் பற்றிய
...திகளைத் திரட்டவும் இந்தியாவிற்கு வந்தனர்.. இத்தகைய
...ல்நாட்டவருள் பெண்கள் இருவர் மிக முக்கியமானர்கள்.
...ங்களுள் ஒருவர் அன்னி பெசன்ட் மற்றவர் சகோதரி நிவேதிதா.
...இருவருமே சமகாலத்தவர் ஆவர்.

இவரும் அன்னிபெசன்டைப் போல் தன்னலமற்ற
சுடராகத் திகழ்ந்தவர். இவரும் அயர்லாந்து நாட்டினரே.
பண்பினால் மேம்பட்டு இந்தியாவுக்கு வந்தவர். மார்க்ரெட்
என்பது அவருடைய இயற்பெயர். இராமகிருஷ்ண இயக்கத்
ஈர்க்கப்பட்ட அவர் 28, அக்டோபர் 1867ல் டன்கன்னாவில் பிறந்
தனது தந்தையாரின் ஈடுபாடு காரணமாக அயர்லாந்தின் தன்
இயக்கத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். தனது 17ஆவது வய
தமது படிப்பை முடித்த நோபிள் ஆசிரியப் பணியை ஏற்றுக் கொண்
அப்போது பெஸ்டலாக்ஸி, புராய்பெல் போன்ற கல்வியாளர்
சிந்தனைகளால் கவரப்பட்டார். அப்போதே சமயம் பற்றிய
செய்திகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணமுடைய
யிருந்தார்.

சிகாகோ உலக சமயப் பாராளுமன்றத்தில் 11, செப்டம்
1893-ல் இந்தியாவின் பெருமை அதன் சமயக் கோட்பாடுகளில் உள்
வென்பதை நிலைநாட்டிய பின் இங்கிலாந்து திரும்பிய இந்தி
சமயவிடி வெள்ளி விவேகானந்தரை இலண்டனில் சந்தித்தா
சுவாமிஜியின் சொற்பொழிவு ஒன்றுக்கு அவர் அழைக்கப்பட்டிருந்தா
இந்தியாவின் ஆன்மீகச் சிங்கத்தின் வேதாந்தக் கோட்பாடுகளு
அவற்றை அவர் தெளி வாக வெளிப்படுத்திய நிலையும் நோபிளா
பெரிதும் போற்றப்பட்டார். சந்நியாசியான விவேகானந்தர் மீ
ஆன்மீகப்பற்றுதல் ஏற் பட்டது. விவேகானந்தர் இந்தியாவின் விடுதலை
பெண்கள் கைகளில் உள்ளன என்று எண்ணியவர். வறுமை, ஏழ்மை
கல்வியறிவின்மை ஆகியவற்றால் ஆட்கொள்ளப்பட்டிருந்த இந்திய
நிலையை விவேகா னந்தர் வாயிலாக மார்க்ரெட் நோபிள் புரிந்து
கொண்டார். அதே நேரம் கல்வி புகட்டலின் வாயிலாக இந்தியப்
பெண்களை நெறிப்படுத்த முடியும் என்ற விவேகானந்தரின் கருத்தும்
அவருக்கு ஏற்புடையதாகவே இருந்தது.

மேலும் இந்தியப் பெண்களின் அறியாமை, மூடநம்பிக்கை
களில் பற்றுதல், அயல்நாட்டு கோட்பாடுகள் மற்றும் செயற்பாடு
களிலான சுரண்டல், தம்முடைய வீட்டுச் சிக்கல் போன்றவற்றிலிருந்து
இந்தியப் பெண்களை மீட்க ஒரு பெண்மணியின் உதவி தேவை என்பதை
உணர்ந்திருந்தார். நோபிள் என்ற அயல்நாட்டுப் பெண்மணியிடம் தமது
நிலைகளைத் தெளிவுப்படுத்தினார். ஆனால் அவர் மார்க்ரெட்டை
வற்புறுத்த விரும்பவில்லை. இருப்பினும் மார்க்ரெட் நோபிள் இந்தியப்
பெண்களின் மேம்பாட்டிற்குச் செயல்பட முடியுமென்பதைச்
சுட்டிக்காட்டினார். விவேகானந்தரின் வேதாந்தச் சிந்தனைகளால்
ஈர்க்கப்பட்ட மார்க்ரெட் இந்தியா பற்றிய பல செய்திகளையும்
திரட்டினார். தொடர்ந்து வேதாந்த அமைப்புகளை நடத்தவும் உதவி
செய்தார்.



மார்க்ரெட்டுக்கு இந்தியச் சூழல், தட்பவெப்பநிலை பிடிக்
...? பயணிகளாக வரக்கூடியவர்கள் இந்திய மக்களின் போதைச்
...த் இசைந் முடியுமா? என்பன போன்ற ஐயங்கள் வொமிக்கு இருந்
... இந்தியப் பெண்களின் சூழல்களும் அவர்களுக்கு உதவி விழிப்
...ர்வை ஊட்டுவதிலும் மார்க்ரெட்டுக்கு பெரும் எதிர்காலம் உண்டு
...பது வெளியாயிற்று. இந்தியாவில் நிலவும் அந்நிய ஆதிக்கத்தின்
...ர்பாடுகள் எந்த அளவுக்கு மார்க்ரெட்டைப் பாதிக்குமெனத் தெரிந்
...ந்தாலும் 1896ல் இந்தியா வந்தடைந்தார். கல்கத்தாவைத் தமது இரும
...மாக் கொண்டார். அவ்வமயம் சர்.ஜகதீஸ் சந்திரபோஸ் குடும்பத்
...வருடன் தொடர்பு கொண்டார். அவர்கள் நடத்திய கல்விக்கூட
...வையும் பெத்தூன் கல்லூரியையும் அறிந்து கொண்டார்.

அக் குடும்பத்தினர், விதவைகள் மறுவாழ்வுக்காகவும் கல்வியறி
...ற்ற நிலையில் காணப்பட்ட பெண்களின் முன்னேற்றத்திற்காகவும்
...மேற்கொண்ட முயற்சிகள் மார்க்ரெட்டைக் கவர்ந்தன. அவர்களுக்குக்
...ல்வியறிவு ஊட்டப்பட்டது. நிவேதிதாவும் ஒரு பள்ளியை நிறுவினார்.
...திில் கல்வியறிவு கற்ற பெண் நிவேதிதாவின் எதிர்பார்ப்புகளுக்கு
...மாறாக கல்வி முடிந்ததும் திருமணம் செய்து கொண்டார். இத்தகைய
...சிக்கல்களுடன் பொருளாதாரச் சிக்கலும் அவருக்கு இருந்தது. இந்தியா
...வுக்குள் பல இடங்களுக்கும் சென்று வேதாந்தத்தைப் பரப்புதல், தமது
...பணத்தேவைகளை நிறைவு செய்து கொள்ளல் போன்ற பணிகளில் ஈடு
...பட்டார். அவ்வமயம் அமெரிக்காவிலிருந்து விவேகானந்திரின் சொற்
...பொழிவால் கவரப்பட்டு இந்தியா வந்த, சகோதரி கிறிஸ்டைன் என்பவர்
...சகோதரி நிவேதிதாவின் பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்க முன்
...வந்தார்.

விவேகானந்தருடனும், அவருடைய சீடர்களுடனும் இந்தியப்
...பகுதிகளுக்குப் பயணம் செய்த நிவேதிதா பல நூல்களை எழுதினார்.
...நான் பார்த்த தலைவர் (The Master AS saw him) பயணக் கதைகள் (travel
...tales) போன்ற முக்கியமானவைகளாகும். பலவார மாத இதழ்களும்
...தமது கருத்துக்களை எழுதி வெளியிட்டார். இந்தியாவில் ஆங்கில ஆதிக்
...கத்தின் வெறித்தனமாக செயல்கள், கர்சனின் வங்கப் பிரிவினையின்
...விளைவுகள், அரவிந்தருக்கு ஏற்பட்ட அரசியல் கதி ஆகியன நிவேதி
...தாவின் எண்ணங்களுக்கு வலுவூட்டின. இத்தகைய அரசியல் ஈடுபாடு
...களில் அவர் தம்மை இராமகிருஷ்ணர் இயக்கத்திலிருந்து விடுவித்துக்
...கொண்டார்.

ஜெகதீஸ் சந்திர போஸின் செடிகள் பற்றிய ஆய்வுக்கு உலகின்
பல இடங்களிலிருந்தும் வரவேற்பு காணப்பட்டது. ஆனால் ஆங்கில
அரசு அதனை அங்கீகரிக்க மறுத்த போது அவர் மனம் வேதனையால்
துடித்தது. ஆனால் தமது எண்ணங்கள் செயல்பட்ட போது தமது

ஆற்றலை முழு மையாகப் பயன்படுத்தினார். கல்கத்தா மக்கள் காலரா, பிளேக் போன்ற நோய்களால் வருத்தத்திற்குள்ளான போது தன்னுடைய வலிமை காரண மாக அவற்றை எதிர்த்தார். இந்திய மற்றும் ஆங்கில நண்பர்கள் அவரு டைய ஆலோசனைகளையும், ஆதரவையும் நாடினர். விவேகானந்தரால் பெருமைபடுத்தப்பட்ட நிவேதிதா அவருடைய மரணத்திற்குப் பின் அவரது சீடர்களால் போற்றப்பட்டார். இந்தியாவுக்குத் தன்னை அர்ப் பணித்த அப்புனித ஆத்மா இவ்வுலக வாழ்க்கையை 1957-ல் நீத்தது.

## 4. பண்டித ரமாபாய் (1858-1922) அக்டோபர், 7-ல்

இந்தியப் பெண்களின் விடுதலை இயக்கத்திற்கு அடித்தளம் அமைத்து தந்தவர் பண்டிதரமாபாய். பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்துப் போராடியவர். 1889ல் மும்பையில் கூடிய ஐந்தா வது இந்திய தேசிய காங்கிரஸில் ஒன்பது பெண்களுடன் பங்கேற்று உரை யாற்றியவர். அப்போதே குடும்பப் பெண்களுக்குத் தேவையான உரிமைகள் தரப்பட வேண்டுமென்று வாதிட்டார். விதவைகளை, பிறரைச் சார்ந்து வாழும் பண்பினராகச் செய்யும் மூடப்பழக்க வழக்கத் தைச் சாடினார். தமக்கு வேண்டியவற்றைப் பெற்றுக் கொள்ளும் உரிமை கொண்டுள்ள ஆண்களைப்போல் பெண்ணுக்கும் அத்தகை உரிமை வேண்டுமென வற்புறுத்தினார்.

ஆன்மீக உணர்வினால் ஆண் களை விட அதிக உந்துதலைப் பெறும் பெண்கள் கல்விகற்கவும், உரிமை பெற வேண்டும். ஒன்பது வயதுப் பெண் ஒருத்தி தன்னுடைய கணவன் இறந்த போது அவனுடைய சிதையில் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்ற போது அவளைக் காப்பாற்றினார். சட்டமும், பெண்கள் ஆண்களுக்கு கட்டுப்பட்டு செயல்பட வேண்டுமென வற்புறுத்தியபோது ரமாபாய் அதனை எதிர்க்கத் தலைப்பட்டார். தனது தந்தையார் ஆனந்த சாஸ்திரி ரமாபாயின் 16 ஆவது வயதில் காலமானபோது அவருக்குத் தேவையான கடமைகளைச் சரிவர ஆற்ற இயலவில்லை. அதே போல் அவருடைய தாய் இலட்சுமிபாய் டோங்ரே தன்னுடைய வாழ்வின் இறுதி கட்டத்தில் இருந்தபோது இருந்தும் உயிர்வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்.

அமரகோஷம், சித்தாந்தம், கீதை மற்றும் மகாபாரதம் போன் வற்றலிருந்து பல கருத்துக்களைத் தெரிந்து வைத்திருந்தார். தனது தாயின் இறந்த உடலைச் சுமந்து சென்று சிதையிலிடத் தனக்கு உரிமையுண்டு என்று வாதிட்டு ஆணுடன் சமஉரிமை கொண்டாடியவர் ரமாபாய். தம் பெற்றோரின் இறப்புக்குப் பின் கதாகாலட்சேபம் செய்து தமது தேவை களை நிறைவு செய்து கொண்டார். அவருடைய சமஸ்கிருத அறிவு



...ன்மீகத் தத்துவங்களில் காட்டிய ஈடுபாடும் அவருக்குத் தலை... அவருடைய சொல்லாற்றல் பலராலும் பாராட்டப்பட்டது. ...கல்விக் கடவுளின் அடிமை எனக் கருதிய ரமாபாய் பிறரால் ...என்ற அடைமொழியுடன் போற்றப்பட்டது பெருமைக்குரிய ...தாகும்.

பெண்களின் பெருமையை நிலைநாட்டப்பாடுபட்ட பண்டித ...பாய் சீதா தேவகி, திரௌபதி, சாவித்திரி போன்றோரின் ...க்கையை எடுத்துச் சொல்லுவதில் நிபுணராயிருந்தார். குழந்தை ...ம் மற்றும் பெண்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டமையைக் ...மையாகச் சாடினார். சாத்திரங்கள் படித்த ஆடவர் உலகம் ...ண்களைச் சமஉரிமை கொண்டவர்களாக நடத்த வேண்டுமெனக் ...னார். கேசவ சந்திரசென்தான் அவருக்கு வேதத்தைப் பயின்று அதன் ...த்தைப் பெண்கள் புரிந்துகொள்ள வேண்டுமெனக் கூறினார். ...மண பந்தம் மூலம் இணைக்கப்படும் ஆண், பெண் இருவரும் சம ...மை கொண்டவர்களாகச் செயல்பட வேண்டுமென்றார். தயானந்த ...ஸ்வதியையும் அவர் சந்தித்தார். புனாவில் மகாதேவ் கோவிந்த் ரான ...வின் ஆதரவில் பல சொற்பொழிவுகளை ஆற்றினார். அவ்வமயம் ...ந்துசமயத்தில் காணப்படும் நலத்துறைகளைச் சாடினார்.

1882க்குப் பின் பெண்கல்வி பற்றித் தமது கருத்துக்களை வெளி ...ட்டார். பெண்கள் ஆசிரியைகளாக நியமிக்கப்பட வேண்டுமென்றார். ...க ஆண் மற்றும் பெண் ஆசிரிய, ஆசிரியைகளிடம் எவ்வித பேதமும் ...ாட்டக்கூடாதென வலியுறுத்தினார். பெண்கள் மருத்துவத்துறையில் ...ங்கு பெறவேண்டுமென்றார். அதனால் பெண்களுக்கான மருத்துவ ...லையங்கள் உருவாக்கப்பட்டன. 1883ல் இங்கிலாந்துக்குச் சென்ற ரமா ...ய் பெண்கள் பாதுகாப்பு இல்லங்களுக்குச் சென்று பார்த்தார். அத்த ...கய அமைப்பு முறையில் இந்தியப் பெண்களுக்கும் பாதுகாப்பு அளிக் ...ப்பட வழிவகுத்தார்.

1888ல் அவருடைய நூலான 'மேல் ஜாதி இந்துப் பெண்கள்' (The ...gh Caste Hindu Women) என்பது வெளியிடப்பட்டது. பாஸ்டனில் ...வரது நினைவாக 'பண்டித ரமா பாய் அசோஷியேசன்' உருவாக்கப் ...ட்டது. மராத்திய மொழியில் பாலோதியான் (Bolodyan) என்ற நூல் ...ழுதினார். லோக்ஸ்திரி (Lok Sttiri) என்ற நூலையும் எழுதினார். ...வற்றின் மூலம் அவருடைய மொழியறிவை நாம் நன்கறியலாம்.

விதவைகள் மற்றும் ஒதுக்கப்பட்ட பெண்களுக்காக 'சாரதாசன்' ...ன்ற அமைப்பினை உருவாக்கினார். சாரதா என்ற மறுமணம் செய்து ...கொண்ட விதவை அவ்வமைப்பின் முதல் உறுப்பினராகச் சேர்க்கப்பட் ...டிருந்தார். ஆர்.ஜி.பண்டார்கார், எம்.ஜி.ரானடே போன்றோர் அவ்வ ...மைப்பின் ஆலோசகர்களாகத் திகழ்ந்தனர். பெண்களை தன்வம்பிக்கை

உடையவர்களாகவும், சுதந்திரமானவர்களாகவும் இயங்கச் செய்ய வேண்டு மென்ற நோக்கத்தையும் உடையதாயிருந்தது. அவ்வமைப்பின் உறுப்பினர்களான பெண்களுக்கு பல தொழில்களில் பயிற்சியளிக்கப் பட்டது. தையல்வேலை, மட்பாண்டங்கள் செய்தல், தோட்டவேலை போன்றவை அத்தகைய பணிகளாகும். அங்கு பெண்களுக்கு ஒரு விடுதலை யான நிலை காணப்பட்டது.

சமூக சீர்திருத்தம் என்ற நோக்கில் ஆண்களிடம் காணப்பட்ட முறைகேடுகளான சூதாட்டம், குடி போன்றவற்றைத் தவிர்க்க முற் பட்டார். விதவை மறுமணத்தை நடைமுறையில் நடத்திக் காட்டியவர் ரமாபாய். கோதுபாய் என்ற விதவையை அன்னை சாகேப் கார்வே என்ப வருக்குத் திருமணம் செய்து வைத்து புரட்சி ஏற்படுத்தினார். ரமாபாயின் வேண்டுகோளின்படி பெண்களுக்கான ஆசிரமம் ஒன்றும் அமைக்கப் பட்டது.

மராட்டிய மாநிலத்தில் பண்டித ரமாபாயின் அருஞ்செயல் களால் பெண்கள் முன்னேற்றம் சீராக நடைபெறச் செய்யப்பட்டது. கடுமையான எதிர்ப்புகளை பழமைவாதிகளும், அச்சுறுத்தல் காட்டிய போதும் அவர் அச்சமடையவில்லை. இந்தியப் பெண்களின் நலனுக்குப் போராடுவதைத் தமது தலையாய பணியாகக் கொண்டார். தொற்று நோ யான பிளேக் புனேயைத் தாக்கியபோது தாக்கப்பட்டோரின் துயர்து டைக்க அவர் ஆற்றிய பணிகள் போற்றப்படுவனவாகும்.

அவரது அன்பும், பாசமும் பலருக்கு முன்னோடிகளாகும். துன் பங்கள் கண்டு துவண்டுவிடாமல் தனது சேவாதனை சுய சார்புடைய அமைப்பாக ஆக்கினார். அவருடைய செயல்பாடுகள் பெண்களை முன் னேற்றப்பாதையில் கொண்டு செலுத்தின.

## 5. சரோஜினி நாயுடு

'இந்தியாவின் கவிக்குயில்' என்று பேசப்படும் சரோஜினி நாயுடு காந்தி வழி சுதந்திரப் போராட்டத்தின் முக்கியமான பெண் தலைவி ஆவார். இவருக்கு காந்தி கொடுத்த இன்னொரு பட்டம் மீராபாய் என்ப தாகும். மக்கள் செல்லமாக சரோஜினி புல் புல் என்று அழைத்தனர். இவர் நைட்டிங்கேல் என்றும் அழைக்கப்பட்டார்.

### பிறப்பும், படிப்பும்

சரோஜினி நாயுடு பிப்ரவரி 13, 1897-ல் வங்காளத்தில் பிறந்தார். இவருடைய தந்தை டாக்டர் அகானாத் சட்போத்யா, நிசாம் கல்லூரியை நிறுவினார். சரோஜினி நாயுடு நிசாம் கொடுத்த உதவித் தொகையைப் பெற்று, இங்கிலாந்து சென்றார். இலண்டனில், கேம்பிரிட்டிஷ் பல் கலைக் கழகத்தில் படித்தார். சுவிட்சர்லாந்திலும், இத்தாலியிலும் சிறிது



...ல் இருந்தார். பிறகு 1898-ல் டாக்டர் நாயுடு என்பவரைத் திருமணம் ...த்தார்.

### ...சேவையில் நாட்டம்

இவருக்கு ஆரம்பத்தில் இருந்தே பல்வேறு சாதி மக்களிடம் ஒரு ...மை உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணமிருந் ...இரண்டாவது, பெண்களின் நிலையிலும் முன்னேற்றம் செய்ய ...ண்டும் என்றும் ஆசையிருந்தது. ஆகையால், இவர் சமூக சேவை மா ...ட்டில் கலந்து கொண்டு, பெண்களின் பாதுகாப்பிற்காக ஒரு முன் ...மொழிவு செய்தார். அப்போது அங்கு அவர், 'கீழே விழுந்துவிட்ட பெண் ...ளைத் தூக்கி, அவர்களை நிமிரச் செய்யாவிட்டால், இந்தியா விமோ ...சனம் அடையாததாகவே இருக்கும்' என்று குறிப்பிட்டார்.

### ...ங்கிரசில் சரோஜினி நாயுடு

இவர் முதன் முதலாக அரசியலில் நுழைந்ததே 1913-ல் இந்து ...ஸ்லீம் ஒற்றுமைக்காகவே. பிறகு 1916-ல், காங்கிரஸ் சார்பாகப் பேசி ...னார். அவர் இரண்டு குறிக்கோள்களை முக்கியமாகக் கொண்டு செயற் ...பட்டார். 1) சுய ஆட்சி அரசு பெறுதல்; 2) பெண்களின் உரிமைகளைப் ...பெறுதல். இவர் 1917-ல் , சில முக்கியமான பெண் தலைவர்களுடன் ...சேர்ந்து கொண்டு , மாண்டேகு செம்ஸ்போர்ட்டைச் சந்தித்தார். அதில் ...பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண் ...டார். இவர் தம்முடைய மாநிலமான காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மா ...நாட்டில் கலந்து கொண்டு, மயிலாப்பூரில் பெண்களுக்காக பள்ளிகளை ...ஏற்படுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டார். செப்டம்பர் 1918-ல், காங் ...கிரசின் சிறப்பு மாநாடான பம்பாய் மாநாட்டில் கலந்து கொண்டார். ...அங்கு நடந்த காங்கிரஸ் மாநாட்டில் பெண்கள் என்பதற்காக, அவர் ...களுக்கு வாக்குரிமை இல்லை என்பது கூடாது என்ற தீர்மானத்தை நிறை ...வேற்றினார். இந்தத் திட்டத்தை அமல்படுத்த, 1919-ல் ஹோம்ரூல் ...இயக்கத்தின் சார் பாக இங்கிலாந்து சென்றார். இங்கிலாந்தில் இந்தியப் ...பெண்மணிகளின் வாக்குரிமையைக் கேட்டு கடுமையாகப் பிரச்சாரம் ...செய்தார்.

### ...காந்தியைப் பின்பற்றிய சரோஜினி

காந்தி இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இறங்கியதும், ...சரோஜினி நாயுடுவின் பெரிய வேலை, காந்தியின் சத்தியாகிரத்தை ...சென்னை, பம்பாய், அகமதாபாத் போன்ற ஊர்களுக்குச் சென்று பரப்பு ...வதேயாகும். அகமதாபாத்தில், ஒரு பொதுக் கூட்டத்தில் மாண்டேகு ...செம்ஸ்போர்டு திட்டம் குறித்து கடுமையாக விமர்சனம் செய்தார். ...மேலும் இவர் ஜெனிவா மாநாட்டில் பேசும் போது இந்து முஸ்லீம் ஒற்று ...மையின் அவசியம் குறித்துப் பரவலாகப் பேசினார். இதற்கிடையில்

அவர் நெஞ்சு வலியால் அவஸ்தைப்பட்டார். இருந்தாலும், நாட்டுக்காகச் சுதந்திரப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டார். அப்போது 1920-ம் ஆண்டு காந்தி ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்ட காலம் ஆகும்.

கேரளாவில் நடைபெற்ற மாப்பிள்ளா போராட்டத்திலும் கலந்து கொண்டார். அவர் சென்னை அரசாங்கத்தை எதிர்த்து பல முறை காரசாரமாக விவாதித்தார். எனவே சென்னை அரசு, அவரை மன்னிப்பு கேட்காவிட்டால் கைது செய்து விடுவோம் என்று மிரட்டியது. ஆனால் நாயுடு அதைக் கண்டு கொள்ளவில்லை. மேலும், தனக்கு ஆங்கில அரசு கொடுத்த கெய்ஸர்-இ-ஹிந் என்ற பதக்கத்தை மீண்டும் திருப்பிக் கொடுத்து விட்டார்.

காந்தி சட்ட சபைக்குள் செல்லக் கூடாது என்று முடிவெடுத்த பிறகு, காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்தது. மோதிலால் நேரு, சித்ரஞ்சன் தாஸ் போன்றோர்கள் இந்தியர்கள் சட்டசபை தேர்தலில் போட்டியிட்டுச் செல்ல வேண்டும் என்று கூறினர். ஆனால் ராஜாஜி போன்றவர்கள், காந்தியின் கொள்கைப்படியே, சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் உறுப்பினர்கள் கலந்து கொள்ளக் கூடாது என்று உறுதியாக இருந்தனர். இந்த நிலையில் சரோஜினி நாயுடு, காந்தியின் நிலையை ஆதரித்தார். இவர் *1922*-ல், கல்கத்தா, இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டு, சட்டசபை செல்வத்தை எதிர்த்து தீர்மானம் போட்டார். நடக்க முடியாமல் இருந்த இவர், படுக்கையிலிருந்து எழுந்ததும், முதல் முதலில், அகாலிதளம் மாநாட்டில் கலந்து கொண்டார்.

*1924*-ல், தென் ஆப்பிரிக்கா சென்றார். அங்கே ஆங்கிலேயர்கள், தென் ஆப்பிரிக்காவிலிருந்து, இந்தியர்களை விரட்ட வேண்டும் என்ற சட்டத்தைத் தயார் செய்து கொண்டிருந்தார்கள். அதை சரோஜினி நாயுடு வன்மையாகக் கண்டித்தார். மேலும் கிழக்கு ஆப்பிரிக்க காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டு, அவர்களை ஒன்றுபட்டுப் போராடும்படிக் கேட்டுக் கொண்டார்.

## காங்கிரஸ் தலைவியான சரோஜினி

இப்படி, உடல் நலம் பாதிக்கப்பட்டு, நடக்க முடியாமல் இருந்த போதும் கூட, நாட்டைப் பற்றியே சிந்தித்த சரோஜினியை, 1925-ல் இந்திய தேசிய காங்கிரஸ் தலைவி பதவி தேடி வந்தது. இந்தியாவிலேயே முதன் முறையாக இந்தியப் பெண்மணி இப்படி ஒரு உயர் பதவியை அடைந்தது அவருடைய தன்னலமற்ற தியாக உணர்ச்சியைக் காட்டுகிறது.

சரோஜினி நாயுடு ஒரு புதுமைப் பெண்ணாகவே சிந்தித்தார். அவர், நாட்டு மக்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு என்று தவித்



...றைகள் ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார் மேலும் பல திட்...களையும் அறிவித்தார். அதாவது, சமயங்களை ஒன்று சேர்த்தல், ...ளர்களை ஒன்று சேர்த்தல் போன்றவைகளாகும். மேலும் இவர் ...சீர்திருத்தங்கள் தேவை என்பதில் கவனமாக இருந்தார். முக்கிய... ஒவ்வொரு மாணவருக்கும் இராணுவப் பயிற்சி தேவை என்று ...றுத்தினார்.

1932-லிருந்து 1929 வரை இவர் அமெரிக்காவிலும், கனடாவிலும் ...களாகச் சென்று சுற்றுப்பயணம் செய்து கிட்டத்தட்ட 200 சொற்...ழிவுகளை ஆற்றினார். அவருடைய பேச்சுக்களை மற்றவர்கள் ...ந்து பாராட்டினர். அவருடைய கருத்துக்கள் எல்லாம் ஒரு இந்துப் ...ம் மணியின் விளக்க உரைகள் என்று அமெரிக்க மக்கள் கருத்து ...ரிவித்தார்கள்.

## ...பு சத்தியாகிரகத்தில் சரோஜினி

காந்தி ஆலோசனைப்படி, சரோஜினி நாயுடு தனியாக உப்புச் ...தியாகிரகத்தில் போராடத் தீர்மானித்தார். இதற்காக இவர் பங் கேற்ற ...னா உப்புச் சத்தியாகிரத்தில் போலீஸ் கடுமையாகத் தாக்கியது. 1930-... இவர் கைது செய்யப்பட்டார். இரண்டாம் வட்ட மேசை மாநாடு ...டபெற்ற போது பெண்களின் சார்பாகவும் இவர் சென்றார். ...துழையாமை இயக்கத்தின் போது, இவர் வீட்டை விட்டுச் செல்லக் ...டாது என்று பிரிட்டிஷ் அரசு உத்தரவு போட்டது. ஆனால் அதை சற்றும் ...ண்டு கொள்ளாமல், அவர் சென்றார். எனவே அவருடைய ரயிலில், ...பாய்க்கு முன்பு பன்பரா என்ற இடத்தில் கைது செய்யப்பட்டார்.

சரோஜினி நாயுடு உப்பு எடுத்தலில் பெயர் பெற்றார். வேலூரில் ...டபெற்ற பொதுக் கூட்டத்தில், இந்துக்களும் முஸ்லீம்களும் நாட்டின் ...கண்கள் என்று பேசினார். வினோபாவே நடத்திய தனிப்பட்ட ...தியாகிரகத்தில் கலந்து கொண்டார் (டிசம்பர் 3,1940). ஆகவே, அதில் ...வர் கைது செய்யப்பட்டார். ஆனால் அவருடைய உடல்நிலை சரியில்...மல் போனதால், அவர் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் அவர் ...டல்நிலை சீரானதும், மீண்டும் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார்.

1942, ஆகஸ்ட் 9-ல், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் ...ந்து கொண்டதால் கைது செய்யப்பட்டார். சரோஜினி நாயுடுவுக்கு ...டல் நிலை மோசமாகவே அவர் ஆகாகான் அரண்மனையிலிருந்து ...வெளியே வந்தார். ஆனால் அதற்குப் பிறகு பத்து மாதங்கள், அவர் உடல் ...லை மோசமாகி, அவரால் எதுவும் செய்யமுடியாமல் போயிற்று. பிறகு ...கூரில் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்தார். ஆனால் அவர் ...கூர் ரயில் நிலையத்திலேயே மடக்கப்பட்டார். அவர் எந்தக் ...ட்டத்திலும் பேசக் கூடாது என்று அரசாங்கம் அவரைத் தடுத்தது.

ஆனால் அதை அவர் புறக்கணித்து விட்டார். இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பு, உத்திரப் பிரதேசத்தில் முதல் பெண் கவர்னராக பணியாற்றி 1949-ல் இயற்கை எய்தினார்.

## 6. விஜயலட்சுமி பண்டிட்

இந்தியாவில் நேரு குடும்பத்துப் பெண்மணிகள் எல்லோருமே நாட்டுக்காக உழைத்தவர்கள் ஆவார்கள். அவர்களில் விஜயலட்சுமி பண்டிட்டும் ஒருவர். ஜவஹர்லால் நேருவின் தங்கையான இவர், தன்னுடைய பதினைந்தாவது வயதிலேயே நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டார். தன்னுடையதந்தை மோதிலால் நேரு, 1919-ல் அமிர்தசரசில் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த போது, அதன் நடவடிக்கைகளில் கலந்து கொண்டார். பிறகு இவர் ரஞ்சித் பண்டிட் கட்லாவைத் திருமணம் செய்து கொண்டார். இந்தத் திருமணம் அவருடைய தேசப்பற்றை மீண்டும் வளர்த்தது. ஏனென்றால், அவருடைய கணவர் காந்தியின் தொண்டராக இருந்தார்.

### சட்டமறுப்பு இயக்கங்களில் பண்டிட்

விஜயலட்சுமி பண்டிட்டின் தீவிர அரசியல் பிரவேசம், சட்ட மறுப்பு இயக்க காலங்களிலிருந்து ஆரம்பமாகியது. இந்த 1930-31 காலங்களில், இவர் ஏராளமான கூட்டங்களை நடத்தி ஆங்காங்கு சொற்பொழிவுகளை செய்தார். ஆகையால் பிரிட்டிஷ் அரசாங்கம், இவர் இனிமேல் கூட்டங்களில் கலந்து கொள்ளக்கூடாது என்று தடை விதித்தது. ஆனால் அதைப் பற்றிக் கொஞ்சம்கூட கவலைப்படவில்லை விஜயலெட்சுமி பண்டிட். ஆகவே அவரை பிரிட்டிஷ் அரசாங்கம் கைது செய்து, ஒரு ஆண்டு சிறைத் தண்டனை விதித்தது.

இதையடுத்தது அவரைத் தேடி ஏகப்பட்ட பதவிகள் ஓடிவந்தன. 1935-ல், அலகாபாத் முனிசிபில் கமிட்டியின் உறுப்பினர் ஆனார். பிறகு அதே ஆண்டில், கல்வி கமிட்டியின் தலைவராகத். தேர்ந்தெடுக்கப் பட்டார். 1935-ல் பிரிட்டிஷ் அரசாங்கம், அரசியல் சாசன அடிப்படையில் நாடெங்கும் தேர்தல்களை நடத்தியது. அப்போது விஜயலட்சுமி பண்டிட் கான்பூர் தொகுதியிலிருந்து போட்டியிட்டார். அதில் வெற்றியும் பெற்று, உத்திரப்பிரதேச மந்திரி சபையில் இடம் பெற்றார். ஆங்கில அரசில் மந்திரி பதவி பெற்ற முதல் பெண்மணியானார். இந்த மந்திரி பதவியில் இருந்து கொண்டு நாட்டின் சுகாதார, கல்வி வளர்ச்சிகளில் கவனம் செலுத்தினார்.

1940-ம் ஆண்டில் காந்தி தனிநபர் சத்தியாகிரத்தை ஆரம்பித்தார். அப்பொழுது, அவர் ஒரு சில நபர்களையே இந்த சத்தியாகிரகத்தில் இறக்கினார். அவர்களில் விஜயலட்சுமி பண்டிட்டும் ஒருவர். எனும் சிறப்



...ப் பெற்றார். பிறகு 1942-ல், காங்கிரஸ் நடத்திய வெள்ளையனே ...வெளியேறு என்ற இயக்கத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார்.

### ...அரங்கில் பண்டிட்

விஜயலெட்சுமி பண்டிட் ஒரு தலைசிறந்த அரசியல் இராஜதந்திரியாகத் திகழ்ந்ததால், அவர் காங்கிரசின் கொள்கையைப் பற்றியும், இந்தியாவின் நிலையைப் பற்றியும் வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்தார். அமெரிக்காவில் பல இடங்களில் இந்தியா ஏன் சுதந்திரத்திற்காகப் போராடுகிறது என்று பேசிய அவர், அமெரிக்காவின் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஏன் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தை ஆதரிக்கவில்லை ...கடுமையாக விமர்ச்சித்தார்.

மேலும் அவர் அமெரிக்காவில் பல மாநாடுகளில் வீரஉரை ஆற்றினார். 1945 சான்பிரான்சிஸ்கோ மாநாட்டில் கலந்து கொண்டு, ஐ.நா. ...சாசனம் தயாரிக்கக் காரணமாக இருந்தார். சான்பிரான்சிஸ்கோ மாநாட்டில், இந்தியாவின் 60 கோடி மக்களுக்காக பேசினார்.

1945 கலிபோர்னியா சட்டசபையில் ஒரு பொருள் பொதிந்த ...ச் பேசினார். அவர், காலனி ஆதிக்கம் நாட்டில் இருக்கும் வரை ...ம், அமைதி, பாதுகாப்பு எதுவும் நடைபெறாது என்றார்.

அமெரிக்காவில் எப்படி சுவாமி விவேகானந்தர் இந்தியாவின் ...பாட்டை நியாயப்படுத்தி பேசினாரோ, அதுபோல, விஜய லட்சுமி பண்டிட், தன்னுடைய அமெரிக்கச் சுற்றுப் பயணத்தின் போது, இந்தியாவுக்கு ஏன் சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்பதை பல சூழ்நிலைகளோடும் விளக்கிப் பேசினார். இவர் 1945-ல் லங்காஷ்யரில் ...டபெற்ற பிரிட்டிஷ் தொழிலாளர் கட்சி மாநாட்டில் ஒரு தந்தி அனுப்பினார். அதில் எல்லா தொழிற்கட்சித் தலைவர்களும் இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

## ...கேப்டன் லட்சுமி

காப்டன் இலட்சுமி தமிழ் நாட்டுப் பெண். சென்னையில் டாக்டருக்குப் படித்தவர். பெண்கள் சுதந்திரப் போராட்டத்துக்குப் புதியவர் அல்லர். பெண்கள் படிப்பதும், ஆசிரியர்களாவதும், மருத்துவர்களாவதும் புதுமையல்ல.

பெண்கள் பொது வாழ்க்கையில் சாதனைகள் செய்வதும் ...ாட்டுவதும், சட்டசபையில் தங்கள் குரல்களை முழுங்குவதும் ...ப் புதுமையல்ல. ஆனால் ஓர் இராணுவ வீராங்கனையாக போர்க்களத்தில் பகைவரை எதிர்கொள்ள முரட்டுக் காலணி சத்தம் செய்ய, ...யில் ஆயுதமேந்தி பெண் செல்கிறாள். இது ஒரு பெண்ணைச் சுற்றிய

தடைகளை உடைத்தெறிந்து விட்டுத் தங்கள் ஆற்றலை நிரூபிக் கப் புறப்பட்டு விட்ட மகிழ்ச்சிப் பரவசமாகவே எதிரொலித்தது எனலாம்.

அகிம்சைவழிப் போராட்டத்துக்கு முதன்னை பெறுவது நெஞ் சரம் மட்டுமே. இதற்கான ஒழுக்கம் அவசியமாக வற்புறுத்தப்படும். இந்தப் போராட்டத்தில் எல்லா வயதினரும் ஈடுபடலாம். அதற்கென்று பயிற்சிகள் தேவை இல்லை.

ஆனால் ஆயுதம் தாங்கிய போரின் அடிப்படையே வேறு. ஆயுதம் தாங்க வெறும் மனத்திண்மை மட்டும் போதாது. இளமை, உடல் வலிமை பல நாட்கள்உடலை வருத்தும் பயிற்சிக்கு ஈடுகொடுக்கும் சகிப்புத் தன்மை, நேரம் எல்லாமே தேவை. இப்பயிற்சி ஒழுக்கங் களுக்கு உடை, உணவுடன் ஆயுதங்களைப் பயன்படுத்த, பராமரிக்கத் தேவையான அடிப்படைக் கல்விப் பயிற்சியும் இன்றியமையாததாகும். இம்முறையில் ஆள்பலத்துடன் பொருள் வளமையும் வேண்டும்.

இந்திய வரலாற்றில் ஜான்ஸிராணி இலட்சுமி பாய் போன்ற வர்கள் தம் நாட்டைக் காப்பாற்ற அவரசகால நடவடிக்கையாகப் போரில் தங்கள் வீரத்தை உலகுக்கு வெளிப்படுத்தியிருப்பது சிறப்புதான். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் போரின் முறையே வேறு. அந்தப் போர் முறைக்கு, இதுவரையிலும் 'மெல்லியல்' என்று முத்திரை குத்தப்பட்டு வீட்டுக்குரிய பணிகளில் மட்டுமே ஈடுபட்டுக் கொண்டிருந்த பெண்களைக் கொண்டே உருவாக்கி அதன் தளபதி யாகி,இயக்கிச் சென்ற பெருமைக்குரியவர், 'காப்டன் லட்சுமி' என்று அறியப்படும் அபூர்வமான பெண்மணி.

இலட்சுமியின் தாய், தந்தை அம்மு-சுவாமி நாதன். அந்த தம்பதி யினர் சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமான பங்கு வகித்தார்கள். அத னால் தானோ என்னமோ அம்முவின் மகளான இளம் இலட்சுமியிடம் நாட்டு விடுதலை, சமுதாய சமத்துவம்ஆகிய இலட்சியங்கள் அந்தப் பருவத்திலேயே மனதில் இடம் கொண்டன.

1930-ஆம் ஆண்டில் பதினாறு வயதான இலட்சுமி, இடை நிலைக்கல்வி பயில, இராணி மேரிக் கல்லூரியில் சேர்ந்தாள். கதரே அணியும் தீவிரக் காங்கிரஸ் இளைஞர் அணியில் உறுப்பினரானாள். பகத் சிங் வழக்குக்குக் கல்லூரியில் நிதி திரட்டும் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். அதே 1930 -ஆம் ஆண்டு, சத்யாக்கிரகப் போராட்டத்தில் மறியலில் ஈடுபட்டதற்காகக் கைது செய்யப்பட்டு ஒரு நாள் முழுவதும் போலீஸ் காவலில் இருக்கும் புதிய கிளர்ச்சி அனுபவம் பெற்றார். தாயின் அரசியல் தொடர்புகளும், ஈடுபாடுகளும் லட்சுமிக்கு அவளையறி யாமலேயே இயல்பாகவே வந்துவிட்டன என்றாலும், அவருடைய அரசியல் கொள்கைகள் ஓர் இலக்கையும் வீச்சையும் பெறும் சந்தர்ப்பம்



...று விதமாக வந்தது. பல அனுபவங்களால், அரசியல் விடுதலைக்கும் ...தப் புரட்சியே உகந்தது என்றே நம்பினார். இதனால், தீவரயாகத் ...யைப் பின்பற்றி காந்திஜியின் அகிம்சைக் கொள்கைகள் வகுத்த ...ராட்டங்களில் மேலும் ஈடுபடாமல், மருத்துவக் கல்வியை முடிக் ...னார். மருத்துவத்தில் சிறப்புப் பயிற்சியும் பெற்றார்.

இலட்சுமியின் தந்தை இறந்தார். தாயும் ஒரே தங்கையும் ...மெரிக்காவில் இருந்தனர். அதனால் சென்னையில் எந்தப் பிடிப்பும் ...ல்லாமல் நாள்களைக் கழித்து வந்த லட்சுமி, மருத்துவராக சிங்கப் பூர் ...ல்கின்ற வாய்ப்பை ஏற்றார்.

இந்தியாவில் அக்காலத்தில் சுதந்திரக் கிளர்ச்சி தீவிரமாகப் பரவி ...ருந்தது. ஆனால் சிங்கப்பூரில் மக்கள் சமுதாயமே சிக்கல் வாய்ந்ததாக ...ருந்தது. காலனி ஆதிக்கம் குறித்த விழிப்புணர்வு அவர்களிடத்தில் ...ல்லாமல் இருந்தது. எப்படி அவர்கள் மனதில் சுதந்திர உணர்வைக் ...கொண்டுவருவது என்று சிந்தித்த லட்சுமிக்கு நேதாஜியின் சிங்கப்பூர் ...வு நல்ல தீர்ப்பு அளித்தது.

உலகெங்கிலுமுள்ள அரசுகளுக்கும் வல்லரசுகளுக்கும்-இந்திய ...அரசு வெளிநாட்டு மண்ணில் இருந்து இயங்கி, தன் படையை இந்தியா ...வுக்கு, தாய் நாட்டுக்கு அனுப்பி பிரிட்டிஷாரை விரட்டியடிப்பது இலட் ...சியம் என்று காட்டப்பட்டது. ஜான்ஸி ராணி படை உருவானது.

லட்சுமி, ஜான்சிராணி படைத்தளபதியாக மட்டுமின்றி, ...பெண்கள் நலனுக்கான ஓர் அமைச்சராகவும் பொறுப்பேற்றார். முதல் ...கட்டமாக லட்சுமி, சிங்கப்பூரிலேயே ஆறாயிரம் பெண்களைக் கொண்ட ...ஒரு பேரணியை ஒழுங்கு செய்தார். ஆயிரக்கணக்கான பெண்களில் ...இருந்து ஐந்நூறு பேரைத் தேர்ந்தெடுப்பது மிகக் கடினமாகவே இருந்தது. ...தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது.

பயிற்சி முடிந்ததும், ஜான்ஸிராணிப்படை சிங்கப்பூரில் இருந்து ...ர்மாவை நோக்கிப் பயணமானது. அங்கிருந்து அணி அணியாகப் படை ...டெல்லியை நோக்கிப் போர் முனைக்குச் சென்றது. பலவிதங்களில் போ ...ராடிச் சென்ற போது எதிரிகளின் குண்டு வீச்சினால் பெண்கள் படுகாயம் ...அடைந்தனர். அதனால் ஒரு காட்டுப் பகுதியில் மருத்துவமனை ...அமைத்து அவர்களுக்குச் சிகிச்சை தரும் பணியில் ஈடுபட்டார் லட்சுமி. ...மருத்து வமனை என்று அடையாளமிடப்பட்டு காட்டப்பட்டும், அது ...குண்டு வீச்சுக்கு இரையானது; மருத்துவமனை தரைமட்டமாயிற்று. ...பலரும் அமரராயினர்.

எஞ்சியவர்கள் ரங்கூனை நோக்கி நடந்தனர். ஆனாலும், ...ஆங்கிலேயரின் கொரில்லாப்படைத் தளபதி லட்சுமி போர்க்கைதி ...யாகத் தனிமைப்படுத்தப்பட்டாள். பிறகு அவர் மீது எந்தக் குற்றமும்

சுமத்த முடியாததால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். கல்கத்தாவில் விடப்பட்ட இவர் நேதாஜியின் சகோதரி மகள் மூலம் டெல்லிக்கு அனுப் பப்பட்டாள். அது வரையிலும் தன் தாய், தங்கை, சுற்றம் என்று யாரு டைய தொடர்பும் இல்லை.

லட்சுமி என்ற இந்த அபூர்வமான, வீரத்துக்கும், துணிவுக்கும் நேர்மைக்கும், மனிதாபிமானத்துக்கும் இருப்பிடமாக விளங்கிய பெண் மணி, பாரத அன்னையின் புகழை உலகளாவிய தரத்துக்கு உயர்த்தியிருப் பவர். வாழ்க்கை என்னும் நீரோட்டம் எப்போதும் தடைப்படுவதில் லை. லட்சுமியைப் பொறுத்த வரையிலும் அது தேசிய நீரோட்டம். சமூக நீரோட்டம். மனிதரால் போடப்பட்ட குறுகிய எல்லைகளைத் தகர்த்துக் கொண்டு பரந்த எல்லைகளில் பாயும் நீரோட்டம்.

ஜான்ஸி ராணி தளம் அமைத்துப் போராடி முத்திரை பதித்து விட் டோம். இனி என்ன! என்று விடுதலை பெற்ற இந்தியாவில் சுகமாக இருப்போம் என்று கருதவில்லை அவர்.

பிரிட்டானிய இராணுவத்தில் பணியாற்றியவர்கள் ஓய்வூதியம் பெற்றார்கள். ஆனால் இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்து, தாய் நாட்டு விடுதலைக்காகத் தங்கள் இன்னுயிரைத் துச்சமாக நினைத்த வர்கள். சுதந்திர இந்தியாவில் கண்டு கொள்ளப்படவே இல்லை என்பது தான் உண்மை. அப்போது, நாடும் வீடும் தெரியாமல் தாய் மண்ணில் வீழ்ந்தவர்களுக்கு ஆவன செய்ய இவர் முழுமூச்சோடு முனைந்தார்.

ஆங்கிலேயப் படையில் இருந்த பின், இந்திய தேசிய இராணுவத்தில் அருந்தொண்டாற்றிய சகபோராளி-தளபதி சேகலை, இந்தியா விடுதலை பெற்ற 1947-ஆம் ஆண்டில் லட்சுமி மணந்து கொண்டார்.

1972-இல் பங்களாதேசப் போர் நிகழ்ந்த போது, அப்போது வங்க கவர்னராக இருந்த பத்மஜா நாயுடுவுக்கு எழுதி, வலிய உதவி செய்யச் சென்றார். போரில் காயமடைந்தவர்களின் நிவாரணப் பணிக்கு நிதி திரட்டி அளித்தது மட்டுமின்றி, தாமே சென்று போர்ச் சூழலில் மருத்துப் பணியாற்றினார்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற உயர் இலக்கே இவருடைய வாழ்வின் குறிக்கோளாக இவருடைய ஒவ்வொரு செய லிலும், பணியிலும் பளிச்சிடுகிறது. தன் இரு மகள்களுடன் கான்பூரில் வசிக்கும் இவர், இன்றும் மருத்துவப் பணியிலும், பொதுச் சேவையிலும் தீவிரமாக ஈடுபட்டு இயங்குகிறார்.

மகளிர் பல துறைகளில் ஆற்றல் பெற்றுத் தங்கள் திறமைகளை விளக்கிய போதும், இன்னமும் பழைமைவாதமும், மூட நம்பிக்கை களும், அறியாமையும், உலகளாவிய நுகர் பொருள் வாணிபமும் மகளி



முன்னேற்றப் பாதையில் தடைக்கற்களாகவே இருக்கின்றன. சுதந் பெற்று ஐம்பதாண்டுகள் சென்ற பின்னரும், இன்னமும் அந்நாள் இலட்சியக் கனவு நனவாகவில்லை. ஆனால் அதற்காக இப்பெரு சோர்வடையவில்லை. சில ஆண்டுகளுக்கு முன், பெங்களூரில் அழகியைத் தேர்ந்தெடுக்கும் விழா, மகளிரின் கண்ணியமான உரிமைகளையே கொச்சைப்படுத்துவதாகும் என்ற நோக்கில், ஆயிரம் பெண்களைத் திரட்டிக் கொண்டு எதிர்ப்புத் தெரிவித்த ...னை இவர்.

அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் தலைவர்களில் ஒருவ ...சாதி-மதம்-ஒடுக்குதல் போன்ற முள்வேலிகளைக் களைந்து பரந்து ...சமுதாய மேன்மையைச் சகோதரத்துவ, மனிதாபிமான அறநிலை ...எழுப்ப வேண்டும் என்று உறுதியுடன் இயங்கிய இலட்சுமி, 2011- ...மரித்தார்.

## இந்திராகாந்தி

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பெண்மணி யார் என்று ...டால் 'இந்திரா காந்தி' என்று தயங்காமல் கூறுவார்கள். நேருவுக்குச் ...மான வாரிசாக அவர் திகழ்ந்தார்.

இந்திராகாந்தியின் வாழ்க்கையில் பல திருப்பங்கள் நிறைந் ...ந்தன. இந்தியாவின் முதல் பிரதமர் என்ற பெருமை பெற்ற ஜவஹர் ...ல் நேரு -கமலா தம்பதியின் வாரிசாக 1917-ஆம் ஆண்டு நவம்பர் ...ம் 19-ஆம் தேதி பிறந்தார் இந்திரா. அவர் பிறந்தது அலகாபாத்தில் ...ள ஆனந்தபவனத்தில். ஆனந்த பவனம் 37 அறைகள் கொண்டது. ...ந்தா மோதிலால் நேரு, பெரிய கோடீஸ்வரர். மோட்டார் கார் ...கண்டுபிடிக்கப்பட்ட புதிதில் 1904-ஆம் ஆண்டில் காரை இறக்குமதி ...செய்த முதல் இந்தியர் அவர்தான்.

இந்திரா காந்தி சிறு குழந்தையாக இருந்த போது சுதந்திரப் போ ...ட்டம் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. பெற்றோர் அடிக்கடி சிறை ...ன்றதால், இந்திரா தனிமையில் இருக்க நேர்ந்தது. 1925-ஆம் ஆண்டில் ...இந்திராவின் தாயார் கமலா, உடல் நலம் குன்றி மருத்துமனையில் ...சேர்க்கப்பட்டார். அவரை சுவிட்சர்லாந்து நாட்டக்கு அழைத்துச் சென்று ...சிகிச்சை அளிப்பது நல்லது என்று டாக்டர்கள் கூறியதால், ...சுவிட்சர்லாந்துக்கு நேரு அழைத்துச் சென்றார். இந்திராகாந்தியும் உடல் ...சென்றார். அவருடைய படிப்பு அந்த நாட்டில் தொடர்ந்தது. ...கல்கத்தாவில் இரவீந்திரநாத் தாகூர் நடத்தி வந்த சாந்தி நிகேதனிலும் ...சிலகாலம் இந்திரா படித்தார்.

அலகாபாத் ஆனந்தபவனத்தில் மோதிலால் நேரு ஒரு நூல் நிலை ...வைத்திருந்தார். இந்திரா காந்தி பள்ளியில் கற்றதை விட, அந்த நூல்

நிலையத்தில் உள்ள புத்தகங்களைப் படித்ததன் மூலம் கற்றது அதிகம். தவிரவும் நேரு சிறையில் இருந்த போது உலக சரித்திரத்தைக் கடிதங்களாக மகள் இந்திராவுக்கு எழுதினார். அதன் மூலம் உலக ஞானத்தைப் பெற்றார் இந்திரா.

**திருமணம் :**

சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்ட பெரோஸ் காந்தி என்ற இளைஞர் இந்திராவையும், நேருவையும் சந்திக்க ஆனந்த பவனுக்கு வருவது உண்டு. அப்போது நேரு குடும்பத்தாருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது.

சுவிட்சர்லாந்தில் சிகிச்சை பெற்ற கமலா, பின்னர் டாக்டரின் ஆலோசனையின் பேரில் ஜெர்மனிக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்குள்ள மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். அவர் குணம் அடையாமலேயே 1936 பிப்ரவரி 28-ம் தேதி காலமானார். உயிர் பிரியும் போது, நேரு, இந்திரா ஆகியோருடன் பெரோஸ் காந்தியும் உடன் இருந்தார். தனது 19 ஆவது வயதிலேயே தாயை இழந்த இந்திரா காந்தி, மிகவும் சோகமாக இருந்தார். அப்போது பெரோஸ் காந்தி அவருக்கு ஆறுதல் கூறினார்.

அந்தச் சமயத்தில், இந்திராவை மணக்கவிரும்புவதாக, இந்திராவிடம் தெரிவித்தார் பெரோஸ். இந்திராவுக்கு முதலில் இதில் சம்மதம் இல்லாவிட்டாலும், பெரோஸ் காந்தியின் நற்பண்புகளையும், தன் குடும்பத்திடம் கொண்டுள்ள அன்பையும் எண்ணிப் பார்த்தபோது, அவருடைய விருப்பத்திற்கு சரி சொன்னார். இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தனர்.

1942-ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம், 26-ஆம் தேதி இந்திரா-பெரோஸ் காந்தி திருமணம், இந்திரா பிறந்த ஆனந்தபவனத்திலேயே சிறப்பாக நடைபெற்றது. சாஸ்திர சம்பிரதாயப்படி நடந்த திருமணம், பிறகு சட்டப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டது.

இந்திரா-பெரோஸ் தம்பதிகளுக்கு முதல் குழந்தை 1944-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20-ஆம் தேதி பிறந்தது அந்தக் குழந்தை ராஜீவ் காந்தி 1946-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ஆம் தேதி இந்திராவுக்கு இரண்டாவது குழந்தை பிறந்தது. அதுதான் சஞ்சய்.

**அரசியலில் இந்திரா காந்தி :**

சுதந்திரத்திற்குப் பிறகு நேரு பிரதமரானார். அப்போது, பெரோஸ் காந்தி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். அவருடைய சொற்பொழிவுகள் பிரபலமானவை.

1960 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 8-ஆம் தேதி, பெரோஸ் காந்தி மாரடைப்பால் காலமானார். அப்போது அவருக்கு வயது [illegible]தான்.



...ராவுக்கு வயது 43. கணவரின் எதிர்பாராத மரணம் இந்திராவை ...த்தில் ஆழ்த்தியது. அந்தச் சோகத்திலிருந்து அவர் விடுபட வெகு ...யிற்று. தந்தையின் அலுவல்களில் உதவி புரிவது, குழந்தைகளை ...த்துக் கொள்வது போன்ற பணிகளில் ஈடுபட்டுக் கவலையை ...மறந்தார்.

**...மராக இந்திரா காந்தி :**

1964 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் தேதி நேரு காலமானார். ...க்குப் பிறகு பிரதமரான லால்பகதூர் சாஸ்திரி, 1966 ஆம் ஆண்டு, ...மாதம் 11 ஆம் தேதி திடீரென்று மரணம் அடைந்தார். அதனால் ...வரலாற்றில் பெரும் திருப்பம் ஏற்பட்டது சாஸ்திரி மந்திரி சபையில் ...லிபரப்புத் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்த இந்திராகாந்தி, ...முயற்சியால் பிரதமரானார்.

இந்திரா பிரதமராக இருந்த போது, இந்திய வரலாற்றில் மா...ம் நிகழ்ச்சிகள் நடந்தன. மேலிடக் கட்டளையை மீறி, ஜனாதிபதி ...க்கு வி.வி. கிரியை ஆதரித்து சஞ்சீவ் ரெட்டியை எதிர்த்ததால், காங் ...கட்சி இரண்டாக உடைந்தது.

1971-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-ஆம் தேதி இந்தியா மீது ...படுத்த பாகிஸ்தானுக்கு சரியான பதிலடி கொடுத்தது மட்டுமின்றி, ...பாகிஸ்தானை விடுவித்து, வங்காள தேசம் என்ற சுதந்திர நாடு ...காரணமாக இருந்தார்.

...அவர் தேர்தல் செல்லாது என்ற கோர்ட்டு தீர்ப்பு கூறியபோது ...சட்டப்பூர்வமாக எதிர்கொள்ள முடிவு செய்தார். ஆனால், ...பதவியில் இருந்து இறக்குவதற்கு எதிர்க்கட்சிகள் ஒன்று ...போது போராட்டத்தில் குதிக்க முடிவு எடுத்ததார் 1977-ஆம் ...மார்ச் மாதம் நடந்த தேர்தலில் தோல்வியைத் தழுவினார். ...மூன்று ஆண்டுகளுக்குப் பின் அரசியல் காற்று திசை மாறி வீச, ...ஆண்டு ஜனவரியில் நான்காவது முறையாகப் பிரதமரானார்.

...சீக்கியர்களின் பொற்கோயிலுக்குள் பதுங்கிக் கொண்டு போர் ...தீவிரவாதிகளை ஒடுக்க இராணுவத்தை அனுப்பினார். தீவிரவாதி...க்கப்பட்டனர். எனினும், சீக்கியர்களின் பகையைச் சம்பாதித் ...தால், 1984-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 31-ஆம் தேதி ...உடைய சொந்தப் பாதுகாவலர்களான இரு சீக்கியர்களால் அவர் ...கொல்லப்பட்டார்.

இந்திராகாந்தியின் அரசியல் பற்றி மாறுபட்ட கருத்துகள் கொண் ...டவர் கூட, அவருடைய அஞ்சா நெஞ்சத்தைப் போற்றத் தவற ...நாட்டுக்குப் பாடுபட்டதற்காக, மகாத்மா காந்தி, ஆபிரகாம்

லிங்கன் உள்பட பல தலைவர்கள் துப்பாக்கிக் குண்டுகளையே பரிசாகப் பெற்றனர். ஆனால், பெண்மணி ஒருவர் தன் கொள்கைக்காக துப்பாக்கிக் குண்டுகளால், உடல் முழுவதும் சல்லடையாகத் துளைக்கப்பட்டு, வீராங்கனையாக சொந்த மண்ணில் சாய்ந்தநிகழ்ச்சியை, உலக வரலாற்றில் வேறு எங்கும் காண முடியவில்லை.

## 9. அன்னை தெரசா

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்பது தமிழ் பொருள் நிறைந்த பொன் மொழி. இந்தப் பொன்மொழிக்கேற்ப வாழ்ந்து காட்டியவர் அன்னைதெரசா.

இவர் யூகோஸ்லேவியா நாட்டில் செகாப்ஜி என்ற கிராமத்தில் 1919-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27-ஆம் தேதி பிறந்தார். பெற்றோர் இவருக்கு வைத்த பெயர் அக்னெஸ் காணஷா பொஜாக்ஷா. வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு நம்பிக்கையே முக்கியமானது என்பதைத் தெரிந்து கொண்டார். அவருக்குப் பன்னிரெண்டு வயதாகும் போது இறைவனது உள்ளுணர்வைப் பெற்றார். ஏழை, எளிய மக்களுக்கு உதவி செய்வதற்காக இறைவன் தன்னைப் படைத்திருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டார்.

யூகோஸ்லேவியாவில் உள்ள லொரேட்டா என்ற கன்னி மடத்தில் சேர்ந்து பணிபுரிய விரும்பினார். அதற்குரிய பயிற்சிகளை அயர்லாந்தில் உள்ள மதப் பயிற்சி மடத்தில் பெற்றார். தொடர்ந்து டப்ளின் என்னும் இடத்தில் உள்ள மடத்திலும் பயிற்சியை மேற்கொண்டார்.

### கல்கத்தாவில் அன்னை தெரசா :

அன்னை தெரசா தன்னுடைய 15-ஆம் வயதில் கொல்கத்தாவுக்கு வந்தார். புனித மேரி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பணியைத் தொடங்கினார். ஓய்வு நேரங்களை இறை வழிபாட்டில் கழித்தார். கொல்கத்தாவிற்கு வந்த பிறகு தெரசா என்ற அழைக்கபட்டார்.

கல்விப் பணி செய்வதால் மட்டுமே அன்னை தெரசா மன நிறைவு அடையவில்லை. ஏழைகளுக்கு சேவை செய்ய வேண்டும், அகதிகளுக்கு உதவி செய்ய வேண்டும், அனாதைக் குழந்தைகளைப் பராமரிக்க வேண்டும் என்று விரும்பினார். தொழு நோயாளிகளுக்குத் தொண்டு செய்யவும், தெரு ஓரங்களில் விலங்குகளைப் போல மரணத்துடன் போராடிக் கொண்டு இருப்பவர்களுக்கு சேவை செய்யவும் முடிவு எடுத்தார்.

ஒரு பெண்ணால் பொது மக்களுக்குத் தனியாக தொண்டாற்ற முடியாது என்று பலரும் கூறினார்கள். அவர் பயிற்சி பெற்ற லொரேட்டா மடமும் இதே கருத்தைக் கூறியது. இறுதியில் ரோம் நகரத்தில் இருந்



...ண்டவர் தெரசாவின் சேவை பணிகளுக்கு அனுமதி அளித்தார். ...ம் அன்னை மகிழ்ச்சி அடைந்தார்.

அன்னை அன்பே உருவானவராக விளங்கினார். ஏழைகள் மீது ...செலுத்துவதற்கும் ஏழைகளை அறிந்து கொள்வதற்கும் நாமும் ...களாக மாற வேண்டும் என்று கூறினார்.

### ...வாழ்வில் அன்னை தெரசா :

1950-ஆம் ஆண்டு 'நிர்மல் ஹிருதயா' என்ற பெயரில் தொண்டு ...த்தை நிறுவினார். இதற்கு 'தூயமனது' என்பது பொருள். அங்கு ...ந்தவைத்த உடல்களில் புண்களோடு உள்ளவர்களைத் தங்க வைத் ...அவர்களது புண்களைத் கழுவி சுத்தப்படுத்தினார். உற்றார் உறவினர் ...ல் கைவிடப்பட்ட நோயாளிகளைத் தங்க வைத்துப் பராமரித்தார். ...ப் பார்க்கவே அருவருப்பு தரக்கூடிய வேலைகளை அன்னை தெரசா ...ய் செய்தார்.

உடல் நலம் இல்லாதோர், தொழு நோயாளிகள் ஆகியோருக்கு ...த்துவம் செய்ய பாட்னாவில் உள்ள மெடிக்கல் மிஷனரியில் பயிற்சி ...க் கொண்டார். எளிமையின் சிகரமாக விளங்கினார். மிஷனரிஸ் ...ப் சாரிட்டி அமைப்பின் ஊழியர்கள் அணியும் நீலநிறக்கோடுகளைக் ...ண்ட வெள்ளை நிறத்தால் ஆனபுடவையை அணிந்து கொண்டார். ...நிறுவனம் ஏழ்மை, தூய்மை, கீழ்ப்படிதல், இலவசச் சேவை என்ற ...ந்து எண்ணங்களின் அடிப்படையில் செயல்பட வேண்டும் என்று ...தெரசா விரும்பினார்.

அன்னை தெரசா ஒரு முறை காரில் செல்லும் போது குப்பைத் ...தொட்டியில் அனாதைக் குழந்தை போடப்பட்டிருப்பதைப் பார்த்தார். ...ந்த மாதிரியான குழந்தையைப் பாதுகாக்க விரும்பினார். ...தற்காக 1955-ஆம் ஆண்டு 'சிசுபவன்' என்ற அமைப்பினைத் தொடங்கினார். இந்தப் பாதுகாப்பு இல்லத்தில் ஊனமுற்ற குழந்தைகளையும் ...சேர்த்துக் கொண்டார்.

தொழு நோயாளிகளுக்காக தனியாக ஓர் இல்லத்தை அமைத்து அவர்களுக்கு சிகிச்சை அளிக்க வெளிநாட்டில் இருந்து தொழுநோய் ...சிகிச்சை நிபுணர்களை வரவழைத்தார். தொழுநோயின் மீது இருந்த ...அச்சத்தை அகற்ற முயன்றார். நோயாளிகளிடம் கனிவுடன் பேசுவதன் ...மூலம் தொழு நோயின் கொடுரத்தைக் குறைத்தார்.

பாகிஸ்தான் பிரிந்து வங்காள தேசம் ஆனபோது உள்நாட்டுப் ...போர் ஏற்பட்டது. அப்போது வங்காள தேச மக்கள் பலரும் அகதிகளாக ...இந்தியாவுக்கு வந்தனர். அவர்களுக்காக அகதிகள் பாதுகாப்பு இல்லம் ...ஒன்றை அமைத்தார்.

1962-ஆம் ஆண்டு மத்திய அரசு அவருக்கு 'பத்ம ஸ்ரீ' விருது வழங்கிச் சிறப்பித்தது. அதே ஆண்டு பிலிப்பைன்ஸ் நாடு அந்த நாட்டின் உயரிய விருதான 'மாக்சே' விருதை தெரசாவுக்கு வழங்கி கௌரவித்தது. 1917-ஆம் ஆண்டு கென்னடி சர்வதேச விருது வெளி நாட்டவரால் வழங்கப்பட்டது 1972 ஆம் ஆண்டு நமது நாட்டின் ஜவஹர்லால் நேரு சர்வதேச விருது அவருக்கு வழங்கப்பட்டது. 1979-ஆம் ஆண்டுஉலகமே போற்றும் நோபல் பரிசு சமாதானத்திற்காக அன்னை தெரசாவுக்கு வழங்கப்பட்டது.

அன்புதான் வாழ்க்கை, அன்பே கடவுள் என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்த அன்னை தெரசா 1997-ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். அதே ஆண்டு தமிழக அரசு மகளிர் பல்கலைக் கழகத்தை தொடங்கியது. அதற்கு அன்னை தெரசா பல்கலைக் கழகம் என்று பெயரிட்டு சிறப்பு செய்தது.

## 10. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி

**கல்வி :**

புதுக்கோட்டையில் திருக்கோகர்ணப்பகுதியில் வாழ்ந்த நாராயணசாமி சந்திரம்மாள் தம்பதியரின் மூத்த மகளாகப் பிறந்தார். சுந்தரம்மாள், நல்லமுத்து என்ற தங்கைகளும், இராமையா என்ற தம்பியும் அவருடைய உடன்பிறப்புகள் அவரது தந்தை, தாயார் புதுக் கோட்டை மகாராஜா கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றியவர். இளமையிலேயே அறிவாற்றலும் திறமையும் கொண்டவராகத் திகழ்ந்தார். வீட்டுக் கணக்கு மற்றும் வரவு செலவுகளைத் தெரிந்து கொள்ளும் நோக்குடன் நான்கு வயதில் திண்ணைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பப்பட்டார். ஆனால் அவருடைய ஆசிரியர்களின் ஒத்துழைப்பு காரணமாக அவரது பெற்றோர்கள் அவரை மெட்ரிகுலேசன் வரை படிக்க அனுமதித்தனர். அவ்வாண்டு தேர்வில் 100 பேர் பங்கு பெற்றனர். ஆனால் பத்துபேர் மட்டுமே தேர்ச்சியடைந்தார்கள். அவர்களுள் முதன்மையாகத் தேர்ச்சி பெற்றார். அவ்வாறு அவர் பெற்ற வெற்றி மூலம் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்ற கேள்வியை முறியடித்தார். சமுதாய நலனுக்காகவும், பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் தன்னுடைய அறிவாற்றலையும் திறமையையும் பயன்படுத்திய அவர் பலதுறைகளில் முதன்மை பெற்றவராயிருந்தார்.

மெட்ரிகுலேசன் தேர்வில் முதன்மை பெற்ற முத்துலட்சுமி, புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியில் முதன்முறையாகச் சேர்க்கப்பட்ட பெண் மாணவி இவர்தான். 1907ல் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்ட முதலாவது ஒரே பெண்மணி முத்துலட்சுமிரெட்டி தான். அரசினர் மகப்பேறு மற்றும் கண் மருத்துவமனையில் பயிற்சி



த்துவராகச் சேர்ந்த முதல் பெண்மணியும் அவர்தான். ஆங்கிலேயர் ட்சியின் போது சட்டசபைக்குள் பிரவேசித்த முதல் பெண் மணி த்துலட்சுமிதான். 1939ல் சென்னை மாநகராட்சியில் முதல் ட்டர்வுமன் (Alder Women) ஆகப் பொறுப்பேற்றவரும் அவரே. தமிழ் ழி சமூக ஆலோசனைக் குழுவின் முதல் தலைவியாக 1954ல் பணியாற் றியவர் முத்துலட்சுமி ரெட்டியாவார்.

**திருமணம் :**

ஒரே பெண் மருத்துவரான அவருடைய தொழில் செழிப் பற்றிருந்தது. விசாகப்பட்டினம் கிங் ஜ்யார்ஜ் மருத்துவமனையில் பணி யாற்றிய டாக்டர் டி.சுந்தர ரெட்டி எம்.ஆர்.சி பட்டம் பெற்றவர். திருமணப் பேச்சு எடுக்கப்பட்டவுடன் டாக்டர் இருவரும் சந்தித்தனர். அப்போது தன்னுடைய உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். அவர் ஏழை, எளிய மக்களுக்கு இலவச மருத்துவ வசதியளிக்க உதவ வவேண்டுமென விடுத்த வேண்டுகோளையும் அவர் ஏற்றுக் கொண்டார். முத்துலட்சுமி ரெட்டியின் சமூக மற்றும் அரசியல் பணிகளில் அவருக்குச் சுதந்திரம் நல்கவும் கணவர் ஒப்புக் கொண்டார். 1914ல் சமாஜ்சட்டப்படி திருமணம் நடைபெற்றது. அத்தம்பதியரின் வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக இருக்கவில்லை. சுந்தர ரெட்டிமேற் படிப்பிற்காகப் பெருந்தொகையைக் கடனாக வாங்கியிருந்தார். புதுக் கோட்டை மன்னரிடம் கொண்டிருந்த சீரான தொடர்பு காரணமாக அவருக்கு புதுக்கோட்டை பெரிய மருத்துவமனையில் உயர் மருத்துவ அதிகாரியாக பணியாற்றும் வாய்ப்பினை முத்துலெட்சுமி ரெட்டியின் ...ர்ந்தை வாங்கித்தந்தார்.

படிப்பு முடிந்தபின் அவருக்குப் பல இடங்களிலும் பணியாற்ற வாய்ப்புக்கிட்டியது. ஆயினும் அவர் சமுதாயப் பணியையே தம்முடை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டார். டாக்டர் ஜிப்மர் அவர்களின் உதவியாளராக மகப்பேறு மருத்துவராகச் செயல்பட்டார். அங்கிருந்த ஆங்கிலப் பெண்கள் முத்துலெட்சுமியை இந்தியர் என்ற ஒரே காரணத் திற்காக வெறுத்து ஒதுக்கினர். இத்தகைய இனவேறுபாடுகளால் துன்பத் திற்குள்ளாக்கப்பட்ட முத்துலெட்சுமி தன்னுடைய ஊரான புதுக்கோட் டைக்குத் திரும்பினார். உள்ளூரிலும் கிராமப்புறங்களிலும் இருந்த ஏழைப் பெண்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சையளித்தார்.

முத்துலட்சுமி ரெட்டி தம்பதியினருக்கு ராம்மோகன், கிருஷ்ண மூர்த்தி என்ற இரு மகன்கள். மூத்தவரான ராம்மோகன் டில்லியில் திட்டக்குழு இயக்குநராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இளையவரான கிருஷ்ணமூர்த்தி ஒரு மருத்துவர். அடையாறு புற்றுநோய் மருத்துவ மனையில் புற்றுநோயாளிகளைக் காப்பாற்றும் பொறுப்பிலிருப்பவர்.

### சமூக சேவை :

அண்ணல் காந்தியடிகள் மற்றும் அன்னிபெசன்ட் அம்மையார் ஆகியோரின் தூண்டல்கள் காரணமாக அவர் ஒரு சேவகியானார். பெண்களின் மூடநம்பிக்கையை விடுத்து அவர்கள் மற்றும் குழந்தைகள்நலன் மற்றும் மேம்பாட்டில் கவனம் செலுத்தினர். பெண்ணொருவரை பொதுப் பணியில் காண்பது அரிதாகக் காணப்பட்ட அக்காலத்தில் பெண்கள் முன்னேற்றத்தில் ஈடுபடலாயினர். 1926ல் இங்கிலாந்துக்கு மேற்படிப்புக்குச் சென்ற அவர் அதனை முடித்துத் தாயகம் திரும்பிய போது பாரீசில் நடைபெற்ற பன்னாட்டு பெண்கள் மாநாட்டில் இந்திய பிரதிநிதியாகப் பங்கேற்றார். அதன்பின்பு இந்திய பெண்கள் அமைப்பு (Indian Women Association) மேற்கொண்ட முயற்சிகளால் தமிழ்நாட்டுச் சட்டசபை கவுன்சில் துணைத் தலைவரானார்.

### பெண் விடுதலைக்கான நடவடிக்கைகள் :

1917ல் அன்னிபெசன்ட் அம்மையார் மார்க்ரெட் கசின்ஸ் ஆகிய இருவராலும் ஆரம்பிக்கப்பட்ட இந்திய மாதர் அமைப்பில் பெரும் பங்கேற்றார். அதனால் இந்தியப் பெண்கள் அமைப்பு சார்பில் 'விஜிலென்ஸ் அசோஷியேசன்' என்ற விழிப்புணர்வு அமைப்பு ஒன்றினை உருவாக்கினார். 1920-ல் இந்தியப் பெண்கள் அமைப்பு சார்பில் 'குழந்தைகள் உதவிச் சங்கம்' என்ற அமைப்பினை உருவாக்கினார். குற்றம் செய்த குழந்தைகளுக்கு காவல் துறையின் உதவியுடன் அடைக்கலமளித்தார். அந்த சங்கமானது ஆதரவற்ற அனாதைக் குழந்தைகள், மனநலம் குன்றிய சிறுவர்கள், வீட்டைவிட்டு வெளியேறிய அனாதைப் பெண்களுக்குப் புகலிடம் அளித்தது.

'சாரதா சதன்' 'இந்திய பெண்கள் சமாஜம்' ஆகியன முத்து லெட்சுமி அம்மையாரின் அரும்பணிகளாகும். 'இந்தியப் பெண்கள் சங்கம்' என்ற மாதர் அமைப்பு காரணமாக உருவாக்கப்பட்ட பல்வேறு அமைப்புகளுள் அவ்வை இல்லம் என்பது முக்கியமான தொன்றாகும். அதேபோல் முஸ்லீம் பெண்கள் நிறுவனம் என்னும் அமைப்பும் அவரால் உருவாக்கப்பட்டதேயாகும். 1930ல் முத்து லெட்சுமி ரெட்டியால் உருவாக்கப்பட்ட 'அவ்வை இல்லம்' ஆற்றி வரும் அரும்பணிகள் போற்றுதலுக்குறியதாகும். வறுமை மற்றும் ஏழ்மை காரணமாக குப்பைத்தொட்டிகளில் வீசப்படும் குழந்தைகள், சமூகக் கொடுமைகளுக்கு அஞ்சி, வஞ்சிக்கப்பட்ட பெண்கள் தாம் பெற்ற குழந்தைகளை கொன்றுவிடுவது போன்றவற்றைத் தவிர்க்க அவ்வமைப்புதனை உருவாக்கினார். அது சாந்தோமில் உருவாக்கப்பட்டது. பின்னர் ஆதரவளித்தது. பள்ளியொன்றும் உருவாக்கப்பட்டது. அவ்வை இல்லப் பெண்களுக்கு மணமகனைத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்யும் பொறுப்பினையும் அது மேற்கொண்டுள்ளது.



சகோதரி சுப்புலட்சுமியால் இளம் விதவைப் பெண்களுக்கு ...வியளித்து வாழ வகை செய்ய எழும்பூரில் ஏற்படுத்தப்பட்ட ...த்துவ நிலையத்தில் முத்துலெட்சுமி ரெட்டி கௌரவ டாக்டராக பணி ...ற்றினார். திருவான்மியூருக்கு அருகில் இருந்த மக்களுக்கு நலவாழ்வுப் ...களைப் பற்றிய செய்திகளை எடுத்துக் கூறும் வழியையும் மேற் ...ண்டார். இந்தியா மட்டுமில்லாமல் இலங்கையிலும் பெண்கள் துயர் ...டைக்க முயற்சி மேற்கொண்டார். இலங்கை இளம் பெண்கள் ...றிஸ்துவ அமைப்பு (Young Women Christion Association) மூலம் ...லங்கைவாழ் இந்தியப் பெண்களின் இழிநிலைப் பற்றி விளக்கினார். ...னால் அங்கு அவருக்கு கடும் எதிர்ப்பு காணப்பட்டது. அமெரிக்காவில் ...டைபெற்ற உலகமகளிர் மாநாட்டில் (World Women's Conference) இந்தியா சார்பில் பங்கேற்று பெண்கள் நிலையைச்சுட்டிக்காட்டினர்.

1927 செப்டம்பர் மாதத்தில் முதன்முறையாக காந்தியடிகளைச் ...ந்தித்தார். குழந்தை திருமண ஒழிப்பு, திருமண வயதை உயர்த்துதல், பெண்களுக்குத் தமது கணவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றுத்தருதல், பலதார மணமுறை ஒழிப்பு, பெண்கல்வி ஆகியவற்றிற்கு அண்ணலின் ஒத்துழைப்பை வேண்டினர். இவ்வாறு பெண்களின் மேம்பாட்டிற்கு பலவழிகளிலும் செயல்பட்ட டாக்டர். முத்துலட்சுமி அம்மையார் கீழ்கண்ட பல நூல்களையும் எழுதி வெளியிட்டார். Care of ...reganant women, Infant feeding, Infant Mortality in India, Women's work in ...adras, My experience as Legislator, Mrs. Margrat Coussion's work in India, ...dian women's Franchise, Evils of Child Marriage, Why should Devadasi ...stem in Hindu Temples by abolished?, மற்றும் Cancer and its pervention ஆகிய நூல்களை எழுதினார்."

இந்தியர்களுக்கு நகராட்சிகளிலும் மற்றும் சட்டமன்றங்களுக்கும் பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டுமென்றார் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள கஸ்தூரிபா மருத்துவமனை அவருடைய நினைவுச் சின்னமாகும். அவருடைய அரும் முயற்சி காரணமாக மகப்பேறு மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கெனத் தனிப்பட்ட பிரிவுகள் உருவாக்கப்பட்டன. தல அமைப்புகளாலும், நகராட்சிகளாலும் நடத்தப்பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு முறையான மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கூறுறினார். அவருடைய பெருமுயற்சிகளில் முக்கியமானது சட்டம் மூலம் தேவதாசி முறைக்கு முற்றுப்புள்ளி வைத்ததேயாகும். அவருடைய தனித்த ஆற்றல் காரணமாகவே பலதாரமண எதிர்ப்பு சட்டவரைவு சட்டமாக்கப்பட்டது.

பல பணிகளிலும் அவர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டாலும் அவருடைய அறிவாற்றல் கணினியின் தன்மைகளைக் கொண்...

தாயிருந்தது. 1930ல் அவரது முயற்சி காரணமாகவே விபச்சார ஒழிப்புக் கான சட்டம் ஏற்படுத்தப்பட்டது. அவருடைய பெருமுயற்சியால்தான் முஸ்லீம் பெண்களுக்கான விடுதியும், ஹரிஜனப் பெண்களுக்கான உபகாரத் தொகைகளும் தரப்பட்டன. ஆண் பெண்களுக்கான திருமண வயது முறையே 21 மற்றும் 16 ஆக அமைதல் வேண்டுமென்பதற்கான சட்டம் 1928ல் இயற்றப்பட்டது. அவரால் புற்றுநோய் ஒழிப்புக்கான நிதி திரட்டப்பட்டது. 1932ல் இலட்சக்கணக்கில் பணம் சேகரிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டது.

1919-ல் வெளியான மாண்டேகு-செம்ஸ்போர்டு அறிக்கை காரணமாக உருவாக்கப்பட்ட ஹார்டாக் குழு (Hartog Committee) வில் இடம் பெற்ற ஒரே பெண்மணியான அவர் பெண்கல்வியைப் பரப்ப வேண்டு மென்ற கருத்தை வற்புறுத்தினார். குழந்தைகள் உதவிச் சங்கத்தின் அமைப்பாளரான அவர் அவ்வமைப்பின் கௌரவச் செயலராகவும் திகழ்ந்தார். லாகூரில் 1930ல் நடைபெற்ற ஐந்தாவது அகில இந்திய பெண்கள் மாநாட்டின் தலைமைப் பொறுப்பினையும் ஏற்றிருந்தார். 1935ஆம் ஆண்டு வரை அகில ஆசியகுழுவின் தலைவராகவும் செயல் பட்டார். 1931 முதல் 1940 வரை 'ஸ்திரிதர்மம்' என்னும் இதழின் ஆசிரியராகச் செயல்பட்டார்.

பலவழிகளில் பெண்கள் முன்னேற்றம் பற்றிய சீர்திருத்தவாதியாகிய முத்துலட்சுமி ரெட்டி பலருக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார். அவர் ஆற்றிய அருஞ்செயல்களுக்காக 1956ல் பத்மபூஷன் என்ற பட்டத்தைப் பெற்றார். பலரிடமும் பணம் வசூல் செய்து இல்லங்கள் பலவற்றை அமைத்தார். எளிமை, நேர்மை, கட்டுப்பாடு, திறமை போன்றவை அவருடைய குணநலப்பண்புகளாகும். உழைப்பின் மேன்மை, அச்சமின்மை, விடாமுயற்சி ஆகியன அவருடைய சொத்துக்களாயிருந்தன. அவருடைய பணிகள் அனைத்தும் காந்தியக் கோட்பாடுகளைப் பிரதிபலித்தன. டாக்டரம்மா என்று அழைக்கப்பட்ட முத்துலெட்சுமி தனது எண்பத்தி இரண்டாம் வயதில் 1968, ஜூலை 22-ல் இவ்வுலக வாழ்வினை நீத்தார்.

## 11. ருக்மணி அருண்டேல்

பரத நாட்டியம் கற்க விரும்புகிறவர்களுக்கு அடையாறு கலாக்ஷேத்ராதான் கவனத்திற்கு வரும் என்றால் தவறல்ல. இதை நிறுவியவர் ருக்மணி தேவி. அவர் ஒரு புரட்சிப் பெண்மணி.

இவர் நீலகண்ட சாஸ்திரி-சேஷம்மாள் தம்பதியருக்கு மகளாக 1904-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பிறந்தார். இவருடன் உடன் பிறந்தவர்கள் ஏழு பேர். பொதுப் பணித்துறையில் என்ஜினீயராகப் பணியாற்றியவர் நீலகண்ட சாஸ்திரி. அவர் தன் பணியிலிருந்து ஓய்வுபெற்றபின்,



... அடையாறில் பிரம்ம ஞான சபை எதிரே குடியேறினார். ... ஞான சபையின் பணிகளில் ஈடுபாடு கொண்டார்.

...:

பிரம்ம ஞான சபையின் தலைவியாக அன்னி பெசன்ட் அம்மையார் ...ந்தார். அவருடைய பணிகளில் முக்கிய பங்கு வகித்தவர் ஆங்கி... டாக்டர் ஜோசப் அருண்டேல். நீலகண்ட சாஸ்திரியின் குடும்பத்தி... அன்னி பெசன்ட் அம்மையாருடனும் அருண்டேலுடனும் ...கிப் பழகும் வாய்ப்புகள் ஏற்பட்டன. நீலகண்ட சாஸ்திரி நிய... காலமாக, அவர் குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார் அருண்டேல்.

ருக்மணி தேவியின் அழகாலும், அறிவாலும் ஏற்கனவே கவரப்... அருண்டேல், அவரை மணந்து கொள்ள விரும்பினார். தன் ...த்தை மனந்திறந்து வெளியிட்டார்.

ருக்மணி ஆச்சாரமான பிராமண குடும்பத்துப் பெண்ணாக ...ம், உறவினர்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் அருண் ... மணக்கச் சம்மதம் தந்தார். இதில் ஆச்சரியமான விஷயம் என்ன ...றால் 16 வயதே ஆகியிருந்த ருக்மணி, நாற்பது வயதான அருண் ... மணக்க சம்மதித்த தான். அதற்குக் காரணம், அருண்டேலின் ...ண்புகள். அவர் தன்னிடம் கொண்டிருந்த தூய அன்பு ஆகியவை ...

### ...க்கலைஞராக ருக்மணி அருண்டேல்:

திருமணத்திற்குப் பின் கணவரின் பணிகளுக்கு உறுதுணையாக ...ந்தார் ருக்மணி. பிரம்ம ஞானசபையின் பணிகளுக்காக ...ம்பதிகள் உலகின் பல்வேறு நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் ...கொண்டனர். அப்படி ரஷ்யாவிற்குச் சென்றிருந்த போது, ...லோவா என்ற ரஷிய நடனக் கலைஞரைச் சந்திக்கும் வாய்ப்பு ...ட்டது.

ரஷியாவின் பாலே நடனம், ருக்மணியை வெகுவாகக் கவர்ந்... அந்த நடனத்தைக் கற்கத் தொடங்கினார். இவருக்கு நடனக்கலை... ...ந்த ஆர்வத்தை அருண்டேல் பாராட்டினார். சென்னை திரும்பிய... சில பரத நாட்டிய நிகழ்ச்சிகளைப் பார்த்தார்; தானும் அந்தப் ...ப நடனத்தைக் கற்க விருப்பம் கொண்டார்.

அந்தக் காலத்தில், பரதநாட்டியத்தை தேவதாசி என்ற குறிப்... சமூகத்தினர் மட்டுமே ஆடி வந்தனர். வேறு சமூகத்தினர் நடனம் ...த்தைத் தவறாகவே கருதினர். நாட்டியம் மீது கொண்ட ஆர்வத்தால் ... அதை இலட்சியம செய்யவில்லை. சென்னை ... ...ல் நர்த்தகியாக விளங்கிய கவுரி அம்மாளிடம் ...

பரத நாட்டியக் கலையில் விற்பன்னராகத் திகழ்ந்த மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடமும் நடனம் கற்றார்.

1935-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், அடையாறு பிரம்ம ஞான சபைக் கூட்டத்தில் ருக்மணி தேவியின் நடன அரங்கேற்றம் நடை பெற்றது. தேவதாசி அல்லாத பெண், பரதநாட்டியம் ஆடுவது அதுவே முதல் தடவை. அதோடு நடன அரங்கேற்றத்தின்போது ருக் மணிக்கு வயது 31.

**கலாஷேத்ரக நாட்டியக் கல்லூரி :**

அதற்குப் பிறகு பரதநாட்டியத்திற்குப் புதிய மெருகு கொடுக்க ஆரம்பித்தார். மேடை அலங்காரத்திலும், நடன உடையிலும் புதுமை களைப் புகுத்தினார். வெறும் நடனங்களோடு அல்லாமல், நாட்டிய நாட கங்களையும் அறிமுகப்படுத்தினார். ருக்மணியின் நடனங்களில் இருந்த புதுமை, பொதுமக்களைக் கவர்ந்தது. நடனம் ஆடுவது இழிவானது என்று நினைத்திருந்தவர்கள் அந்த நினைப்பிலிருந்து மாறினர். எல்லாத் தரப்பினரும் நடனம் பயில ஆர்வம் கொள்ள ஆரம்பித்தனர்.

இதனால் உற்சாகம் கொண்ட ருக்மணி பிரம்ம ஞானசபையின் வளாகத்திலேயே கலாஷேத்ராநாட்டியக் கல்லூரியை 1936-ஆம் ஆண்டில் தொடங்கினார். இங்கு உருவான நடனக் கலைஞர்கள் ஏராளம்.

1945-ஆம் ஆண்டு ஏற்பட்ட அருண்டேலின் மறைவு, ருக்மணியை வெகுவாக பாதித்தாலும், நடனக் கலையை பரப்புவதுதான் தன் கடமை என்பதை உணர்ந்து, கலாஷேத்ராவின் வளர்ச்சிக்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்தார். கலாஷேத்ராவின் புகழ் உலகம் முழுவதும் பரவியது. சென்னைக்கு வரும் வெளிநாட்டுத் தலைவர்கள், கலாஷேத்ரா வுக்கு வருகை தந்து நடன நிகழ்ச்சிகளைப் பார்ப்பதைத் தங்கள் அலுவல் ச ...ல் ஒன்றாக வைத்திருந்தனர்.

இந்தியாவில் உள்ளவர்கள் மட்டுமல்லாது, அமெரிக்கா, இங்கி லாந்து, ரஷியா, சீனா உள்பட பல வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும் கலாஷேத்ராவில் நடனம் பயிலுவது என்பது அதற்குப் பெருமை அளிக் கிறது.

பிராணிகளிடம் மிகவும் அன்பு கொண்டவர் ருக்மணி. அதனா லேயே டெல்லி ராஜ்ய சபை உறுப்பினராக இருந்தபோது, 'விலங்குகள் நல வாரியம்' அமைக்கக் காரணமாக இருந்தார். 'பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம்' கொண்டுவரப் பாடுபட்டு, அந்தச் சட்டம் நிறைவேறச் செய்தார்.

1986-ஆம் ஆண்டு தொடக்கத்தில் அவர் கேரளாவில் சுற்றுப் பயணம் செய்து விட்டுத் திரும்பிய போது, உடல்நலக் குறைவு ஏற்பட் டது. 1986-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் காலமானார்.



...நாட்டிய உலகில் சரித்திரம் படைத்த, சாதனைப் பெண்மணி ...ருக்மணிதேவி அருண்டேலின் பெருமையைப் பறை சாற்றும் ...வுச்சின்னமாக 'கலாஷேத்ரா' விளங்குகிறது.

## ...டாக்டர் எஸ். தர்மாம்பாள்

படிப்பு, பதவி, பணம், அந்தஸ்து இவை எதுவுமே இல்லாமல் ...ள் பணியாற்ற முடியுமா? முடியும். மக்களுக்குச் சேவை செய்ய ...ிமானம் என்ற ஒரு குணம் போதும் என்று நிரூபித்தவர் டாக்டர் ... தருமாம்பாள். தனது அறிவுக்கண் திறந்த காலத்தில் இருந்து இறுதி ...க் கண் மூடும்வரை மக்களுக்காக ஓடி ஓடி உழைத்தவர். பிரதிபலன் ...பார்க்காத ஒரு தூய தொண்டுள்ளம் எப்படி இருக்கும் என்பதற்கு ...ரணமாக வாழ்ந்து காட்டியவர்.

கலையையும் வீரத்தையும் விவசாயத்தையும் முக்கண் களாகக் ...ண்ட தஞ்சை மாவட்டத்தில் உள்ள அழகிய சின்னஞ்சிறு கிராமம் ...ந்தட்டாங்குடி. இங்கு வேளாண் செட்டியார் மரபிலே உதித்த ...நாதன் துணிக்கடை நடத்தி வந்தார். பெரும் பணக்காரராக இல்லா ...டாலும் நடுத்தரத்தை தாண்டிய வசதி படைத்தவர். சாமி நாதனுக்கும் ...யார் என்ற பாப்பம்மாளுக்கும் மகளாகப் பிறந்தவர் தான், நமது ...மாம்பாள். பெற்றோர் இட்ட பெயர் சரஸ்வதி. தஞ்சைப் பகுதி ...ளிடையே ஒரு வழக்கம் இருந்தது. ஒருவருக்கு இரு பெணர் வைத்து ...ழக்கும் வழக்கம் அது. அம்மையார் பூர்வீகம் கருந்தட்டாங் குடியாக ...ந்தாலும் பிறந்தது திருவையாறு. இப்பகுதியில் தருமாம்பாள் என்ற ...யர் பரவலாக இருந்தது. அதனால் இந்தப் பெயரே நிலைத்து நின்று ...டது.

அம்மையார் இலக்குமி என்ற வளர்ப்பு தாயாரிடம் வளர்ந்தார். ...தை சாமிநாதன் வணிகராக இருந்தபோதும் மிகச் சிறந்த தமிழ்ப் ...றாளராக இருந்தார். கரந்தைத் தமிழ் சங்கத்தோடு தொடர்பு ...ண்டிருந்தார். அதனால், அம்மையாரும் நல்ல தமிழ் பற்றாளராகவும் ...யுணர்வு மிக்கவராகவும் வளர்ந்தார்.

என்ன காரணத்தாலோ அம்மையார் பள்ளி சென்று படிக்க ...லை. ஆனாலும் தானாகவே கற்றுக்கொள்ளும் ஆற்றல் அவரிடம் ...றயவே இருந்தது. தமிழ்மீது கொண்ட பற்றின் காரணமாக வேட்கை ...காருண்யம் சுப்பிரமணியனாரிடமும் இருநாவுக்கரசு முதலியாரி... ...ம் பண்டித நாராயணி அம்மையாரிடமும் தமிழ் கற்றார். அதே ...லத் தெலுங்கில் எழுதவும், பேசவும் கற்றுக் கொண்டார். ...கிலத்திலும், மலையாளத்திலும் பேசும் ஆற்றலை வளர்த்துக் ...ண்டார்.